

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஜனவரி 01, 2015 | புரட்சி 13 | முழக்கம் 51 | விலை: ரூ.3.00


# ‘பாரத ரத்னா’ விருது பெறும் மாளவியா–வாஜ்பாய் அரசியல் பின்னணி என்ன?

மோடியின் ஆட்சி மதன் மோகன் மாளவியா–வாஜ்பாய் இருவருக்கும் நாட்டின் உயர் விருதாக கருதப்படுகிற ‘பாரத ரத்னா’ விருதுகளை வழங்க முடிவு செய்திருக்கிறது. இவர்கள் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனியவாதிகள் என்ற அடையாளத்தோடு வாழ்ந்தவர்கள் என்பதைத் தவிர வேறு சாதனைகள் ஏதும் நிகழ்த்தாதவர்கள். மதச்சார்பற்ற நாடு என்று கூறப்படும் இந்தியாவில் ஆட்சி அதிகாரம் முறைகேடாக பயன்படுத்தப்படுவதற்கு இந்த அறிவிப்புகளும் ஒரு சான்று. வாஜ்பாய்– மதன் மோகன் மாளவியாவின் பின்னணிகள் என்ன?

## வாஜ்பாய் யார்?

‘ஜென்டில்மேன் வாஜ்பாய்’ என்று சில தமிழ் நாட்டு தலைவர்கள் அவரைப் புகழ்ந்தாலும் வாஜ்பாய் தீவிர மதவெறியர் என்பதே அவரது வரலாறு.

சில சான்றுகள்:

1. பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முதல் நாள் லக்னோவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வாஜ்பாய் இவ்வாறு பேசினார்:

   “நாளை அயோத்தியில் என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது. கூரிய கற்கள்மீது அமர்ந்து கொண்டு, பக்திப் பாடல்களைப் பாட முடியாது. மண்ணைச் சமன்படுத்தி அமர்வதற்கு ஏற்றபடி சமன் செய்ய வேண்டும்.” இதன் பொருள் என்ன? மசூதியை இடித்து தரைமட்டமாக்கி சமன் செய்ய வேண்டும் என்பதுதானே!

   மசூதி இடிப்புக்குப் பிறகு, ‘அவுட் லுக்’ பத்திரிகை அவரை சந்தித்து இந்தப் பேச்சு பற்றி கேட்டது. “நான் பேசியது உண்மைதான். அது நகைச்சுவைக்காக பேசப்பட்டது” என்றார், வாஜ்பாய்.

   அடுத்த மதக்காரரர் வழிபாட்டுத் தலத்தை இடித்து ‘சமன் செய்ய’ சொல்வது வாஜ்பாய்க்கு நகைச்சுவை பேச்சு போலும்!

2. குஜராத்தின் மோடி ஆட்சி 2002இல் இஸ்லாமியர் இனப்படுகொலையை நடத்தியபோது அன்றைய குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன், பிரதமர் வாஜ்பாயுடன் அவசரமாக தொடர்பு கொண்டு, உடனே குஜராத்துக்கு இராணுவத்தை அனுப்பி, கலவரத்தைத் தடுக்க வேண்டும் என்று கேட்டார். வாஜ்பாய் அந்தக் கோரிக்கையை உதறித் தள்ளினார்.

3. பிரதமராக இருந்தபோது அமெரிக்காவுக்கு பயணம் போனபோது அங்கு ஸ்டேட்டன் தீவில் விசுவ இந்து பரிஷத் நிகழ்ச்சியில் பேசும்போது இப்படி கூறினார்: “ஆர்.எஸ்.எஸ்.சில் இருப்பதற்கு நான் பெருமைப்படுகிறேன். இப்போது எங்கள் ஆட்சிக்கு பெரும்பான்மை இல்லை. இருந்திருக்குமானால் அயோத்தியில் இராமர் கோயிலைக் கட்டியிருப்போம்” என்று பேசினார்.

4. ஆர்.எஸ்.எஸ். அதிகாரபூர்வ ஏடான ‘ஆர்கனைசரில்’ வாஜ்பாய், ‘ஆர்.எஸ்.எஸ். என் ஆன்மா’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதினார் (7.5.1955). அதில் முஸ்லிம்களை வழிக்குக் கொண்டு வர மூன்று வழி முறைகளை முன் வைத்தார். இந்துக்களை அணி திரட்டி, முஸ்லிம்கள் அடையாளங்களை இழக்கச் செய்து அவர்களையும் செரிமானம் (Assimilation) செய்ய வேண்டும் என்றும், முஸ்லிம்கள் இதற்கு ஒத்து வரா விட்டால், நாட்டின் ‘குடிமக்கள்’ என்ற நிலையிலிருந்து ஒதுக்கிட வேண்டும் என்றும் எழுதினார்.

5. மோடியின் குஜராத்தில் டாங்கல் மாவட்டத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக மதவெறியர்கள் கலவரம் செய்தபோது அங்கு நேரில் பார்வையிடச் சென்ற பிரதமர் வாஜ்பாய், கலவரத்தைக் கண்டிக்கவில்லை. மாறாக, மதமாற்றம் பற்றிய தேசிய விவாதம் தேவை என்று விவாதத்தைத் தொடங்கி வைத்தார்.

6. பாபர் மசூதி இடிப்பு தொடர்பாக நியமிக்கப்பட்ட லிபரான் ஆணையத்தில் மசூதி இடிப்பு குற்றவாளிகள் பட்டியலில் இடம் பெற்றிருந்தவர் வாஜ்பாய்.

7. மொரார்ஜி பிரதமராக இருந்த ஜனதா ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டுத் துறை அமைச்சராக இருந்தார் வாஜ்பாய். அப்போது யூதவெறி பிடித்த இஸ்ரேல் நாட்டுடன் தூதரக உறவு இந்தியாவுக்கு இல்லை. அதையும் மீறி இஸ்ரேல் நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த ‘மோஷி தயான்’ என்பவரை ரகசியமாக இந்தியாவுக்கு வரச் சொல்லி சந்தித்தவர் வாஜ்பாய். மோஷி தயான் மாறு வேடத்தில் போலி ‘கடவுச் சீட்டில்’ இந்தியாவுக்கு வந்து, வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த வாஜ்பாயை சந்தித்துப் பேசினார். முதலில் மறுத்த வாஜ்பாய், மொரார்ஜி பதவி விலகிய பிறகு சந்தித்ததை ஒப்புக் கொண்டார்.

8. 1942இல் ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தையொட்டி ம.பி. மாநிலம் பட்டேசுவரத்தில் கலவரம் வெடித்தது. இதில் வாஜ்பாய், தனது சகோதரர் பிரேம் பிகார் லால் பாஜ்பாய் என்பவருடன் கலந்து கொண்டார். அப்போது கைது செய்யப்பட்ட வாஜ்பாய், சிறையிலிருந்து தன்னை விடுதலை செய்து கொள்வதற்காக உள்ளூரில் ‘கலவரக்காரர்கள்’ பெயர்களை காவல் துறைக்கு காட்டிக் கொடுத்து விட்டு நீதிபதிக்கு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து விடுதலையானார். (வாஜ்பாய் எழுதித் தந்த மன்னிப்பு கடிதத்தை ‘பிரன்ட் லைன்’ ஏடு ஆவணக் காப்பகத்திலிருந்து தேடிப் பிடித்து வெளியிட்டது) வாஜ்பாய் சகோதரர் பீகார் லால் பாஜ்பாயும் ம.பி. அரசே நடத்திய ‘சந்தேஷ்’ எனும் பத்திரிகையில் இது உண்மைதான் என ஒப்புக் கொண்டு கட்டுரை எழுதினார் (12.5.1973 இதழ்).

   இவருக்குத்தான் இப்போது ‘பாரத ரத்னா’ விருதாம்!

## மதன் மோகன் மாளவியா – யார்?

- சங் பரிவாரத் தத்துவங்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் பண்டித மதன் மோகன் மாளவியா என்ற பார்ப்பனர். நான்கு முறை காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.
- 1946இல் அவர் மரணமடையும்வரை, காங்கிரஸ் கட்சிக்குள் இருந்து கொண்டே இந்து தர்மத்தையும், சமூகத்தைக் கூறுபோடும் கொடிய வர்ணாஸ்ரம தத்துவத்தையும் காப்பாற்றுவதற்காகப் பாடு பட்டவர்.
- ஆர்.எஸ்.எஸ். அமைப்பு, வட மாநிலங்களில் வேரூன்றி வளர்வதற்கு, ஆரம்ப காலங்களில் பல உதவிகளைச் செய்தவர்.
- இவரால் தொடங்கப்பட்டதுதான் காசியில் உள்ள ‘பனாரஸ் இந்தப் பல்கலைக்கழகம்’. இதற்காக, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடமிருந்தும், சமஸ்தான மன்னர்களிடமிருந்தும், கோடிக்கணக்கான ரூபாய் நன்கொடை திரட்டினார். காங்கிரசில் இருந்து கொண்டே, உ.பி.யில் ‘பாரத தர்ம மகா மண்டலம்’ என்ற வைதீக இந்து மத அமைப்பின் தலைவராகவும் இவர் இருந்தார். மற்றொரு ‘தேசிய’த் தலைவரான லாலா லஜபதிராயுடன் சேர்ந்து, ‘இந்து மகாசபை’ என்ற அமைப்பைத் துவக்கிவரும் இவர்தான்.
- இந்தியர்களுக்குச் சுயாட்சி வழங்குவது பற்றி விவாதிக்க, பிரிட்டிஷ் ஆட்சி இலண்டனில் கூட்டிய வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்றவர் மதன் மோகன் மாளவியா. ‘வர்ணாஸ்ரம’த்தின் படி - ஒரு பார்ப்பனர் கடல் தாண்டி பயணம் செய்யக் கூடாது. அதன் காரணமாகத்தான் இலங்கையில் உலக இந்து மத மாநாட்டில் பங்கேற்க காஞ்சிபுரம் மூத்த சங்கராச்சாரி அழைக்கப்பட்டபோது, அவர் கலந்து கொள்ள மறுத்துவிட்டார்.
- பண்டித மதன் மோகன் மாளவியாவுக்கு ‘வர்ணாஸ்ரமத்தையும்’ மீறக் கூடாது. அதே நேரத்தில் - இலண்டன் வட்ட மேஜை மாநாட்டில் பங்கேற்று, தாழ்த்தப்பட்டவர்களுக்கான தனித் தொகுதி உரிமையைத் தரக்கூடாது என்று வாதிடவும் வேண்டும் என்ற துடிப்பு. இதற்காகக் கொஞ்சம் இந்திய மண்ணையும், கங்கை நீரையும் அவர் தன்னுடன் எடுத்துச்சென்றார். கடல் தாண்டிப் போனாலும் - மண்ணையும் கங்கை நீரையும் உடன் எடுத்துச் செல்வதால், கடல் தாண்டிப் போவதாக அர்த்தமாகாது என்று ‘வியாக்யானம்’ செய்தார் மாளவியா! இதன் காரணமாக, அன்றைக்குக் காங்கிரஸ் வட்டாரத்திலேயே கேலி செய்யப்பட்டார்.
- விடுதலை பெற்ற இந்திய தேசம் இந்துக்களுக்கான தேசியமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியவர். தான் உருவாக்கிய பனாரஸ் இந்து பல்கலைக் கழகத் தில் கோல்வாக்கர் ஆணையை ஏற்று ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளை மாணவர்களிடம் தொடங்கியவர்.

இவருக்கு ‘பாரத ரத்னா’ பட்டமாம்!

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வங்கிக் கணக்கு**

கரூர் வைஸ்யா வங்கி, அடையாறு கிளை ‘கரன்ட்’ அக்கவுண்ட்.
எண் : 1257115000002041

## ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ : கழகத் தோழர்களுக்கு...

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டுக்கு உறுப்பினர்கள் சேர்க்கும் இயக்கம் டிசம்பரில் நிறைவடைகிறது.

ஜனவரி 15 முதல் ‘புரட்சிப் பெரியார் முழக்கத்தின்’ இவ்வாண்டுக்கான முதல் இதழ் தொடங்குகிறது.

எனவே ஜனவரி 15 ஆம் தேதி இதழ் உறுப்பினர்களுக்கு கிடைத்திடும் வகையில் முகவரிப் பட்டியலையும் கட்டணத் தொகையையும் சேர்த்து அனுப்பிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இது குறித்து அலை பேசியிலோ, குறுஞ் செய்தி வழியாகவோ தோழர்கள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தோழமையுள்ள

இரத்தினசாமி
(சந்தா சேர்ப்பு பொறுப்பாளர்)
திராவிடர் விடுதலைக் கழகம்
பேசி : 984271244

## முற்போக்கு பேசினாலும் ஜாதிப் பெருமையை விடாதவர்கள்

# பார்ப்பனர்களில் ஏன் ஒரு ‘வால்டேர்’ உருவாகவில்லை?

*மதச்சார்பின்மை பேசிக் கொண்டு ‘இந்துத்துவா’ எதிர்ப்பாளர்களாக வலம் வரும் பார்ப்பனர்களிடமும் அவர்களின் பார்ப்பனியப் பிறவி பெருமிதம் அடிநாதமாக இயங்கிக் கொண்டிருப்பதை விவரிக்கிறது இக்கட்டுரை, ‘அவுட் லுக்’ இதழில் (டிச.1) எஸ்.ஆனந்த் எழுதிய கட்டுரையின் தமிழ் வடிவம் இங்கே தரப்படுகிறது.*

பார்ப்பனர்களிலேயே தங்களை மிகவும் மேலாகக் கருதிப் பெருமைப்படுவோர் “கவுத் சரஸ்வதி பிராமணர்” என்ற பார்ப்பனப் பிரிவினர். தங்களின் பிறவிப் பெருமைக்கு ஒரு ‘கற்பனை’யை வரலாறாக அவர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். வேதத்தில் கூறப்படும் சரஸ்வதி ஆறு ஓடிய காலத்திலேயே இவர்கள் ரிக் வேதத்தை ஓதியவர்களாம்! (இப்போது அப்படி ஒரு ஆறு கிடையாது. ஆனாலும் பூமிக்கடியில் அது ஓடிக் கொண்டிருப்பதாக பார்ப்பனர்கள் கூறுகிறார்கள்.) விஷ்ணு ‘பரசுராமனாக’ அவதாரம் எடுத்து வந்து சத்திரிய வம்சத்தையே 21 முறை தாக்கி பூண்டோடு அழித்து விட்டபோது, சத்திரியர்கள் இடத்துக்கு ‘சரசுவதி பிராமணர்கள்’ வருவார்கள் என்று அறிந்த ‘பரசுராமன்’ அவர்களுக்கான ‘புண்ணிய பூமி’யை சகாயாத்தி மலைகளோடு உருவாக்கி அவர்களை குடியமர்த்தினான் என்று பெருமை பேசுகிறார்கள். இது ஏனைய பார்ப்பனர்களுக்கே கிடைக்காத ‘சரசுவதி பிராமணர்களுக்கு’ மட்டுமே கிடைத்த தனி சிறப்பாம். மோடி அமைச்சரவை விரிவாக்கத்தில் சுரேஷ் பிரபு, மனோகர் பாரிக்கர் என்ற இரண்டு சரசுவதி பார்ப்பனர்கள் இடம் பெற்றவுடன், சர்தேசி என்ற சரசுவதி பார்ப்பனர் தனது வலைதளத்தில், சரசுவதி பார்ப்பனர்களின் வரலாற்றில் ஒரு பொன்னாள் என்று பூரிப்போடு பதிவுகளை போட்டார்.

இந்த சர்தேசி, ‘சி.என்.என்., அய்.பி.என்.’ தொலைக் காட்சியில் இருந்த போது, 2002 குஜராத் கலவரத்துக்கு மோடியை குறை கூறிப் பேசியதற்காக பதவி இழந்தவர். 2014 செப்டம்பர் 28இல் நியூயார்க் நகரில் மேடிசன் மைதானத்தில் மோடி ரசிகர்கள் பங்கேற்ற கூட்டத்தில் மோடி புகழ் பாடியதை விரும்பாமல் இவர் கோபமடைந்தபோது கூடியிருந்த கூட்டத்தின் கேலி கிண்டலுக்கு உள்ளானவர். ‘இந்துத்துவா’வை எதிர்ப்பவராக கருதப்படுபவர். “அப்படி எல்லாம் மதவெறி இருக்கக் கூடாது; மற்றவர்களையும் மதிக்க வேண்டும்” என்ற ‘தாராள சிந்தனை’யை தங்களது பொதுப் புத்தியில் ஏற்றிக் கொண்டவர்கள் உண்டு; இவர்கள் இந்துத்துவா கொள்கை சரியானது அல்ல என்று கூறிக் கொண்டே ‘இந்து தர்மம்’ உயர்வானது என்று பெருமைப்படுவார்கள். இதேபோல் பொதுப் புத்தியில் படிந்து நிற்கும் மற்றொரு கருத்து - சாதி தலைதூக்குவதற்குக் காரணமே இடஒதுக்கீடு கொள்கைதான் என்பதாகும். இவர்கள் ஜாதி விஷத்தை முறிக்க அம்பேத்கர் முன் வைத்த நோய் தீர்க்கும் மருந்தான இடஒதுக்கீட்டுக் கொள்கையை எதிர்ப்பார்கள். சரசுவதி பார்ப்பனர்களுக்கு மத்திய அமைச்சரவையில் இடம் கிடைத்து விட்டது என்றவுடன் துள்ளிக் குதித்து, ‘பிறவிப் பெருமை’ பேசும் சர்தேசியின் இந்துத்துவா எதிர்ப்பும் இந்த ‘ரகம்’ தான். தனது ஜாதிக்காரர்கள் அமைச்சர்களானவுடன் ஆனந்தக் கூத்தாடும் இவருக்கு சரஸ்வதிப் பார்ப்பன நடிகை தீபிகா படுகோன் படங்களைப் பார்ப்பது மட்டுமே பிடிக்கும்போலும். கத்ரினா கைஃப் நடித்தப் படம் என்றால் கசக்குமோ! கிரிக்கெட் விளையாட்டுக்காரர், சரசுவதி பார்ப்பனரான சச்சின் டெண்டுல்கர் சாதனையை அந்த ஜாதியல்லாதவர் முறியடித்து விட்டால், இவரால் தாங்கிக் கொள்ள முடியாது என்பாரா? அதேபோல் பெரும் தொழிலதிபர் விஜய் மல்லையா செயல்கள் குறித்த தனது கருத்துகளை அதன் நிறைகுறைகளைப் பார்க்காமல், தனது ஜாதிக்காரர் என்ற கண்ணோட்டத்தோடுதான் பார்ப்பாரா? நமக்குப் புரியவில்லை. ஊடகங்களில் முடிவெடுக்கும் அதிகாரம் படைத்தவர்களாக 49 சதவீத அளவுக்கு பார்ப்பனர்களே இருக்கிறார்கள் என்றும் ‘தலித், ‘பழங்குடியினர்’ ஊடகங்களில் அதிகாரமிக்கவர்களாக இல்லை என்றும் 2006ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது. ஒரு ஊடகவியலாளர் என்ற முறையில் சர்தேசி இதுபற்றி எப்போதாவது கவலைப்பட்டிருப்பாரா?

“நான் ஒரு இந்தியன்; நான் ஒரு கோவாக்காரன்” என்று பெருமைப்படுவதைப் போன்றது அல்ல ‘சரசுவதி பிராமணர்’ என்பதற்கான பெருமை. ‘கோவா-இந்தியப்’ பெருமை என்பது இந்தப் பகுதியில் வாழும் அனைவருக்கும் பொதுவானது. ஆனால் ‘சரசுவதி பிராமணன்’ என்ற பெருமை எல்லோருக்கும் கிடைத்துவிடாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. அது அந்த ஜாதிக்கு மட்டுமே உள்ள பெருமை!

ஏனைய ஜாதிகளுக்கான அடையாளங்களுக்கும் பார்ப்பன ஜாதி அடையாளங்களுக்கும் வேறுபாடு உண்டு. பார்ப்பன ஜாதிக்கான அடையாளம் என்பது ஏனைய ஜாதிகளை ஒதுக்கி வைப்பதாகும். ஜாதியமைப்பு என்ற ஏணிப் படிக்கட்டு வரிசையில் மேலே உயரத்தில் உள்ள ஜாதிகள் பெருமைக்குரியதாகவும் கீழ் நோக்கியிருக்கும் ஜாதிகள் இழிவுக்குள்ளாவதும் தான் ஜாதியமைப்பின் கட்டுமானமாக உள்ளது. எனவே, மாயாவதிக்காகவும் மலம் எடுக்கும் இழிவுக்கு எதிராக இயக்கம் நடத்தும் பெஸ்வாடாவுக் காகவும் தலித் மக்கள் பெருமைப்படுவதும் சரசுவதி பார்ப்பனர்களான பாரிக்கரும், பிரபுவும் - மத்திய அமைச்சர்களாக முடிசூட்டப்பட்டதற்கு சர்தேசி பெருமையடித்துக் கொள்வதும் ஒரே படித்தானது அல்ல. பார்ப்பனர்களுக்கான பெருமைக்குள்யே கடவுள் அவர்களுக்காக தனித்துவமாக வழங்கியிருக்கிற ‘பிறவி உயர்வும்’ அடங்கியிருக்கிறது.

இந்தியாவில் தொலைக்காட்சியில் பிரபலமான ஒருவர், தனது ஜாதிக்காரர் அமைச்சராவதற்கு இப்படி பேரானந்தத்தை வெளிப்படுத்துவதுபோல், அமெரிக்காவில் ஒரு முன்னணி தொலைக்காட்சியின் இங்கிலாந்துக்காரர் ஒபாமா அமைச்சரவையில் தனது சொந்த நாட்டுக்காரருக்கு வாய்ப்பு

> **தேசத்தின் பெருமை வேறு; பார்ப்பனப் பெருமை வேறு!**

கிடைத்ததற்காகவோ, இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டுமானால், தனது நாட்டைச் சேர்ந்த எவருக்கும் வாய்ப்புகள் கிடைக்கவில்லையே என்று கவலையை வெளிப்படுத்த முடியுமா? என்று கற்பனை செய்து பாருங்கள். அப்படி எல்லாம் நடக்காது. ஆனால், இங்கே உள்ள பார்ப்பனர்கள் இப்படி எல்லாம் வெளிப்படுத்திக் கொள்வார்கள். 2013 ஆம் ஆண்டு ஜெய்ப்பூரில் நடந்த இலக்கிய விழாவில் அஷீஷ் நந்தி என்ற ‘அறிவு ஜீவி’ “பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் தான் அதிகமாக ஊழல் செய்கிறார்கள்” என்று வெளிப்படையாக பேசிவிட்டு, பிறகு மிக சாதாரண ஒரு வருத்தத்தைத் தெரிவித்துவிட்டு அவரால் கடந்து செல்ல முடிகிறது. (இதை நியாயப்படுத்தும் அவரது தீவிர ஆதரவாளர்கள்கூட இருக்கிறார்கள்)

ஆனால், ‘எப்படி வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் எங்களால் பேச முடியும்’ என்ற சர்தேசியின் இந்த ஆணவமான கருத்துகள், சமூகத்தின் பொதுப் புத்தியில் எந்த சலசலப்பையும் ஏற்படுத்திடவில்லை. ‘அது அப்படித்தான்; இதெல்லாம் தவறில்லை’ என்ற ஜாதி உணர்வில் ஊறிப்போன புரிதலோடுதான் இதையும் பார்க்கிறார்கள். பாதாள சாக்கடையை சுத்தப்படுத்துவதற்காக இறங்கி, அதற்குள்ளேயே மரணத்தைச் சந்திக்கும் சாக்கடைத் தொழிலாளர்கள் மரணங்களை எப்படி ஒரு பிரச்சினையாகவே சமூகம் கண்டு கொள்ளவில்லையோ, அதேபோல் ஜாதிப் பெருமையடிப்பதையும் இயல்பாகவே ஏற்கப் பழகிப் போய் விட்டோம். இங்கே இவை எல்லாம் அவமானத்துக்கோ, தலைகுனிவுக்கோ உரியவை அல்ல.

இரண்டாவதாக மற்றொரு சரசுவதி பார்ப்பனரைப் பற்றி பார்ப்போம். கிரிஷ் கார்னாட் என்ற இந்த சரசுவதி பார்ப்பனர், இலக்கியத்துக்கான ‘ஞான பீட விருது’ பெற்றவர். இவரது விரிவான பேட்டி 2013, செப்டம்பர் ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஏட்டில் வெளி வந்தது. அதில் 1970இல் வெளி வந்து பிறகு தடை செய்யப்பட்ட ‘சமஸ்காரா’ என்ற திரைப்படம் பற்றி தனது கருத்துகளை வெளியிட்டிருந்தார். இந்த நாவலை கன்னடத்தில் எழுதியவர் யு.ஆர். அனந்தமூர்த்தி என்ற பார்ப்பனர். இதை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தவர் ஏ.கே. இராமானுஜம் என்ற பார்ப்பனர். இவர், தாராள சிந்தனையுடைய மதச்சார்பின்மையாளர் என்று கருதப்படுபவர். இப்படி பார்ப்பனர்களின் கூட்டு முயற்சியிலான ஒரு திரைப்படம், ‘பார்ப்பன எதிர்ப்பை’ப் பேசுவது குறித்து கிரிஷ் கார்னாட்டிடம் கேட்கப்பட்டது. அந்தப் படத்தின் கதாநாயகன் பாத்திரம் பற்றி, கார்னாட் கட்டுரை எழுதியிருந்ததால் இந்தக் கேள்வி முன் வைக்கப்பட்டது. உடனே ஆத்திர உணர்ச்சியோடு அவர் அளித்த பதில், “கதையை எழுதியவர் ஒரு ‘பிராமணர்’; தயாரிப்பாளர் ஒரு ‘பிராமணர்’ அதேபோல் இந்தத் திரைப்பட உருவாக்கத்தில் தொடர்புடைய எல்லோருமே ‘பிராமணர்’தான். பிறகு ஏன், நாம் ‘பிராமண எதிர்ப்பு’ கருத்துகளை முன் வைக்க வேண்டும்?” என்று திருப்பிக் கேட்டார்.

இத்தனைக்கும் கார்னாட் நேரு தலைமுறையின் மதச்சார்பற்ற பார்ப்பனராக தன்னை அடையாளப்படுத்துபவர். பொதுவாகவே பார்ப்பனர்கள், பார்ப்பன எதிர்ப்புக் கருத்துகளை வெளிப்படுத்துவதை அவர்களின் இயல்பான உணர்வு தடுத்து நிறுத்துகிறது. அதற்குக் காரணம், மதச்சார்பின்மை பேசிக் கொண்டே ‘பிராமணராக’ இருக்க முடியும் என்பதுதான். மதச்சார்பின்மை பேசும் பார்ப்பனர்கள், நேருவை நோக்கி ஈர்க்கப்பட்டார்கள். (நேருவும் காஷ்மீர் சரசுவதி பார்ப்பனர்தான்) நேருவின் இடஒதுக்கீடு கொள்கைகளுக்கு தங்கள் ஆதரவைக் காட்டினார்களே தவிர, அம்பேத்கரோடு அதே கொள்கையை பகிர்ந்து கொள்ள தயங்கினார்கள். காரணம், அம்பேத்கர், ஜாதியை ஒழிக்க வேண்டும் என்றார். ரிக்வேதத்தில் இடம் பெற்றுள்ள நால் வர்ணத்தை நியாயப்படுத்தும் வர்ணாஸ்ரமம், ஒழுக்கமற்ற சமூக விரோத கிரிமினல் கோட்பாடு என்றார். எனவே இதை அவர்களால் ஏற்க முடியவில்லை. கார்னாட், சர்தேசி போன்றவர்கள் இப்படி, பார்ப்பன உணர்வில் நம்பிக்கையுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். இதற்குக் காரணம், ‘பிராமணர்’ என்ற அடையாளம் தங்களுக்கே உரிய தனித்துவமானது. அது மேலாண்மையானது என்ற நம்பிக்கைதான்.

மூன்றாவதாக ஒரு தமிழ் பார்ப்பனர் கதையைப் பார்ப்போம். அவர்தான் இராமச்சந்திர குகா. தேசிய வரலாற்று நூல்களின் ஆசிரியர். 2004 ஆம் ஆண்டு சி.இராஜகோபலாச்சாரி பற்றி அவர் எழுதிய கட்டுரை ‘சுராஜ்யா’ என்ற இணைய இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் தனது பார்ப்பனப் பெருமையை பச்சையாக அடையாளம் காட்டுகிறார். “ஒரு அரசியல் தலைவரின் மரணத்துக்காக முதல் முறையும் கடைசி முறையும் நான் கண்ணீர் விட்டு அழுதது, 1972 டிசம்பர் 26ஆம் தேதி இராஜகோபாலாச்சாரி இறந்தபோதுதான். என் கண்களில் கண்ணீர் உருண்டோடியது. காரணம் அப்போது மரணமடைந்த தலைவர் என்னுடைய தமிழ் ‘பிராமணர்’ சமூகத்தைச் சார்ந்தவர்” - என்று எழுதியிருக்கிறார். ஜாதி உணர்வு இங்கே ‘பெருமைகளோடு’ கைகோர்த்து நிற்கிறது. அதற்கு அடுத்த ஆண்டு பார்ப்பனிய எதிர்ப்பாளரான பெரியார் ஈ.வெ. ராமசாமி மரணமடைந்தார். அதற்காக குகா கலங்கவில்லை. எதிர்காலங்களில் மாயாவதியைவிட ஜெயலலிதாவுக்காகத்தான் குகாவின் இதயம் துடிக்கும் போலிருக்கிறது. ஜாதியப் பெருமைதான். ஜாதி வெறுப்புக்கு வழியமைத்துத் தருகிறது என்பதை உணராதவரை ஜாதி வேண்டவே வேண்டாம். அது தீங்கானது என்பதை உணராத வரை ஜாதிப் ‘பேய்’ விரட்டிக் கொண்டேதான் இருக்கும்; அது விடாது.

(3ஆம் பக்கம்)

# தேன் கனிக்கோட்டையில் எழுச்சியுடன் பொதுக் கூட்டம்






15-12-2014 அன்று மாலை 5-00 மணிக்கு, கிருட்டிணகிரி மாவட்டம், தேன்கனிக் கோட்டையில் திராவிடர் விடுதலைக் கழகப் பொதுக்கூட்டம், ‘பெரியார் யார்?’ என்ற தலைப்பில் மாவட்டப் பொருளாளர் தோழர் மைனர் (எ) வெங்கடகிரியப்பா தலைமையில் நடைபெற்றது.

ஆயிரம் பேர் அளவில் திரண்டிருந்த அப்பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகச் சொற்பொழிவாளர் முனைவர் ஜீவானந்தம், மாவட்டத் தலைவர் குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ) தோழர் விந்தை வேந்தன் ஆகியோர் உரையாற்றினர். நிகழ்ச்சியின் தொடக்கத்தில் திராவிடர் கலைக்குழுவினரால் பகுத்தறிவு மேடை நாடகங்கள் நடத்தப்பட்டன. பொது மக்கள் நாடகத்துக்குக் கையொலி எழுப்பி யும், ஆரவரித்தும் தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்தனர். மேலும் பெரியாரியலை முழுதுமாகப் பேசும் முதல் கூட்டம் இதுவே என்றும், ஜாதி ஒழிப்பு, பகுத்தறிவு பொதுக்கூட்டங்களை அடிக்கடி நடத்த வேண்டும் என்றும் பொது மக்கள் கேட்டுக் கொண் டனர். முன்னதாக, காலை 11-00 மணி முதல் மாவட்டக் கழகத் தோழர்கள் தனி வாகனங் களிலும், இரு சக்கர வண்டிகளிலுமாக 40 பேர்களுடன் முதலில் தேன் துர்க்கம் சென்றனர். தோழர்கள், பொதுமக்கள் வரவேற்பு அளித்து, சிற்றுண்டி வழங்கினர். பின்னர் நெருப்புக்குட்டையில் கழகக் கொடியைக் கழகத் தலைவர் ஏற்றினார். அடுத்து இரு தாளம் என்ற ஊரில் கழகக் கொடியை ஏற்றி வைத்த பின்னர் தேன்கனிக் கோட்டை பொதுக் கூட்டத்துக்கு கழகத் தலைவர் சென்றார்.

## கோட்சே ஆதரவு பரப்புரை : காவல்துறை இயக்குனரிடம் சென்னை மாவட்டக் கழகம் மனு

“தமிழ்நாட்டில் காந்தியை சுட்டுக்கொன்ற கோட்சேவுக்கு ஆதரவாகவும், சிலை வைக்கப் போவதாகவும் பேசி வரும் மதவாத சக்திகளுக்கு எதிராக காவல்துறை உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் காவல்துறை இயக்குனரிடம் மனு அளிக்கப்பட்டது. காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்ட ஜனவரி 30ஆம் தேதி, தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திண்டுக்கல், ஈரோடு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் ‘அகில பாரத இந்து மகாசபை’ எனும் பெயரில் மதவாத சக்திகள், கோட்சேவுக்கு ஆதரவாக பரப்புரை செய்ய திட்டமிட்டு வருகிறார்கள். சிலைகள் வைக்கும் முயற்சிகளும் நடந்து வருகின்றன. தமிழகத்தில் மக்கள் ஒற்றுமையைக் குலைத்து கலவரத்தைத் தூண்டி சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் ஆபத்துகள் இதனால் உருவாகலாம். எனவே, காவல்துறை தலையிட்டு வன்முறைக்கும் சமூக அமைதியை குலைப்பதற்கும் திட்டமிடும் சக்திகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்” என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டிசம்பர் 29 அன்று காவல்துறை இயக்குனரிடம் மனு அளிக்கப்பட்டது.,கழக வழக்கறிஞர்கள் துரை அருண், திருமூர்த்தி, கழகப் பொறுப்பாளர்கள் தபசி. குமரன், இரா. உமாபதி, வேழவேந்தன், ப.ஜான், விழுப்புரம் அய்யனார் உள்ளிட்ட தோழர்கள் மனுவை அளித்தனர்.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதே உணர்வு கொண்ட நான்காவது பார்ப்பனர் கதை இது. இவரது பெயர் இந்திரா கிருஷ்ணமூர்த்தி நூயி. ‘பெப்சி’ நிறுவனத்தின் தலைமை நிர்வாகி. தனது சக பார்ப்பனரான நந்தன் நீலகேணியோடு (இவரும், ஒரு சரசுவதி பார்ப்பனர், இராமச்சந்திர குகாவின் நண்பர் ஆதார் அட்டைத் திட்டத்துக்கான சிறப்பு அதிகாரியாக காங்கிரஸ் ஆட்சியால் நியமிக்கப் பட்டவர்) நடந்த உரையாடலை நூயி குறிப்பிடுகிறார். ஒரு நாள் பெப்சி தலைமை அதிகாரியாக இருந்த போது வீட்டுக்குத் திரும்பியவுடன் அவரது தாயார், கடைக்குப் போய் பால் வாங்கி வரச் சொன்னாராம். அம்மா சொன்ன வேலையை தட்டாமல் செய்த அந்த உயர்ந்த அதிகாரப்பொறுப்பில் இருந்த அம்மணி, தன்னோடு ஊறிப்போன பார்ப்பனிய சிந்தனையை மட்டும் விடவில்லை. நீலங்கேணிக்கும் நூயிக்கும் நடந்த உரையாடல் இது:

**நீலங்கேணி :** அம்மா பேச்சை தட்டாமல் நீங்கள் அவ்வளவு பெரிய நிலையில் இருந்த போதும் கடைக்கு பால் வாங்கப் போனது உங்கள் உள்ளத்தில் அம்மாவின் பற்று பதிந்திருப்பதை காட்டுகிறது. ஆரம்ப காலத்திலிருந்தே, உங்கள் அம்மா, நன்றாக படிப்பதற்கும், கணிதத்தில் 100 மார்க் வாங்குவதற்கும் தூண்டி வந்திருப்பார் போலிருக்கிறது.

**நூரி :** இது தென்னாட்டு “பிராமணர்களுக்கே” உரித்தான வழக்கம். எனவே இதில் அதிசயம் ஏதுமில்லை. என் அம்மா, மரபு வழியாகவே இதற்கேற்ப வடிவமைக்கப்பட்டவர் என்றே நினைக்கிறேன். எங்கள் குடும்பம் முழுதுமே எப்போதும் தேர்வுகளில் பெறும் மதிப்பெண்களுக்கே முன்னுரிமை கொடுக்கும். எங்கள் பெற்றோர்கள் ஒன்றாக கூடி விட்டால் குழந்தைகள் பெற்ற மதிப்பெண்களை பற்றியே ஒப்பீடுகள் செய்து பேசிக் கொள்வார்கள்.

- இப்படி போகிறது அந்த உரையாடல். கணக்குப் பாடத்தில் நன்றாக படிக்கவும், மதிப்பெண்களை குவிக்கவும் முதன்மையான நோக்கம் கொண்டவர்களாக இந்த தென்னாட்டு பார்ப்பனர்கள் மரபின ரீதியாகவே வடிவமைக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு அறிவார்ந்த நூயி குடும்பம் ஒரு மாலைப் பொழுதில் கடைக்குப் போய் பால் வாங்கி வருவதற்கு வீட்டு வேலைக்காரியாக ஒரு அடிமையை வேலைக்கு வைத்துக் கொள்ளாமைக்காக நாம் நன்றி கூறலாம்.

ஜாதி பஞ்சாயத்துகள் பிறப்பிக்கும் ஆணைகள் எவ்வளவு இழிவுக்குரியதோ, அதே இழிவுக்குரியவை தான் சர்தேசி, குகா, கார்னாட் மற்றும் நூயி தந்திருக்கும் இந்த வாக்குமூலங்கள்.

கோயில்களுக்குள் தலித் மக்களை அனுமதிப்பது இந்து சாஸ்திரங்களுக்கு எதிரானது என்று கடந்த மாதம் பூரி சங்கராச்சாரி நிச்சலானந்தா சரசுவதி பேசியது எவ்வளவு அருவெறுப்புக்கு உரியதோ, அதற்கு ஈடானதுதான் இந்தப் பார்ப்பனர்களின் பேச்சும்!

வெளிப்படையாக சனாதனத்தைப் பேசுகிற இவர்கள் முற்போக்கு அடையாளத்தைப் போர்த்திக் கொண்டு தங்களின் ‘ஜாதியையும் நிறத்தையும்’ அதற்கு வசதியாக பயன்படுத்திக் கொள்வது நம்மை உண்மையிலேயே அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது. பிரபு, பாரிக்கர் என்ற சரசுவதி பார்ப்பனர்கள் அமைச்சர்களானதில் மகிழ்ந்து, தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, இவர்களே தங்களின் நெருக்கத்துக்குரியவர்கள் என்று எழுதும் இவர்கள், அதேபோழ்து மோடி அவ்வளவு உவப்பானவர் அல்ல என்பதையும் மறு உறுதி செய்கிறார்கள்.

‘இந்துத்துவா’ கொள்கைகூட ஏட்டளவில் அனைத்து சமூகப் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக கூறிக் கொள்கிறது. ஆனால், சரசுவதி பார்ப்பனர்கள், இந்துத்துவாவைவிட மோசமானவர்கள். தங்களை சமூகத்திலிருந்து உயர்ந்தவர்களாக ஒதுக்கிக் கொள்ளவே விரும்புகிறார்கள்.

மீண்டும் அம்பேத்கர் கேட்ட கேள்விதான் நம்மிடம் இருக்கிறது - “பார்ப்பனர்களில் ஏன், ஒரு வால்டேர் உருவாகவில்லை?”

***பின்குறிப்பு :*** முற்போக்கு முகம்காட்டும் பார்ப்பனர்கள், தங்கள் ‘பிறவிப் பெருமை’ யிலிருந்து துண்டித்துக் கொள்வதே இல்லை என்பதை ஆழமாக படம் பிடித்துள்ள இந்த கட்டுரையாளரும் ஒரு பார்ப்பனர்தான் என்பது குறிப்பிடத்தக்கது. புரட்சியாளர் அம்பேத்கரை தீவிரமாக ஆதரித்து வரும் இவர், பெரியார் எதிர்ப்பிலும் தீவிரமாக இருப்பவர். பெரியாரிடம் நெருங்குவதற்கு இவரிடம் எது தடுக்கிறது என்பது நமக்குத் தெரியாது. ஆனாலும், இப்படி பார்ப்பன எதிர்ப்புக் கட்டுரைகளைக்கூட பார்ப்பனர்கள் எழுதினால் மட்டுமே இத்தகைய ஊடகங்களில் இடம் பெற முடியும் என்பது மட்டும் நமக்குப் புரிகிறது.

– ஆசிரியர்

DATE OF PUBLICATION 31.12.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# கடவுள், மத அடையாளங்களை கேள்விக்குள்ளாக்கும் பகுத்தறிவுக் காவியம்




அமீர்கான்-ராஜ்குமார் கூட்டணியில் வெளி வந்திருக்கும் 'பிகே' இந்தி திரைப்படம் ஆங்கில உள் தலைப்புகளுடன் சென்னையில் திரையிடப்பட்டிருக்கிறது இந்தப் படம். திரைப்பட வரலாற்றில் புதிய திருப்புமுனையை உருவாக்கியிருப்பதை நம்மால் உரத்துச் சொல்ல முடியும். கடவுள், மதம் என்று மனிதர்கள் உருவாக்கிய கற்பனைகளை கூர்மையான பகுத்தறிவு வினாக்களால் தகர்த்து உடைக்கிறது.

வேற்றுக்கிரக விண்வெளி வீரரான அமீர்கான், விண்வெளிக்கலம் ஒன்றில் பூமியில் வந்து இறங்கியவுடன் அவரிடமிருந்த 'ரிமோட் கன்ட்ரோல்' கருவியை இராஜஸ்தான் பாலைவனத்தில் ஒருவர் திருடிக் கொள்கிறார். மீண்டும் அந்த கருவி இருந்தால் மட்டுமே விண்வெளிக்கு திரும்ப முடியும் என்ற நிலையில் ரிமோட் கன்ட்ரோலைத் தேடித் திரியும்போது, அது கிடைக்காத நிலையில் 'இனி கடவுளால் மட்டும்தான் தேடித் தர முடியும்' என்று பலரும் அறிவுரை கூறுகிறார்கள். கடவுளைத் தேடும் முயற்சியை தொடங்குகிறார். கடவுளும் கிடைக்காத நிலையில் 'கடவுளைக் காணவில்லை' என்று கடவுள் படத்தை அச்சிட்டு வீதி வீதியாக வழங்கி தேடத் தொடங்குகிறார். கோயிலுக்குள் நுழையும்போது தனது செருப்புக்கு பூட்டுப் போடுவது; கடவுள் பொம்மைகளை விற்கும் வியாபாரி, சிறிய பெரிய பொம்மைகளுக்கு தனித் தனி விலை கூறும்போது, ஒரே கடவுளுக்கு தனித்தனி விலை ஏன்? என்று கேட்பது; கோயிலுக்குள் அர்ச்சனை தட்டில் காந்தி படம் பொறித்த ரூபாய் நோட்டைப் போடுவதைப் பார்த்து, தன்னிடம் பணம் இல்லாததால், காந்தி படம் போட்ட காகிதத்தை வைக்க, அதில் அர்ச்சகர் ஆத்திரமடைவது, கோயில் உண்டியலிலிருந்தே பணத்தை எடுத்து அர்ச்சனைத் தட்டில் போடுவது; திருடன் என்று அர்ச்சகர் பிடிக்கும்போது தொலைக்காட்சி செய்தியாளர் அனுஷ்கா சர்மா, தனது கைப்பையை உண்டியலில் யாருக்கும் தெரியாமல் நழுவ விட்டு, கைப்பையை எடுப்பதற்கு உண்டியல் திறந்தாரே தவிர, திருடுவதற்கு அல்ல என்று அவரை காப்பாற்றியதும், அர்ச்சகர் அந்தக் கைப்பையை உண்டியலிலிருந்து எடுத்து அதில் உள்ள பணமும் உண்டியலுக்கே உரியது என்று பிடுங்கிப் போடுவது; கோயில் அர்ச்சனைத் தட்டில் தேங்காயோடு பார்த்துவிட்டு, தேவாலயத்துக்குள்ளும் அர்ச்சனை தட்டில் தேங்காயோடு நுழைய, பாதிரியார்கள் எதிர்ப்பது; அங்கே ஒயின் மது பானத்தைத்தான் படைக்க வேண்டும் என்று அறிந்து, ஒயின் பாட்டில்களை வாங்கி அடுக்கிக் கொண்டு நுழைவது; தன்னிடம் திருடப்பட்ட 'ரிமோட் கன்ட்ரோலை' திருடியவரிடமிருந்து விலை கொடுத்து வாங்கிய ஒரு 'பாபா', அதன் வழியாக கடவுளிடம் நேரடியாக பேசுவதாக பக்தர்களை ஏமாற்றி பணம் பறிப்பது; வெவ்வேறு மதக்காரர்களுக்கு மத அடையாளங்களை மாற்றி, பாபா முன் நிறுத்தி, அவர்கள் எந்த மதம் என்று கேட்கும்போது, தோற்றத்தை வைத்து பாபா மதத்தைக் கூறுகிறார். உடனே அவர்களின் மாற்று அடையாளங்களைக் கலைத்து, வேறு மதக்காரர்கள் என்று நிரூபிப்பது; தொலைக்காட்சி நேரடி விவாதத்தில் பாபாவின் வாதங்களை அறிவியல் ரீதயாக வாதிட்டு வீழ்த்துவது என்று படம் முழுதும் நிறுவனமாக்கப்படும் கடவுள், மதங்களுக்கு எதிராக பகுத்தறிவு கருத்துகள் சாட்டையடியாக வந்து விழுகின்றன.

கடவுள், மத உணர்வாளர்களை 'கேலி செய்யும்' காட்சிகள் இல்லாமல் அறிவார்ந்த கேள்விகளை மட்டுமே படம் எழுப்புவதால் தணிக்கைக் குழுவால் காட்சிகளை வெட்ட முடியவில்லை. பாகிஸ்தானியர் என்றாலே வெறுக்கக் கூடியவர்கள் என்ற கருத்தை உடைத்து, பாபாவின் சீடராக உள்ள ஒருவரின் மகள், பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றும் இளைஞரை விரும்பி, சூழ்நிலையால் பிரிந்து, பிறகு மீண்டும் இணைவதுபோல் காதல் காட்சிகளும்கூட 'மத எதிர்ப்பை' உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது, படத்தின் சிறப்பு. தொலைக்காட்சி செய்தியாளராக அனுஷ்கா சர்மாவும், வேற்றுக்கிரக விண்வெளி வீரராக அமீர்கானும் மிகச் சிறப்பாக நடித்துள்ளார்கள். பிறக்கும் குழந்தைக்கு மதத்துக்கான அடையாளக் குறியை கடவுள் போட்டிருக்கிறாரா என்று மருத்துவமனையில் பிறந்த குழந்தையிடம் கதாநாயகன் தேடுகிறார். நான் எந்தக் கடவுளை வணங்குவது? பசுவை வணங்க வேண்டும் என்று கூறும் கடவுளையா? ஆடுமாடுகளை பலி கொடுக்க வேண்டும் என்ற கடவுளையா? கையெடுத்துக் கும்பிடச் சொல்லும் கடவுளையா? முழங்கால் முட்டிப் போட்டு வணங்கும் கடவுளையா? மதம் உள்ளவர்கள் கூட இதில் ஏதேனும் ஒன்றை பின்பற்றலாம். மதமே இல்லாதவர்களுக்கு கடவுள் ஏதும் கிடையாதா? - என்று சரமாரியாக கேள்விகளை வெடிக்க வைக்கிறது திரைப்படம். வடநாட்டில் சங்பரிவாரங்கள் இத்திரைப்படத்துக்கு தடை கோரி வன்முறைகளை தொடங்கிவிட்டனர். தணிக்கைக் குழு இதில் வெட்டக்கூடிய எந்த ஒரு காட்சியும் இடம் பெறவில்லை என்று உறுதியாக கூறிவிட்டது. பா.ஜ.க. மதவெறி சக்திகள், அதிகாரத்துக்கு வந்துள்ள நிலையில் இப்படி ஒரு அருமையான பகுத்தறிவு திரைக் காவியத்தை துணிவுடன் தயாரித்துள்ள படக்குழுவினரைப் பாராட்ட வேண்டும்.

நிறுவனப்படுத்தப்பட்ட மதங்களையும் பாபாக்களையும் அம்பலப்படுத்துவதே படத்தின் நோக்கம். நடிகர் அமீர்கான் ஒரு இஸ்லாமியர் என்பதால் 'இந்து' கடவுள்களை இழிவுபடுத்துவதாகக் கூறும் சங்பரிவாரங்களுக்கு அமீர்கான் பதிலடி தந்துள்ளார். "படத் தயாரிப்புக் குழுவில் தன்னைத் தவிர தயாரிப்பாளர், இயக்குநர், தொழில்நுட்பக் கலைஞர்கள் உட்பட 99 சதவீதம் பேர் இந்துக்கள்தான்" என்று பதில் கூறியிருக்கிறார்.

தமிழில் இது 'டப்பிங்' செய்யப்படும் நாளை ஆவலுடன் எதிர்பார்ப்போம். பகுத்தறிவுக் கருத்துகளை இலட்சோப இலட்சம் மக்களிடம் கொண்டு செல்லும் இத்திரைப்படம், மக்கள் பேராதரவோடு வெற்றி நடைபோடுகிறது என்பது உண்மையிலேயே மகிழ்ச்சியான செய்தி!

**– கண்டு வந்தவன்**

# சுப்பிரமணியசாமிக்காக பதவி பறிக்கப்பட்ட ஐ.ஐ.டி. இயக்குநர்

சுப்ரமணிய சாமியின் கருத்து - தங்களுக்கு உடன்பாடானது அல்ல என்றும், அவர் கருத்துகள் பா.ஜ.க.வின் கருத்து அல்ல என்றும் தமிழிசை சவுந்தர்ராஜன், பொன்னப்பர் போன்ற பா.ஜ.க.வின் 'சூத்திர' தலைவர்கள் கூறி வருகிறார்கள். ஆனால், பா.ஜ.க.வில் சுப்ரமணியசாமி செல்வாக்குள்ள நபராகவே உலவுகிறார் என்பதற்கு சான்றாக அண்மையில் ஒரு செய்தி வந்துள்ளது.

டெல்லி அய்.அய்.டி. (இந்திய தொழில்நுட்ப நிறுவனம்) உயர் கல்வி நிறுவனத்தின் இயக்குனர் இரகுநாத். கே.செவ்கவோன்கர் பதவியிலிருந்து விலகியுள்ளார். அய்.அய்.டி. - குடியரசுத் தலைவரின் நேரடி கட்டுப்பாட்டிலுள்ள ஒரு தன்னாட்சி அமைப்பு. ஆனால், இவரது பதவி விலகல் கடிதம், மனித வளத் துறை அமைச்சரால் ஏற்கப்பட்டிருக்கிறது. கட்டாயப் படுத்தப்படுத்தி மோடி ஆட்சி இவரிடமிருந்து விலகல் கடிதத்தை வாங்கியுள்ளதாக தலைநகரில் செய்திகள் உலா வருவதாக 'இந்து' நாளேடு (டிச.29) கூறுகிறது.

காரணம், சுப்ரமணிய சாமியின் பிரச்சினைதான் 1969ஆம் ஆண்டு சுப்ரமணியசாமி, இந்த நிறுவனத்தில் பொருளாதார பேராசிரியராக இருந்து, பிறகு இந்திரா காந்தியால் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். பதவியிலிருந்த காலத்தில் தனக்கு வர வேண்டிய ரூ.70 இலட்சத்தை திருப்பித் தரக் கோரி, சுப்ரமணியசாமி தொடர்ந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தவுடன், மத்திய வேலைவாய்ப்புத் துறை, அமைச்சகம் நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ள போது, சுப்பிரமணியசாமிக்கு பணத்தைத் திருப்பித் தர முடிவெடுத்தது. இதற்கு அய்.அய்.டி. இயக்குனர் உடன்படாததால் அவரிடமிருந்து கட்டாயப்படுத்தி, விலகல் கடிதம் பெறப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அத்துடன் அய்.அய்.டி. வளாகத்துக்குள்ளேயே சச்சின் டெண்டுல்கர் பெயரில் 'கிரிக்கெட் மய்யம்' (அகாடமி) ஒன்றை நிறுவும் அரசின் முயற்சியை இந்த இயக்குனர் எதிர்த்ததும் மற்றொரு காரணம் என்று கூறப்படுகிறது. அரசு நிர்ப்பந்தத்தால் பதவி விலகியதாக வதந்தியைப் பரப்பி வருவதாக அந்த இயக்குனர் மீது சுப்ரமணியசாமி 'மான இழப்பு' வழக்கு தொடரப் போவதாக கூறியிருக்கிறார்.

அய்.அய்.டி. முன்னாள் மாணவர் அமைப்பு, அரசின் தலையீட்டைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. இதில் சுப்ரமணியசாமி மூக்கை நுழைப்பதிலிருந்து சுப்ரமணியசாமி தான் பிரச்சினைக்கு காரணம் என்பது அம்பலத்துக்கு வந்து விடுகிறது. மோடி ஆட்சியில் பார்ப்பனர்கள் கொடி கட்டிப் பறக்கிறார்கள்.

'கொலை வழக்கு' காஞ்சி சங்கரன் கூட சுப்ரமணியசாமிக்கு சரிசமமாக இருக்கைப்போட்டு பேசுகிறார். அமைச்சராக இருந்தாலும் பொன்னப்பர் 'சூத்திரர்' என்பதால் தரையில் உட்கார வைத்துப் பேசுகிறார்.

இந்த 'இழிவுகள்' படங்களாக பத்திரிகைகளில் வந்து கொண்டிருந்தாலும் 'சூத்திரர்கள்' மானமற்றவர்களாகவே இருப்பது கேவலம் அல்லவா?

*அடுத்த இதழ்...*

**காந்தி படுகொலைப் பற்றிய விரிவான செய்திகளுடன்...**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 2nd January 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஜனவரி 08, 2015 | புரட்சி 13 | முழக்கம் 52 | விலை: ரூ.3.00

### திருச்சி மாவட்டக் கழகம் – காவல்துறையிடம் மனு:

# காந்தி நினைவு நாளில் விசுவ இந்து பரிஷத் மாநாட்டுக்கு அனுமதி தரக்கூடாது

காந்தி கொலை செய்யப்பட்ட ஜனவரி 30ஆம் நாளை தேர்ந்தெடுத்து, விசுவ இந்து பரிஷத், திருச்சியில் மாநாடு நடத்துவதுடன், அவர்கள் அமைப்பு தொடங்கப்பட்ட நாள் என்ற உண்மைக்கு மாறான பொய்யான கருத்தையும் முன் வைத்திருக்கிறது. காந்தி சுட்டுக் கொலை செய்யப்பட்ட நாளை திட்டமிட்டு மறைக்கும் நோக்கத்துடன் விசுவ இந்து பரிஷத் மேற்கொண்டுள்ள முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டும் என்று திருச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம், மாநகர காவல் துறை ஆணையரிடம் மனு அளித்துள்ளது. மாவட்டச் செயலாளர் வே.க.கந்தவேல் குமார், இந்த மனுவை அளித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது:

“அண்ணல் காந்தியடிகள், இந்து மதவெறியன் கோட்சேவால் சுட்டுக் கொல்லப்பட்ட நாள் ஜனவரி 30ஆம் தேதி. நாடு முழுவதும் அவரது நினைவு நாளை கோடானு கோடி மக்கள் ஜாதி, மதம், இனம், மொழி, ஏன் நாடு கடந்து உலகமே நினைவுகூரும் நாளில் தொடர்ந்து காந்தீய கொள்கைகளுக்கு எதிராக செயல்பட்டு வரும் விசுவ இந்து பரிஷத் என்கிற இந்து அமைப்பு நாட்டில் அமைதியையும், மத நல்லிணக்கத்தையும், சீர்குலைக்கும் நோக்கத்தோடு அவர்களே அந்த அமைப்பு தொடங்கிய உண்மையான நாளான ‘கிருஷ்ண ஜெயந்தி’யை தவிர்த்து விட்டு காந்தியாரின் நினைவு நாளில் உள்நோக்கத்தோடு திருச்சி உழவர் சந்தையில் 50ஆம் ஆண்டு விசுவ இந்து பரிஷத் தொடக்க விழா நாளாக அறிவித்து மாநாடு நடத்த இருப்பதாக விளம்பரம் செய்து வருகிறார்கள். பொது மக்கள், காந்தீய கொள்கை வழி செயல்படும் அரசியல் கட்சிகள், அனைத்து அரசியல் கட்சிகள், தன்னார்வ அமைப்புகள், மகளிர் அமைப்புகள், தமிழ்நாடு அரசு-நிர்வாகம் என அனைவரும் ஒற்றுமையாக நினைவுகூரும் காந்தியாரின் நினைவைப் போற்றுவதற்கு ஏதுவாக வருகின்ற ஜனவரி 30ஆம் தேதி விஸ்வ இந்து பரிஷத்தின் 50 ஆண்டு விழா மாநாட்டிற்கு அனுமதி யளிக்க வேண்டாம் என திராவிடர் விடுதலைக் கழகம் அன்புடன் வேண்டுகிறது” என்று மனுவில் குறிப்பிடப்பட் டுள்ளது.

மாவட்ட செயலாளர் கந்தவேல் குமார், அமைப்பாளர் தமிழ் முத்து, தலைமைக் குழு உறுப்பினர் புதியவன் ஆகியோர் 30.12.2014 அன்று கழக சார்பில் இந்த மனுவை அளித்தனர்.

# மன்னையில் மதவாத எதிர்ப்புக் கருத்தரங்கம்

26.12.2014 அன்று பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 41ஆவது, புரட்சியாளர் அம்பேத்கரின் 58ஆவது நினைவுநாளையொட்டி திருவாரூர் மாவட்ட திராவிடர் விடுதலைக்கழகத்தின் சார்பில் மதவாத எதிர்ப்புக் கருத்தரங்கம், மன்னார்குடி குமாரசாமி திருமண அரங்கத்தில் திராவிடர் விடுதலைக்கழக திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா. காளிதாசு தலைமையில் நடைபெற்றது.

கருத்தரங்கில் திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர்மணி பங் கேற்று, காவிமயமாகும் கல்வி, அரசியல் என்கிற தலைப்பில் சிறப்புரையாற்றினார். துவக்கத்தில், பெரியார் இயக்கத்தில் பல ஆண்டுகள் பணியாற்றியவரும், தமிழக வாழ்வுரிமைக் கட்சி திருவாரூர் மாவட்ட அமைப்பாளர் மறைந்த தோழர் ராம முத்துராமலிங்கம் படத்தினை கழகத் தலைவர் கொளத்தூர்மணி திறந்து வைத்தார். பின்னர் துவங்கிய கருத்தரங் கத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று மன்னை வட்ட லாரி உரிமை யாளர்கள் சங்கத்தின் பொருளாளர் சேரன் குளம் செந்தில்குமார் வரவேற்புரை யாற்றினார்.

எழுத்தாளர் தஞ்சை பசு கௌதமன், தஞ்சை வடக்கு மாவட்ட அமைப்பாளர் கு.பாரி, தஞ்சை தெற்கு மாவட்ட அமைப் பாளர் சித.திருவேங்கடம், நாகை மாவட்ட தலைவர் மகாலிங்கம், நாகை மாவட்ட செயலாளர் தெ.மகேஷ், மாவட்ட அமைப்பாளர் அன்பரசன், தலைமைக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் இளைய ராஜா, புதுக்கோட்டை மாவட்ட அமைப் பாளர் பூபதி கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையேற்றனர்.

புரட்சியாளர் அம்பேத்கர் படத்தினை விடுதலை சிறுத்தைகள் கட்சி திருவாரூர் தெற்கு மாவட்ட செயலாளர் என்.டி.இடி முரசும், தந்தை பெரியாரின் படத்தினை திருவாரூர் மாவட்ட பூ வியாபரிகள் சங்க தலைவர் ரயில்பாஸ்கரும் திறந்து வைத்து உரையாற்றினர். பின்னர் புரட்சியாளர் அம்பேத்கர் 58ஆவது நினைவேந்தலை விளக்கி கழகப் பேச்சாளர் முனைவர் ஜீவானந்தமும், தந்தை பெரியார் 41ஆவது நினைவேந்தலை விளக்கி




தலைமைக்குழு உறுப்பினர் தூத்துக்குடி பால்பிரபாகரனும் கருத்துரை யாற்றினர். இறுதியாக, காவிமயமாகும், கல்வி, அரசியல் என்கிற தலைப்பில் திராவிடர் விடுதலைக்கழக தலைவர் கொளத்தூர்மணி சிறப்புரையாற்றினார்.

அவர் தனது உரையில் நாட்டின் பன்முகத்தன்மையை சிதைத்து தனது கொள்கை, கோட்பாடு, கலாச்சாரம் முதலியவற்றை மதசார்பற்ற நாடான இந்தியாவில் வசிக்கும் அனைத்து மக்கள் மீதும் திணிப்பது தான் பாஜகவின் குறிகோளாகும். பாஜக மத்தியில் ஆட்சிக்கு வந்தவுடன் ஆர்எஸ்எஸ்ஸின் வழிகாட்டுதல் பேரில் இந்தி திணிப்பு, சமஸ்கிருத திணிப்பு, ஆசிரியர் தினத்தை குருஉத்சவ் என மாற்றியது, இந்தியாவின் தேசிய நூலாக பகவத்கீதையை கொண்டு வர முயற்சித்தது, இஸ்லாமியருக்கு எதிராக மீண்டும் கலவரங்களை தூண்டும் முயற்சியாக ராமர் கோவிலை கட்ட நினைப்பது, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசியல் அமைப்பு சட்டம் வழங்கியுள்ள இடஒதுக்கீட்டை முற்றிலுமாக நீக்க முயற்சி செய்வது என பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. மதசார்பற்ற நாட்டில் மதத்தின் பெயரால் மக்களை பிளவுபடுத்தி அதன்மூலம் தன்னுடைய அரசியல் ஆதாயங் களுக்காக பல்வேறு நடவடிக்கைகளில் மோடி தலைமையிலான பாஜக அரசு ஈடுபடுகிறது.

இந்தியாவில் உயர்ந்த விருதான பாரத ரத்னாவிருதை வாஜ்பாஜ், மாளவியா ஆகியோருக்கு அளித்திருப்பது என்பது மக்கள் ஒற்றுமையை விரும்பும் எவரும் ஏற்றுக்கொள்ளமுடியாத செயலாகும். ஆர்.எஸ்.எஸ். அமைப்புதான் மத்தியில் இருக்கின்ற மோடி அரசை பின்புலமா இருந்து இயக்குகிறது. இந்த அமைப்பு பற்றி அம்பேத்கர் கூறுகையில் ஆர்.எஸ்.எஸ் என்பது எறும்பிற்கு சர்க்கரையை உணவாக இடுவார்கள் ஆனால் மனிதர்கள் தண்ணீர்குடிக்க தடை விதிப்பார்கள் என்று கூறியிருக் கிறார். மேலும் ஜவஹர்லால் நேரு ஆர்.எஸ்.எஸ் பற்றி கூறுகையில் ஐரோப்பாவில் பல்வேறு பாகங்களில் தோன்றிய மக்கள் விரோத அமைப்பு களின் மறுபதிப்பாக விளங்குகிறது என்றார். எனவே கல்வி முதல், அரசின் ஒவ்வொரு துறையையும் காவிமயமாக்கி வருகின்றன பாஜகவின் திட்டங்களை அனைவரும் எதிர்த்து போராட முன்வரவேண்டும் என கூறினார்.

கழக தலைவர் கொளத்தூர் மணி அவர்களுக்கு திருவாரூர் மாவட்ட கழகத்தின் சார்பில் மார்பளவு பெரியார் சிலையினை பொறுப்பாளர்க்ள நினைவு பரிசாக வழங்கினர். இறுதியாக நீடாமங்கலம் ஒன்றிய செயலாளர் நல்லிக்கோட்டை முருகன் நன்றி கூறினார்.

காந்தியார் படுகொலை குறித்த விரிவான செய்திகள் – உள்ளே

# காந்தியார் கொல்லப்பட்ட அந்த நேரத்தில்...

*1948 ஜனவரி 30, பார்ப்பன கொலைவெறிக்கு காந்தியார் பலிகடா ஆன நாள் அதுதான்!*

புதுடில்லியில் உள்ள பிர்லா மாளிகையில் - தனது அறையிலிருந்து காந்தி புறப்பட்டார்; அதுவரை சர்தார் வல்லபாய் பட்டேலுடன் பேசிக் கொண்டிருந்தவர் - பிரார்த்தனைக்கு நேரமாகிவிட்டது என்று பட்டேலிடம் விடைபெற்றுக் கிளம்பி, பிரார்த்தனை மண்டபத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். காந்தியாரின் பேத்தி ஆவா காந்தி, மருமகள் மனு காந்தி ஆகியோர் தோள் கொடுக்க - தோட்டத்தைக் கடந்து பிரார்த்தனை மேடைக்கு வந்தார்; மண்டபத்தை அடைய இன்னும் 4 அடிகளே எடுத்து வைக்க வேண்டும். 500 பேருக்கு மேல் கூட்டம் காத்துக் கொண்டிருக்கிறது; அப்போது கூட்டத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு 35 வயதுடைய இளைஞன் ஒருவன் வந்தான்.

தனது உடலை வளைத்து குனிந்து ‘பிராணம்’ (சல்யூட்) செய்தான். காந்தியார் திரும்பி மரியாதை செலுத்தினார். ‘இன்று பிரார்த்தனைக்கு நேரம் ஆகி விட்டது அல்லவா?’ என்று கேட்டான். காந்தியார் சிரித்துக் கொண்டே, ‘ஆம்; நேரமாகி விட்டது’ என்றார். உடனே, ரிவால்வரை எடுத்தான். காந்தியாரை நோக்கி மூன்று முறை சுட்டான். காந்தியார் வயிற்றுக்குக் கீழேயும், இதயத்துக்கு கீழேயும் குண்டு துளைத்துச் சென்றது. காந்தியார் நிலை குலைந்து போனார். ஆவா காந்தியும், மனு காந்தியும் அழுத்திப் பிடித்துக் கொண்டனர். அப்போது நேரம் மாலை 5 மணி 12 நிமிடம்! காந்தியார் மூச்சை இழந்தார். அதற்கு முன் ஜனவரி 15 ஆம் தேதியிலிருந்து வகுப்புக் கலவரங்களை எதிர்த்து தொடர்ந்து ‘உண்ணாவிரதம்’ இருந்த காந்தியார் சில நாள்களுக்கு முன்புதான் உண்ணாவிரதத்தை முடித்திருந்தார்.

காந்தியாரை சுட்டுக் கொன்றவனை - கூடியிருந்தவர்கள் வளைத்துப் பிடித்தனர். ஆத்திரமடைந்த கூட்டத்தினர் அவனை அடித்துக் காயப்படுத்தினர். போலீசார் அவனைக் கைது செய்து சிறைக்குக் கொண்டு போனார்கள்.

அந்த இளைஞன்தான் நாதுராம் கோட்சே! மராட்டிய மாநிலத்தைச் சார்ந்த சித்பவன் பார்ப்பனர்.

இச்செய்தி அறிந்து அதிர்ச்சி அடைந்த நேரு, வானொலியில் பேசுகிறார்:

“ஒரு பைத்தியக்காரன், காந்திஜியின் வாழ்க்கைக்கு முடிவு கட்டிவிட்டான்; நான் அவனை பைத்தியக்காரன் என்றுதான் சொல்லுவேன். கடந்த பல ஆண்டுகளாகவே இந்த நாட்டில் ஒரு விஷம் பரப்பப்பட்டு வருகிறது. அந்த விஷம் மக்களிடையே பயங்கர விளைவுகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. அந்த விஷத்தை நாம் சந்திப்போம்; சந்தித்தே தீருவோம்”


என்று நேரு, காந்தியாரின் உயிரை மாய்த்த அந்த ‘விஷ’த்தை சுட்டிக்காட்டி அறைகூவல் விடுத்தார்.

காந்தியார் மறைவு பற்றிய வரலாறு ஆர்.எஸ்.எஸ். இல்லாமல் முழுமை பெற முடியாது! காந்தியார் உயிரைக் குடித்த ‘சித்பவன்’ பார்ப்பனர் - ஒரு ஆர்.எஸ்.எஸ். காரரே என்பது கல்லில் செதுக்கப்பட்டிருக்கும் உண்மை! ஆனால், கோட்சேவுக்கும் ஆர்.எஸ்.எஸ்.க்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது என்று இமயமலையை தூணில் மறைக்கும் முயற்சிகளில் ஆர்.எஸ்.எஸ். கூட்டம் ஈடுபட்டது; அதையே இப்போதும் செய்து கொண்டிருக்கிறது.

காந்தியார் இறந்தார் என்ற செய்தி வந்தவுடன், அந்த வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டு முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தை உருவாக்க முயன்ற கூட்டம் இது. காந்தியாரை சுட்டுக் கொன்றது ஒரு முஸ்லிம் என்ற வதந்தியை திட்டமிட்டுக் கிளப்பினார்கள். ஒரு சில நிமிடங்களிலே இந்த வதந்தி காட்டுத் தீ போல பரவிவிட்டது. பல இடங்களில் முஸ்லிம்கள் மீது தாக்குதலும் தொடங்கிவிட்டது.

காந்தியார் இறந்துவிட்டார் என்ற செய்தி அறிந்து மவுண்ட்பாட்டன் (அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த பிரிட்டிஷ் பிரதிநிதி), பிர்லா மாளிகைக்கு விரைகிறார். அப்போது, வெளியே பெரிய கூட்டம் திரண்டு நிற்கிறது. கூட்டத்தை விலக்கித் தள்ளிக் கொண்டு மவுண்ட்பாட்டன் அவசரமாக நுழையும்போது ஒருவன் ஓடிவந்து “ஒரு முஸ்லிம் காந்தியைக் கொன்று விட்டான்” என்று அலறுகிறான். “முட்டாள், வாயை மூடு; கொன்றது ஒரு இந்துதான் என்று உனக்குத் தெரியாதா?” என்று ஆத்திரத்தோடு பதிலளித்தார் மவுண்ட்பாட்டன். (ஆதாரம் : ‘Freedom at Midnight’ நூல்)

அகில இந்திய வானொலியின் டைரக்டருக்கும், காந்தியாரை சுட்டுக் கொன்றது ஒரு முஸ்லிமே என்று இந்தக் கூட்டம் தகவல் கொடுத்தது. வானொலியில் இப்படி ஒரு செய்தி வந்துவிட்டதால், நாடெங்கும் முஸ்லிம்களுக்கு எதிராக கலவரம் வெடிக்கும் என்பது இவர்களின் அற்ப ஆசை! ஆனால், வானொலி இந்தச் செய்தியை ஒலி பரப்பவில்லை. காந்தியாரை சுட்டுக் கொன்றது யார் என்பது தெரிந்த பிறகே, அந்த செய்தி ஒலி பரப்ப வேண்டும் என்று வானொலி நிலைய அதிகாரிகள், செய்தியை தாமதப்படுத்தினர். காந்தியார் மறைவுக்குப் பிறகும், வானொலியில் தொடர்ந்து வழக்கமான நிகழ்ச்சிகளே ஒலிபரப்பப்பட்டு வந்தன. பிர்லா மாளிகைக்குத் தொடர்பு கொண்டு செய்தியை உறுதிபடுத்திய பிறகுதான் வானொலி காந்தியாரின் மறைவை நாட்டுக்கு அறிவித்தது. காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டது மாலை 5 மணி 12 நிமிடம்; வானொலியில் அந்தச் செய்தி ஒலிபரப்பானதோ, மாலை 6 மணிக்குத்தான்! அதுவும் செய்தி எப்படி ஒலிபரப்பப்பட்டது தெரியுமா? “காந்தியாரை இன்று மாலை 5.20 மணிக்கு ஒரு இந்து சுட்டுக் கொன்றான்” என்று, சுட்டவன் இந்து என்பதை வலியுறுத்தி செய்தி அறிவிக்கப்பட்டது. இப்படிப்பட்ட நிலைக்குக் கொண்டு வந்தவர்கள் யார்? ஆர்.எஸ்.எஸ். என்ற சதிகாரப் பார்ப்பனர் கூட்டம் தான்!



**காந்தியார் படுகொலைக்கு திட்டமிட்ட பார்ப்பனர்கள், அதை வெற்றிகரமாக நடத்தி முடித்து விட்டார்கள். “காந்தியை கொலை செய்தது நான்தான்” என்று நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தவன் மராட்டிய சித்பவன் பார்ப்பனர் நாதுராம் கோட்சே. இப்போது கோட்சேவுக்கு சிலை வைக்கப் போவதாக அவர்கள் வெளிப்படையாகவே கூறுகிறார்கள். காந்தியார் கொலைக்குப் பின்னால் இயங்கிய ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன சதியின் வரலாறு, இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்திட வேண்டும் என்பதற்காக அது குறித்து செய்திகளை திரட்டித் தருகிறது, ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’.**

காந்தியாரின் உதவியாளராக இருந்து, காந்தியார் வாழ்க்கைச் சரித்திரத்தை எழுதிய பியாரிலால் தமது நூலில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

“காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு, சர்தார் பட்டேலுக்கு ஒரு கடிதம் வந்தது.

அந்தக் கடிதத்தை ஒரு இளைஞர் எழுதியிருந்தார். ஆரம்பத்தில் ஆர்.எஸ்.எஸ்.சில் ஈர்க்கப்பட்டு, பிறகு அதிலிருந்து வெறுப்படைந்து வெளியேறியவர் அந்த இளைஞர். ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்கு காந்தியார் சுட்டுக் கொல்லப்பட இருக்கிறார் என்ற செய்தி ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருந்தது; அந்த இனிப்பான செய்தியைக் கேட்பதற்கு வானொலி முன் தயாராக இருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். பல இடங்களில் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் வானொலி பெட்டிகள் முன் உட்கார்ந்து கொண்டு, அந்த இனிப்பான செய்திக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். செய்தி வந்தவுடன் டில்லி உட்பட பல இடங்களில் இனிப்பு வழங்கினர்” என்று எழுதியிருக்கிறார்.

(ஆதாரம்: காந்தி உதவியாளர் பியாரிலால் எழுதிய “Mahathma Gandhi - The Last Phase” நூல் பக். 756)

அதே நூலில் - அதே பக்கத்தில் இன்னொரு தகவலும் தரப்பட்டிருக்கிறது.

“பிறகு ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்பட்டபோது இந்திய மாநிலங்களின் தலைநகர் ஒன்றில் இருந்த தலைமை போலீஸ் அதிகாரி, உடனே ஆர்.எஸ்.எஸ். நிர்வாகிகளுக்குத் தகவல் கொடுத்து, 13 நாள்கள் துயரம் தெரிவிப்பதாகக் கூறி அலுவலகங்களை மூடிவிட்டு, தலைமறைவாகி விடுங்கள்; தடை உத்தரவை மீற வேண்டாம் என்று தெரிவித்தார்” - என்று அந்த நூலில் குறிப்பிடப்பட்டு இருந்தது!

போலீஸ் அதிகாரியாக இருந்த பார்ப்பனர் ஒருவர் தமது இனத்துக்கு செய்திருக்கிற சேவை. காந்தியார் மறைவுக்கு 13 நாள்கள் துக்கம் அறிவித்ததில்கூட இவர்களின் தற்காப்பும் சுயநலமும் அடங்கியிருந்தது.

**(விடுதலை இராசேந்திரன் எழுதிய ‘ஆர்.எஸ்.எஸ். ஒரு அபாயம்’ நூலிலிருந்து)**

## கோட்சேயின் சமூகப் பின்னணி

கோட்சேயின் குடும்பத்தில் பெண் குழந்தைக்கு ஆசைப்பட்ட நிலையில், அது பிறக்காத சூழலில் கோட்சேயை பெண் குழந்தையாக பாவித்து மூக்குத்தி மற்றும் பெண் குழந்தைகளுக்கான ஆடைகளை அணிவித்து வளர்க்கப்பட்டார். இதனால் கோட்சேயின் பாலின அடையாளம் குழப்பமாகி அது அவருக்கு சிக்கலான இளம் பருவமாக இருந்தது. அரசியலிலும் சமூகத்திலும் ஆதிக்கத்திலேயே இருந்து வரும் சித்பவன் சாதிக் குடும்பம், திடீரென வறுமையில் வீழ்ந்தது. அதிகாரமில்லாததால் ஏற்பட்ட விரக்தியும், பாலின அடையாளச் சிக்கலும் சேர்ந்து கொண்டு அவனது ஆண்மைத் தன்மையை நிரூபிக்கும் பொருட்டு அவனை ஒரு தீவிரவாதியாக மாற்றியிருக்கலாம் என்று அரசியல் உளவியலாளர் ஆசிஸ் நந்தி, ‘உளவியலின் விளிம்பு’ (எட்ஜ் ஆப் சைக்காலஜி) என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

“பெண்கள் தனக்கு முன்னால் நிற்பதையே வெறுப்பவர். கடுமையான தலைவலியால் வாழ்நாள் முழுவதும் அவதிப்பட்டவர். ஒருமுறை இந்தத் தலைவலியால் அவதிப்பட்டபோது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கண்விழித்துப் பார்த்த போது தனக்கு ‘பெண் நர்சுகள்’ பணிவிடை செய்தது தெரிந்தது! உடனே ஆத்திரமடைந்து மருத்துவ மனையிலிருந்து வெளியே ஓட்டம் பிடித்தார்!

பார்ப்பன தர்மத்தில் அழுத்தமான பிடிப்பு உண்டு; “பிரம்மச்சரிய” விரதத்தை மேற்கொண்டவர். ஆனால், இவரது அரசியல் ஞானத் தந்தை வீரசவர்க்காரோடு மட்டும் இவருக்கு உடல்உறவு (Home sexual) உண்டு!

**தகவல்: ‘நள்ளிரவில் வந்த சுதந்திரம்’ நூல்**

# கோட்சே ஆர்.எஸ்.எஸ். நெருக்கமான தொடர்புகள் - ஆதாரத்துடன்...

காந்தியார் கொலைக்கும் ஆர்.எஸ்.எஸ்.க்கும் தொடர்பு உண்டு என்பதற்கு அடுக்கடுக்கான ஆதாரங்கள் உண்டு!

மொரார்ஜி தேசாய் தனது சுயசரிதையை, 'Story of my life' என்ற பெயரில் எழுதியிருக்கிறார். அதில் 248 ஆவது பக்கத்தில்,

"காந்தியாரை சுட்டுக் கொன்றது நாதுராம் கோட்சே என்பவன் புனேயில், ஆர்.எஸ்.எஸ். ஊழியனாக அவன் பணியாற்றியவன்" என்று எழுதியிருக்கிறார்.

ஏ.ஜே. குர்ரான் எழுதிய 'Millitant Hinduism in Indian politics' என்ற நூலில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் ஹெட்கேவருடன், சுற்றுப் பயணங்களில் உடன் சென்று கொண்டிருந்தவன் கோட்சே என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

நாதுராம் கோட்சேயின் சகோதரர் கோபால் கோட்சே, காந்தியாரைக் கொலை செய்யப் புறப்பட்டபோது நடந்த நிகழ்ச்சிகளை தனது வாக்குமூலத்தில் விவரிக்கிறார். காந்தியாரை சுட்டுக்கொல்ல சென்றபோது, கோட்சே பாடிய பிரார்த்தனைப் பாடலை அவர் குறிப்பிட்டிருக்கிறார். அது ஆர்.எஸ்.எஸ். 'ஷாகா'க்களில் பாடப்படும் சமஸ்கிருதப் பிரார்த்தனைப் பாடல். கோட்சே ஒரு காலத்தில் ஆர்.எஸ்.எஸ்.சில் இருந்துவிட்டு, பிறகு அதிலிருந்து விலகிப் போய்விட்டார் என்ற ஒரு வாதத்தை ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் முன் வைத்து தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். அது உண்மைக்கு சம்பந்தமில்லாத வாதம் என்பதை கோபால் கோட்சேயின் இந்த ஒப்புதல் வாக்கு மூலமே காட்டிக் கொடுத்துவிடுகிறது.

கோட்சே பாடிய அந்த பிரார்த்தனைப் பாடல் - அவர் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினராக இருந்த அந்தக் காலத்தில் ஆர்.எஸ்.எஸ். 'ஷாகா'க்களில் பாடப்பட்ட பாடல் அல்ல; அப்போது மராத்திய மொழியில்தான் அவர்கள் பாடினார்கள். அதற்குப் பிறகு 1940 ஆம் ஆண்டில்தான் கோட்சே உச்சரித்த அந்த சமஸ்கிருதப் பிரார்த்தனைப் பாடல் நடைமுறைக்கு வந்தது.

இந்தப் பாடல் ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்கு மட்டுமே தெரியும். அவர்கள் இரகசியமாக அதை வைத்திருக்கிறார்கள்.

1932 ஆம் ஆண்டிலேயே நாதுராம் கோட்சே - ஆர்.எஸ்.எஸ்.சை விட்டுப் போய் விட்டார் என்றால், 1940 ஆம் ஆண்டுக்குப் பிறகு அறிமுகப்படுத்தப்பட்ட ஆர்.எஸ்.எஸ்.காரர்களிடம் மட்டுமே இரகசியமாக வைக்கப்பட்டிருந்த - ஒரு சமஸ்கிருதப் பிரார்த்தனைப் பாடலை - காந்தியாரைக் கொலை செய்வதற்கு முன்பே கோட்சே எப்படிப் பாடினான்?

இதிலிருந்து என்ன தெரிகிறது? கோட்சேவுக்கு கடைசி வரை ஆர்.எஸ்.எஸ். தொடர்பு இருக்கிறது என்பது தானே? இதை ஆர்.எஸ்.எஸ்.காரர்களால் மறுக்க முடியுமா?

நாதுராம் கோட்சேயின் சகோதரர் கோபால் கோட்சே தந்த வாக்குமூலம் 'May it please your honour' என்ற தலைப்பில் நூலாக வெளி வந்திருக்கிறது. அந்த நூலின் 46ஆவது பக்கத்தில் நாதுராம கோட்சே பாடிய பிரார்த்தனை பாடல் தரப்பட்டிருக்கிறது.

இந்து-முஸ்லிம் ஒற்றுமையின் மூலம் சுதந்திரத்திற்கான போராட்டத்தை நடத்த வேண்டும் என்ற காந்தியாரின் கொள்கையை இந்தக் கூட்டம் - ஆரம்ப காலத்தில் இருந்தே கடுமையாக எதிர்த்து வந்தது!

காந்தியார் இந்துக்களை கோழையாக்கிவிட்டார் என்று அவர்கள் தொடர்ந்து குற்றம் சாட்டி வந்தனர். காங்கிரசுக்குள்ளே காந்தியார் எதிர்ப்பு உணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளில் இடைவிடாது ஈடுபட்டு வந்திருக்கின்றனர்.

ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கூடாரம் காந்தியார் மீது எப்படிப் பகைமை கொண்டிருந்தது என்பதை காந்தியார் உதவியாளர் பியாரிலால் தனது நூலில் கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார்:

"இந்து இராஷ்டிரம் அமைய வேண்டும் என்று சொன்ன முரட்டுத்தனமான கூட்டம், மராட்டிய மாநிலத்தில் இருந்தது. அவர்கள் பார்ப்பன பிற்போக்காளர்கள். அவர்களின் அரசியல் கருத்து காந்தியாருக்கு நேர் எதிரானதாகும். காந்தியாரின் அரசியல் கொள்கை, மராட்டியத் தலைவர் லோகமான்ய திலகருக்கு எதிரானதாகும் என்று அ வர்கள் கருதினர். திலகரின் கொள்கை மறைந்து போய்விடுமோ என்று அஞ்சினர். அதன் காரணமாக காந்தியாருக்கு எதிராக 25 ஆண்டு காலம் இடைவிடாது பிரச்சாரத்தை - அவர்கள் செய்து வந்தனர். காந்திஜியின் செல்வாக்கு வளருவது - அவர்களுக்கு விரக்தியை உண்டாக்கியது. இந்தக் கூட்டம் தான் 1934இல் புனேயில் காந்திஜி மீது வெடிகுண்டு வீச முயற்சி செய்தது. அப்போது காந்திஜி தீண்டாமை எதிர்ப்புப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்.

இப்போது அவர்கள் காந்திஜியை கொலை செய்திருக்கிற திட்டம் அவர்களால் மிகவும் திட்டமிடப்பட்ட ஒன்றாகும்.

அதற்கு சரியான இளைஞரைத் தேடிப் பிடித்து அதற்கான பயிற்சிகளை கொடுத்து திட்டமிட்டு இதைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் காலில் போட்டிருக்கும் ஷூக்களுக்குள் காந்தி, நேரு உள்பட பல காங்கிரஸ் தலைவர்களின் படம் இருக்கும். அந்தப் படத்தை வைத்து, துப்பாக்கியால் சுட்டு, பயிற்சி பெறுவது அவர்கள் வழக்கம்" என்று பியாரிலால் தனது நூலில் எழுதியிருக்கிறார். (பக்கம் 751)

## புதுச்சேரியில் பிரிகேடியர் பால்ராஜ்— "சமர்க்கள நாயகன்" நூல் வெளியீட்டு விழா






தமிழீழத்தை மீட்டெடுக்க தேசியத் தலைவர் மேதகு.வே.பிரபாகரன் அவர்களின் வழிகாட்டுதலில் போராடி, சிங்கள இராணுவத்தாலும் இந்திய இராணுவத்தாலும் வெல்லமுடியாத தளபதியாகத் திகழ்ந்த பிரிகேடியர். பால்ராஜ் அவர்களைப்பற்றிய "பிரிகேடியர் பால்ராஜ்- சமர்க்கள நாயகன்" (இராவணன் பதிப்பகம் பதிப்பித்த) நூல் வெளியீட்டு விழாப் பொதுக்கூட்டம் புதுச்சேரியில் பெரியார் திடலில் 13.12.2014 சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு புதுச்சேரி மாநிலத் திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்பாடுசெய்திருந்தது.

விழாவில் புதுச்சேரி மாநிலக் கழகத் தலைவர் தோழர். லோகு.அய்யப்பன் தலைமை உரையாற்றினார். அவ்வுரையில், "ஈழ விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கியது சிங்களர்கள் அல்ல! இந்திய ஆட்சியாளர்கள்!!" என்பதைக் குறிப்பிட்டார். தோழர் இர.தந்தைப் பிரியன் வரவேற்புரையாற்றினார்.நூலினைத் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர். கொளத்தூர் மணி வெளியிட, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் நிறுவனத் தலைவர் தோழர். தி.வேல்முருகன் பெற்றுக்கொண்டார். நூலின் முதல்படியினைத் தோழமை இயக்கங்களின் தலைவர்கள் பெற்றுக்கொண்டனர். கொளத்தூர் மணி ஈழ விடுதலைப் போராட்டத்தின் தொடக்ககால நிலையினையும் பிரிகேடியர், பால்ராஜ் அவர்களின் காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் ஈட்டிய மாபெரும் வெற்றிகளையும் நினைவுகூர்ந்தார். புலிகள் தமிழகத்தில் பயிற்சி எடுத்த செய்திகளையும், ஒவ்வொரு காலகட்டத்திலும் ஈழத்தமிழருக்கு இந்தியா செய்த துரோகங்களையும் நாம் இனிவரும் காலங்களில் ஆற்றவேண்டிய கடமைகள் என்ன என்பதையும் விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழரின் பாரம்பரிய இசையான பறையிசை முழங்க, தோழர்கள் தமிழீழத் தேசியக் கொடியை ஏந்திவர கருஞ்சட்டை அணிந்த குழந்தைகள் நூலினைப் புலிக்கொடி போர்த்தி தட்டில் ஏந்தி மேடைக்கு வந்து கொடுத்த பின்னர் நூல் வெளியிடப்பட்டது. தோழர்கள் தமிழ் இன உணர்வாளர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கூட்டத்தில் கலந்துகொண்டு சமர்க்கள நாயகன் நூலினைப் பெற்றுச் சென்றனர்.

## காந்தியார் மறைவு: பெரியார் வானொலியில் பேச்சு

*காந்தியார் மறைவு செய்தி வந்தவுடன், தமிழ்நாட்டு வானொலி நிலையம் தந்தை பெரியார் அவர்களை அழைத்துப் பேச செய்தது. கலவரங்களில் ஈடுபட வேண்டாம் என்று தந்தை பெரியார் வேண்டுகோள் விடுத்தார்.*

*"பெரியார் காந்தியவர்களின் விசனிக்கத்தக்க திடீர் மறைவு என்னைத் திடுக்கிட வைத்தது. இந்திய மக்களனைவரையுமே இந்நிகழ்ச்சி திடுக்கிட வைத்திருக்குமென உறுதியாக நம்புகிறேன். கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகவே காந்தியார் இப்பரந்த உபகண்ட மக்களின் எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டியாயிருந்து வந்தார். மக்களுக்கு அவரது தொண்டு மகத்தானது, அவரது இலட்சியக் கோட்பாடுகள் உலக மரியாதையினை பெற்றுவிட்டன. காந்தியார் மீது நடத்தியிருக்கும் மோசமான தாக்குதல் கண்டனத்துக்குரியதாகும். பல திறப்பட்ட எல்லா வகுப்பு மக்களுக்கும் நியாயமாகவும் பாரபட்சமற்ற முறையிலும் நடந்து கொண்ட காந்தியார், இக் கொடுந் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறார்களென்றால் இது மிகவும் வெறுக்கத்தக்கதாகும்.*

*இக்கொலையாளியை ஆட்டிப் படைக்கும் சதிகார கூட்டமொன்று திரைமறைவில் வேலை செய்து வரவேண்டும். வடஇந்தியாவில் நடைபெற்றுவரும் கலவரங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாயிருப்பது மதவெறியேயாகும். காந்தியாரின் இடத்தை நிறைவு செய்பவர் இந்நாட்டில் எவருமே இல்லை. மக்கள் தங்களது அரசியல் மத வேறுபாடுகளை மறந்து சகோதர பாவத்துடன் நடந்து கொள்வதே நாம் காந்தியாருக்குச் செய்யும் மரியாதையாகும்.*

*தென்னாட்டுத் திராவிடர்கள் இயல்பாகவே நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவ வைப்பர்."*

*('குடிஅரசு' 7.2.48)*

*குறிப்பு: பெரியார் பார்ப்பனர்களை ஒழிக்கும் ஒரு வாய்ப்பாக இதை கருதாமல், அமைதி காக்கச் சொன்னதால், தமிழ்நாட்டு பார்ப்பனர்களுக்கு பாதுகாப்பு கிடைத்தது. இந்த நாகரிகத்தை பார்ப்பனர்களிடம் எதிர்பார்க்க முடியுமா? (ஆர்)*

# பம்பாயில் வெடித்துக் கிளம்பிய பார்ப்பன எதிர்ப்பு: அன்றைய உள்துறை அமைச்சர் பதிவு செய்த வரலாறு

காந்தியார், ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களின் திட்டமிட்ட சதியால் படுகொலை செய்யப்பட்ட அந்த நேரத்தில் - மராட்டிய மக்கள் எப்படிப்பட்ட உணர்வுகளைக் கொண்டிருந்தார்கள் என்பதை புரிந்து கொண்டால் ஆர்.எஸ்.எஸ். கூட்டத்தின் பார்ப்பனத் தன்மையை தெளிவாகவே அடையாளம் கண்டுகொள்ள முடியும்!

மராட்டிய மண்ணில் - காந்தியார் கொலை செய்யப்பட்டார் என்ற செய்தி வந்தவுடன் பார்ப்பனர்களுக்கு எதிராக பார்ப்பனரல்லாத மக்கள் வீறுகொண்டு எழுந்தார்கள்.

கொலை செய்த கோட்சேவுக்கும், தங்களுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது என்று ஆர்.எஸ்.எஸ். காரர்கள் சாதிக்க முயன்றாலும், மராட்டிய மக்களுக்கு அந்த மண்ணிலே உருவான இயக்கத்தின் பின்னணிகள் புரியாதா? எனவே ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்கு எதிராக மட்டுமல்ல; பார்ப்பனர்களுக்கு எதிராகவே மராட்டிய பார்ப்பனரல்லாத சமுதாயம் கொதித்து எழுந்தது!

தமிழ்நாட்டுப் பார்ப்பன ஏடுகள் இந்த செய்திகளை எல்லாம் - அப்போது திட்டமிட்டு இருட்டடிப்பு செய்து விட்டன!

மராட்டிய மாநிலத்தில் மிகப் பெரிய கொந்தளிப்பு எழுந்த அந்தக் காலக்கட்டத்திலே, அந்த மாநிலத்தில் உள்துறை அமைச்சராக இருந்தவர் துவாரகா பிரசாத் மிஸ்ரா! அவரும் ஒரு பார்ப்பனர்தான்!

அப்போது மத்திய அரசின் உள்துறை அமைச்சராக இருந்த சர்தார் பட்டேல் அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான இவர், அன்றைக்கு காங்கிரஸ் கட்சியிலே மிகப் பெரிய புள்ளி!

இவர் "Living an era" என்ற தலைப்பில் தனது சுயசரிதையை எழுதியிருக்கிறார். அது இரண்டு பகுதிகளாக வெளி வந்திருக்கிறது! (விகாஸ் பதிப்பகத்தின் வெளியீடு)

காந்தியார் கொலை செய்யப்பட்டார் என்ற செய்தி வந்தவுடன் மராட்டிய மாநிலத்திலே ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களுக்கு எதிராக நடந்த மிகப் பெரிய கலவரத்தை அவர் தனது சுயசரிதையின் - இரண்டாவது தொகுப்பில் மிக விரிவாக விவரித்திருக்கிறார்!

ஆர்.எஸ்.எஸ்.காரர்களைக் கைதுசெய்து, கலவரத்தை அடக்குவதற்காக உத்தரவுகளைப் பிறப்பித்தவர் என்ற முறையில் அவருடைய கருத்துகள் மிக முக்கியத்துவம் உண்டு!

அந்த சுயசரிதையில் துவாரகா பிரசாத் மிஸ்ரா அவர்கள் விவரித்துள்ள தகவல்களை இங்கு தருகிறோம்:

"நான் ஆர்.எஸ்.எஸ். பற்றி சில ஆதாரப்பூர்வமான தகவல்களை வெளியிட்டு, சில உண்மைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். காரணம் - இந்தப் பிரச்சினையில் எனக்கு நேரடியான தொடர்பு உண்டு.

காந்தியார் கொலையில் ஒரு அரை டஜன் மராட்டியப் பார்ப்பனர்களுக்கு பங்கு உண்டு. அதன் காரணமாக ஏராளமான பார்ப்பனர்கள் கடும் விலை கொடுக்க வேண்டியதாயிற்று. மக்கள் தொகையில் 4 சதவீதம் பேர் மட்டுமே உள்ள பார்ப்பனர்கள் மராட்டியத்தில் எல்லா துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். அந்தக் காலத்தில் மகாராஷ்டிரியர்கள் என்று சொன்னாலே அது பார்ப்பனர்களைத்தான் குறிக்கும். பெரும்பாலான பார்ப்பனரல்லாத மக்கள் 'மராத்தா' என்று அழைக்கப் பட்டனர். தேசத் தந்தை காந்தியடிகளை கோட்சே சுட்டுக் கொன்ற செய்தி பரவியவுடன் பார்ப்பனரல்லாத மக்கள் ஆத்திரம் கொண்டனர். பார்ப்பனர்களுக்கு எதிராக திரண்டெழுந்தனர்.

அப்போது ஆர்.எஸ்.எஸ். தலைவர் - 'சர் சங் சாலக்', எம்.எஸ். கோல்வாக்கர் சென்னையில் இருந்தார். அங்குதான் அவருக்கு இந்தச் செய்தி கிடைத்தது. உடனே அவர், ஆர்.எஸ்.எஸ். தலைமை அலுவலகம் இருக்கும் இடமான நாக்பூருக்கு விரைந்தார். தலைமை அலுவலகத்திலே கோல்வாக்கர் நிர்வாகக் குழுக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார் என்று கேள்விப்பட்ட பார்ப்பனரல்லாதவர்கள் எல்லோரும் - அந்த அலுவலகத்தைச் சுற்றி சூழ்ந்து கொண்டு விட்டனர். அலுவலகக் கட்டடத்தையே தீ வைத்துக் கொளுத்தத் திட்டமிட்டனர். போலீஸ் அய்.ஜி. உடனே என்னுடைய அலுவலகத்துக்கு விரைந்து வந்தார். அலுவலகத்துக்குள்ளே இருக்கும் 40 பேரும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டு விடுவார்கள் என்றார்.

ஆர்.எஸ்.எஸ்.காரர்களில் சிலர் எனக்கு நண்பர்களாக இருந்தாலும் அரசியலில் எனக்கு எதிரிகளாகவே இருந்தனர். பல வகுப்பு வெறி பார்ப்பனர்கள் என்னைத் தீர்த்துக் கட்டப் போவதாக பல கொலை மிரட்டல் கடிதங்களையும் எழுதினர். இருந்தாலும் அந்த பகுதியின் உள்துறை அமைச்சர் என்ற பொறுப்பை ஏற்றிருக்கும் நான் எனது கடுமையான அரசியல் எதிரிகளாக இருந்தாலும் அவர்களை சாக விட்டு விடக்கூடாது; எனவே ஆர்.எஸ்.எஸ்.காரர்களை கைது செய்வதன் மூலம்தான் - பார்ப்பனரல்லாத மக்களிடையே அமைதியை ஏற்படுத்த முடியும் என்று கருதி அவர்களைக் கைது செய்ய உத்தரவிட்டேன்.

***பார்ப்பனர்களுக்கு எதிராக திரண்டவர்களில் காங்கிரஸ்காரர்களே மிக அதிகமாக இருந்தனர். அவர்கள் கட்சியில் முக்கிய பொறுப்புகளில் இருந்தனர்.***

கோல்வாக்கரும் அவரது சகாக்களும் கைது செய்யப்பட்டு நாக்பூர் சிறைக்கு அப்போதுதான் கொண்டு போய் இருப்பார்கள். அப்போது எனக்கு - இந்து மகாசபைத் தலைவர் எல்.வி. பராஞ்சிபேயிடமிருந்து டெலிபோன் செய்தி வருகிறது. ஒரு பொதுக் கூட்ட மேடையிலே என்னோடு மோதியவர் இவர். "ஒரு பெரிய கூட்டம் என் வீட்டை சூழ்ந்து கொண்டு தாக்குகிறது; என்னைக் காப்பாற்றுங்கள்" என்று டெலிபோனில் அவர் சொன்னார். "நீங்கள் உயிர் பிழைக்க வேண்டுமானால் அதற்கு இப்போது பாதுகாப்பான ஒரே இடம் நாக்பூர் சிறைதான்" என்று சொல்லி அவரைக் கைது செய்ய உத்தரவிட்டேன்.

பிறகு நான், காந்தியடிகளின் அஸ்தியை நர்மதை ஆற்றில் கரைப்பதற்கு டில்லிக்குச் சென்று விட்டேன். அந்த நேரத்தில் நாக்பூரில் பார்ப்பனரல்லாதாரின் எதிர்ப்புக் கிளர்ச்சி உச்சக்கட்டத்திற்குப் போய்விட்டது. உடனே புறப்பட்டு வருமாறு எனக்கு அவசரச் செய்தி வந்தது. நாக்பூருக்குச் சென்றபோது இதற்கு முன் எப்போதும் நடந்திராத அளவுக்கு கலவரங்கள் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்து அதிர்ச்சியுற்றேன்.

காந்தியடிகளைப் பார்ப்பனர்கள் கொலை செய்து விட்டார்களே என்ற ஆத்திரத்தில், பார்ப்பனர்களின் வீடுகள் தாக்கப்பட்டன. பார்ப்பனர்களின் கல்வி நிலையங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. பார்ப்பன நிறுவனமான ஜோஷி உயர்நிலைப் பள்ளி தீயில் எரிந்தபோது, தீயை அணைக்க வந்த தீயணைக்கும் படை மேலும் வர முடியாமல் பார்ப்பனரல்லாத மக்கள் கூட்டத்தால் திருப்பி விரட்டப்பட்டது; அதற்குப் பிறகு கண்டதும் சுடும் உத்தரவு போலீசாருக்குப் பிறப்பிக்கப் பட்டது; அதற்குப் பிறகுதான் நிலைமை ஓரளவு கட்டுக்குள் வந்தது.

பார்ப்பனர்களுக்கு எதிராக - திரண்ட பார்ப்பனரல்லாதார்களில் காங்கிரஸ்காரர்களே மிக அதிகமாக இருந்தனர். காங்கிரஸ் கட்சியின் முக்கிய பொறுப்புகளில் இருந்த பலரும் இந்த யுத்தத்தில் இறங்கினர். கலவரத்தை ஒட்டி கைது செய்யப்பட்டவர்களின் 100க்கும் அதிகமானவர்கள் காங்கிரஸ்காரர்கள்தான்!

காந்தியடிகள் கொலையைத் தொடர்ந்து, பார்ப்பனரர்களுக்கு எதிர்ப்பு தீவிரமானது; நாக்பூர், பேரார் ஆகிய இடங்களில் காங்கிரசார் மாநாடு கூட்டினர். அங்கே பேசிய பேச்சு இரகசிய புலனாய்வுத் துறை மூலம் எனக்குக் கிடைத்தது. "காந்தியாரைக் கொலை செய்தது ஒரு பார்ப்பனர். எனவே இந்தப் பகுதியின் நிர்வாகப் பொறுப்பு எந்தப் பார்ப்பனரிடமும் இருக்கக் கூடாது. மத்திய அரசிலே பார்ப்பன அமைச்சர்கள் இருக்கிறார்கள். இது காங்கிரஸ் கட்சிக்கே மிகப் பெரிய சவாலாகும்" என்று அந்தக் கூட்டத்திலே காங்கிரசார் பேசினர்.

தொடர்ந்து பிப்ரவரி 4 ஆம் தேதி ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்பட்டது.

"நாட்டின் பல பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் வன்முறையில் இறங்கி, கலவரத்தை உருவாக்கி வருகிறார்கள். அரசு இதைத் தடுப்பதற்காக - அந்த அமைப்பை சட்ட விரோதமாக அறிவிக்கிறது" என்று தடை உத்தரவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தடையை எதிர்த்து கிளர்ச்சிகள் நடத்துமாறு கோல்வாக்கர் ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்கு கடிதம் எழுதினார். ஆர்.எஸ்.எஸ்.காரர்களும் ஆங்காங்கே கிளர்ச்சிகளை நடத்தினர். அதே நேரத்தில் அன்றாடம் பார்ப்பனர் எதிர்ப்புக் கூட்டங்களும் நடந்து கொண்டே இருந்தன. கோல்வாக்கரை தூக்கில் போடு என்ற முழக்கங்கள் வீதிகள் முழுதும் எதிரொலித்தன.

ஒரு பக்கம் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தாலும், இன்னொருப் பக்கம் கோல்வாக்கர் அரசாங்கத்திடம் மனு போட்டுக் கொண்டே இருந்தார். உள்துறை அமைச்சர் பட்டேலுக்கும், கோல்வாக்கருக்கும் கடிதப் போக்குவரத்துகள் நடந்தன. அவ்வவ்போது கைதான ஆர்.எஸ்.எஸ். காரர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் தடை நீக்கம் செய்யப்படவில்லை.

இவ்வாறு அன்றைய சூழ்நிலையை துவாரகா பிரசாத் மிஸ்ரா தனது சுயசரிதையில் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்!

இந்தக் கருத்துகள் விளக்குகின்ற உண்மைகள் என்ன?

1. காந்தியார் கொலையில் அரைடஜன் பார்ப்பனர்கள் தொடர்பு கொண்டிருந்தார்கள்.
2. காந்தியார் கொலை செய்யப்பட்டார் என்ற செய்தி வந்தவுடன் மராட்டியத்தில் அது பார்ப்பன எதிர்ப்புப் போராகத்தான் உருவெடுத்தது.
3. இந்து மகாசபைக்காரர்தான் கோட்சே என்று ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் சாதித்தாலும் மராட்டிய மக்கள் ஆர்.எஸ்.எஸ்.காரர்களின் சதி இதில் அடங்கியிருக்கிறது என்ற உண்மையை உறுதியாகப் புரிந்திருந்தனர்.
4. அன்றைய மராட்டிய உள்துறை அமைச்சராக துவாரக பிரசாத் மிஸ்ரா என்ற பார்ப்பனர் மட்டும் இருந்திருக்காவிட்டால் ஆர்.எஸ்.எஸ். கூட்டம் பூண்டோடு அழிக்கப்பட்டிருக்கும்.
5. அன்றைய மராட்டிய காங்கிரஸ் கட்சியே பார்ப்பனர் எதிர்ப்புப் போரில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டது.
6. ஆர்.எஸ்.எஸ்.சுக்கு தடை விதிக்கப்பட்டு, பார்ப்பனர்கள் எல்லாம் சிறைப்பிடிக்கப்படாமல் இருந்திருந்தால் அவர்களின் வாழ்வே அப்போது முடிக்கப்பட்டிருக்கும்.
7. கடைசியாக - வீரம் பேசிய ஆர்.எஸ்.எஸ். கூட்டம், அப்போதும் ஆட்சியின் கால்களில் விழுந்து அரசியலில் ஈடுபட மாட்டோம் என்று உறுதி தந்து அமைப்புக்கு புதிய சட்டத்தையே வகுத்துக் கொள்வதாக உறுதி அளித்து-'சரணாகதி' அடைந்தது.

**('ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம்' நூலிலிருந்து)**

# “பார்ப்பனர் தீர்த்துக் கட்டி விடுவார்கள்” காந்தியாரை எச்சரித்தார் பெரியார்

1927இல் பெங்களூரில், பெரியார், காந்தி அழைப்பை ஏற்று அவரை சந்தித்துப் பேசினார். அப்போது பெரியார் காங்கிரசை விட்டு விலகி, 2 ஆண்டுகள் ஆகிவிட்டன. இராஜாஜி உடனிருந்தார்.

“இந்து மதத்தில் இருந்துகொண்டே நாமெல்லாம் சீர்திருத்தம் செய்யலாம்” என்றார் காந்தி. “இப்படி செய்தால் பார்ப்பான் உங்களை விட்டு வைக்க மாட்டான்” என்றார் பெரியார். “இராஜாஜி கூடவா அப்படி?” என்று காந்தி கேட்கிறார். உடனே பெரியார், “இராஜாஜி திறமையானவர் என்பதை ஒத்துக் கொள்கிறேன். புத்திக் கூர்மையானவர் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால், அவர் இனத்திற்கு அதை பயன்படுத்துகிறார். பொது மக்களுக்கு பயன்படுத்துவதில்லை” என்று இராஜாஜியை வைத்துக் கொண்டே சொன்னார். “அப்படியா, பார்ப்பனரில் யாருமே யோக்கியன் இல்லையா? கோபாலகிருஷ்ண கோகலே யோக்கியமாக யில்லையா?” என்று கேட்கிறார். “மகாத்மாவின் கண்ணிற்கே ஒருவர்தான் தெரிகிறார். என் கண்ணிற்கு என்ன தெரியும்?” என்று சொல்லி பெரியார் கிளம்புகிறார். அப்போது பெரியார் சொல்கிறார், “நீங்கள் இந்து மதத்திற்கு ஜால்ரா போடும்வரை பார்ப்பான் உங்களை விட்டு வைத்திருப்பான். எப்போதாவது நீங்கள் இந்து மதத்திற்கு எதிர்ப்பாக இருப்பது தெரிந்தால் உம்மை ஒழித்து விடுவான்” என்றார் 1927இல் பெரியார்.

1947இல் ‘சுதந்திர’த்துக்குப் பின்னால் தமிழகத்தில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்தபோது, இடஒதுக்கீடு பிரச்சினை வருகிறது. இட ஒதுக்கீடு என்பது தமிழ்நாட்டில் மட்டும்தான் இருந்தது. மராட்டியத்தில் கொஞ்சம் இருந்தது. இடஒதுக்கீட்டுக்கு எதிராக பார்ப்பனர்கள் அவ்வப்போது பிரச்சினை செய்து கொண்டிருந்தார்கள். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் இட ஒதுக்கீட்டை கொஞ்சம் அதிகப்படுத்தினார். பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு என தனி ஒதுக்கீடு அறிவித்தார். உடனே ஈ.வெ.ராமசாமி, தாடியுள்ள ராமசாமி இவன்; ஓமந்தூர் ராமசாமி தாடியில்லா ராமசாமி என்று பார்ப்பனர்கள் சொன்னார்கள். அவர் காங்கிரஸ்காரர், பெரியார் காங்கிரசை எதிர்த்துக் கொண்டிருந்தவர். இடஒதுக்கீடு என்ற திட்டத்தால் எங்களைப் போன்ற பார்ப்பனருக்கு இடம் கிடைக்கவில்லை என்று காந்தி யிடம் புகார் கொடுத்தனர். ஓ.பி. ராமசாமி ரெட்டியாரும் போயிருந்தார். ஆமாம் என்று தனது தரப்பு நியாயங்களைச் சொன்னார்.

உடனே காந்தி பார்ப்பனரிடம் கேட்டார்: “ஏய்யா உங்களுக்கு எதற்கு எஞ்சினியர் வேலை? கட்டிடம் கட்டுகிற வேலை, சூத்திரன் பண்ண வேண்டிய வேலை. பார்ப்பனர்கள் வேதங்கள் படிக்க வேண்டும், வேதம் ஓத வேண்டும் இப்படித்தான் சொல்லுகிறது வேதம். நீங்கள் அந்த வேலையைப் பாருங்களேன்” என்று எடுத்துச் சொன்னார். அப்பொழுதும் பெரியார் சொன்னார், ‘காந்தி இப்படிச் சொல்லிவிட்டாரா, இனி அவரைப் பார்ப்பான் வைத்திருக்க மாட்டான்’ என்று 1947இல் பெரியார் சொன்னார். 1948இல் காந்தி சுடப்பட்டார்.

காந்தி கொலையைப் பற்றி சொல்லுகிற பொழுது கோட்சே ஆர்.எஸ்.எஸ்.காரன் இல்லை என்பது ஒரு வாதம். அந்த கொலை வழக்கிலே கோபால் கோட்சேவும் கைது செய்யப்படுகிறார். வழக்கு நடந்தது. இருவருக்கு தூக்கு தண்டனையும் மற்றவர்களுக்கு ஆயுள் தண்டனையும் வழங்கினார்கள். தண்டனை காலத்துக்குப் பிறகு விடுதலைப் பெற்று வந்தவர் கோபால் கோட்சே. ஒரு புத்தகம் எழுதினார். “நான் ஏன் காந்தியை கொன்றேன்” என்பது அந்த புத்தகத்தின் பெயர். அந்த புத்தகத்தில் “நாதுராம் கோட்சேயும் நானும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள்தான். அத்வானி இதை மறுப்பது அவரது கோழைத்தனத்தைக் காட்டுகிறது” என்று சொல்கிறார். இன்னொரு ஆதாரம் என்னவென்றால் 1912 ஆம் ஆண்டு கோட்சே பிறக்கிறார். 1932ஆம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ்.இல் பிரச்சாரகராக இருக்கிறார். 1938இல் ஐதராபாத் நிஜாமை எதிர்த்து (இசுலாமியர் என்பதற்காக) போராட்டம் நடத்துகிறார். இதை ஆர்.எஸ்.எஸ். தான் முன்னின்று நடத்துகிறது. அதில் கைதாகி ஐதராபாத் சிறையில் 20 மாத சிறை தண்டனை பெறுகிறார் நாதுராம் கோட்சே. 20 மாதம் சிறையில் இருக்கிறார். அப்போது கோட்சே தான் சிறையிலிருந்தவர்களுக்கு ஆர்.எஸ்.எஸ். பயிற்சி வகுப்புகளை எடுத்துக் கொண்டிருக்கிறார். அந்த வழக்கில் தேஷ்பாண்டே என்பவரும் சிறைபட்டு வருகிறார்.

அவர் யாரென்றால் இந்து மகாசபையின் பொதுச் செயலாளர். அவரும் ஐதராபாத் போராட்டத்தின்போது கைது செய்யப்பட்டவர். அவர் கோட்சேவிடம் என்ன சொல்கிறார் என்றால், நீ ஆர்.எஸ்.எஸ்.சில் இருந்தாய். ஆனால், நீ அரைகுறையாய் இருந்துவிட்டு திரும்பி இப்ப வந்து பயிற்சி தந்தால், எப்படி? இன்னொரு தடவை ஆர்.எஸ்.எஸ்.காரன் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறார். அப்போது எல்லோரையும் அமர வைத்து மீண்டும் ஆர்.எஸ்.எஸ். காரனென்று கோட்சே உறுதியை புதுப்பித்துக் கொண்ட பின்னால் தான் பயிற்சிக்கே அவரை அனுமதிக்கிறார்கள். நீதிபதி எஸ்.மோகன் எழுதிய நூலில் இதை குறிப்பிடுகிறார். இவர் உயர்நீதிமன்ற நீதிபதியாக



இருந்தவர்; கர்நாடக உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக இருந்தவர்; உச்சநீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தவர்; அவர் ‘தியாக தீபம்’ என்று ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதில் காந்தியினுடைய கொலை வழக்கைப் பற்றி எல்லா தகவல்களையும் திரட்டி, எல்லோருடைய வாக்குமூலங்களையும் ஒன்று சேகரித்து ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். ஸ்ரீராம் டிரஸ்ட் வெளியிட்டிருக்கிறது. சென்னை 145 லிங்கு செட்டி தெருவிலிருந்து இதை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த புத்தகத்தில்தான் இந்த செய்திகளையெல்லாம் எழுதியுள்ளார்.

“இந்தியாவின் முதல் நிதியமைச்சரும் சுயமரியாதைக் காரருமான சர். ஆர்.கே.சண்முகம் செட்டியார்தான் விடுதலைப் பெற்ற பிறகு இந்தியாவிற்கும் பாகிஸ் தானுக்கும் பொருளாதார கணக்குகளை தீர்த்து வைத்தவர். இந்தியா, பாகிஸ்தானுக்கு 55 கோடி ரூபாய் தரவேண்டும் என்று கணக்கு தீர்கிறது. இதனை பட்டேல் தர முடியாது” என்று சொல்கிறார்.

ஆரம்பத்தில் ஒத்துக்கொண்ட பட்டேல் இப்பொழுது தர முடியாது என்று அறிவிக்கிறார். 12ஆம் தேதி காலையில் பத்திரிகையில் வருகிறது. மாலை வழக்கம் போல் காந்தி உண்ணாவிரதம் ஆரம்பிக்கிறார். அது 15ஆவது உண்ணாவிரதம். சாகும் வரை என்று சொன்ன 15ஆவது உண்ணாவிரதம். இது மட்டும் காரணம் இல்லை. அப்பொழுது காந்தி சொல்கிறார், 1176 மசூதிகள் கோவில்கள் ஆக்கப்பட்டுள்ளன. ஒப்புக்கொண்ட 55 கோடியை பாகிஸ்தானுக்கு தர வேண்டும். 1176 மசூதிகள் மீண்டும் மசூதிகள் ஆக்கப்பட வேண்டும் என்று சொல்லி 12.1.1948இல் உண்ணாவிரதத்தை தொடங்குகிறார் காந்தி.

இந்தப் போராட்டத்தை காந்தி தொடருவதற்கு முன்பே கோட்சே கும்பல் கொலை செய்ய வேண்டும் என திட்டம் போட்டிருந்தனர். அதற்கு ஆதாரம் இருக்கிறது.

13ஆம் தேதியே நாராயண ஆப்தே தன் மனைவி சம்பூதி பெயரில் (International Assurance Company Limited) என்ற நிறுவனத்தில் 2000 ரூபாய்க்கு இன்சூரன்ஸ் பாலிசி எடுக்கிறான். ஏனென்றால் நாம் இறந்தால்கூட அவர்கள் பிழைத்துக் கொள்வார்கள் என்பதால். 14ஆம் தேதி கோபால் கோட்சே போய் அவன் மனைவி சிந்துபாத்தை நாமினியாக வைத்து 3000 ரூபாய்க்கு பாலிசி எடுத்துக் கொள்கிறான். அவன் 13ஆம் தேதி, இவன் 14ஆம் தேதி, மனைவிகளின் பெயரில் இன்சூரன்ஸ் பாலிசி எடுக்கிறார்கள். காந்தி 12ஆம் தேதி உண்ணாவிரதம் இருந்த உடனே முடிவு செய்து விட்டார்கள். முடித்து விட வேண்டும காந்தியை என்று. இவங்க இடித்தது ஒரு மசூதியை மட்டுமல்ல, 1176 மசூதிகள் இடிக்கப்பட்டிருப்பதாக காந்தி தன்னுடைய அறிக்கையில் சொல்கிறார். அதை நீதிபதி மோகன் அவர்கள் அந்த வழக்கிலிருந்தே ஆதாரங்களுடன் எடுத்துச் சொல்லியிருக்கிறார். காந்தி கொலைக்கு கோட்சே புறப்பட்டபோது தன் கையில் கீதை ஒன்றை எடுத்துக் கொண்டான். அகண்ட விசால இந்து சாம்ராஜ்ஜியம் இருக்கிறதல்லவா? அதாவது பர்மா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் எல்லாம் சேர்ந்த அந்த படத்தை கையில் எடுத்துக் கொள்கிறான். இன்னொன்று ஆர்.எஸ்.எஸ். கொடி இவை மூன்றையும் எடுத்துக் கொண்டு தான் பயணத்தை தொடங்கினான் என்று கோபால் கோட்சே தன்னுடைய வாக்குமூலத்தில் சொல்கிறார். புனாவில் இருந்து கொலை செய்ய புறப்படும் முன் ஆர்.எஸ்.எஸ். கொடி, கீதை, அகண்ட இந்து சாம்ராஜ்ஜியத்தின் படம் இவை மூன்றையும் கையில் எடுத்துக் கொண்டு போகிறார். இவரை என்னவென்று சொல்லுகிறீர்கள். இவர் ஆர்.எஸ்.எஸ்.காரன் இல்லை என்று சொல்கிறார்களா?

**– கொளத்தூர் மணி , ‘காந்தி படுகொலையில் பார்ப்பனர் பின்னணி’ நூலிலிருந்து**

## ஜாதி ஒழிப்பு முன்னணி மதுரையில் நடத்திய வெண்மணி நினைவு நாள்

*சாதி ஒழிப்பு முன்னணி டிச.25 அன்று, வெண்மணி ஈகியர் நாளையொட்டி மதுரையில் கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கத்திற்கு சாதி ஒழிப்பு முன்னணியின் தலைவர் த.சிவராமன் தலைமை தாங்கினார். தலைமைக் குழுத் தோழர்கள் இரெ. இளங்கோவன், மு. மாரியப்பன், ஜா.எமன், க. முத்துச்சாமி, ஆ. காளிமுத்து, பா.காசிமாயன், மு. சங்கர், ப. திராவிடன், ச. மனோகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சாதி ஒழிப்பு முன்னணியின் மையக் குழு உறுப்பினர் வ.இரமணி வரவேற்புரை நிகழ்த்தினார். கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ.) மக்கள் விடுதலை தலைவர் ஜெய. சிதம்பரநாதன் தொடக்கவுரை நிகழ்த்தினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ்நாடு மக்கள் கட்சியின் தலைவர் மீ.த.பாண்டியன், தமிழக மக்கள் சனநாயகக் கட்சியின் தலைவர் மீ.த. பாண்டியன், தமிழக மக்கள் சனநாயகக் கட்சியின் தலைவர் கே.எம்.செரீப், அரசியல் செயல்பாட்டாளர் வ.கீதா, சாதி ஒழிப்பு முன்னணியின் தலைவர் மு. நடராசன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ.) மக்கள் விடுதலையின் பொதுச் செயலாளர் பாலன் நிறைவுரை நிகழ்த்தினார். சுப. இராதிகா, வானவில் எழுச்சி மிகு பாடல்கள் பாடினர். தமிழ்நாடு இளைஞர் இயக்க திருச்சி மாவட்டக் குழுவினர் மதுப் பழக்கத்திற்கு எதிரான நாடகம் போட்டனர். சாதி ஒழிப்பு முன்னணியின் மையக் குழு உறுப்பினர் மணி பாபா நன்றியுரை நிகழ்த்தினார்.*

# காந்தி எழுதாத கட்டுரையை எழுதியதாகக் கூறிய பொய்யர்கள்

***பாபர் மசூதிக்குள் நள்ளிரவில் ராமன் சிலைகளைப் போட்டு, அது 'ராமஜென்ம பூமி' என்று சங்பரிவாரங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை காந்தி ஆதரித்தார் என்று உண்மைக்கு மாறாக பொய்யான ஆதாரங்களை பா.ஜ.க. உயர்மட்டத் தலைவர்களே எழுதினார்கள். இந்தப் புரட்டுகளை அம்பலப்படுத்தி பிரபல எழுத்தாளர் ஏ.ஜி. நூரானி எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்:***

காந்திஜி எந்த இலட்சியங்களுக்காகப் பாடுபட்டாரோ அவற்றை நிராகரித்து வரும் சங் பரிவார் தனது அரசியலை நியாயப்படுத்திக் கொள்ள காந்திஜியின் பெயரையே பயன்படுத்திக் கொள்ளும் மோசடியை செய்து வருகிறது. பிரிட்டனில் செயல்படும் விஸ்வ இந்து பரிஷத்தின் தலைவரான எல்.சி. பௌன்ஞ் என்பவர் அயோத்தி பிரச்சினைப் பற்றி இந்துக்களின் கருத்து என்ன என்று விளக்கக் கடிதம் ஒன்றை பிரிட்டனில் உள்ள இந்திய தூதரக அதிகாரியிடம் அளித்தார். இராம ஜென்ம பூமி பற்றிய சர்ச்சையைப் பற்றி காந்திஜியின் கருத்துக்கள் 27.7.1927 தேதியிட்ட **'நவஜீவன்'** பத்திரிகையில் வெளி வந்துள்ளதாகக் கூறிய அவர் அவற்றைத் தமது கடிதத்தில் மேற்கோள் காட்டியிருந்தார். காந்திஜியின் கருத்துக்கள் சங் பரிவாரின் கருத்துக்களை ஆதரிக்கும் வகையில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார் (ஆர்கனைசர் செப். 23, 1990).

இரண்டு மாதங்கள் கழித்து பா.ஜ.க.வும் இதே முறையில் செயல்பட்டது. அப்போதைய பிரதமர் சந்திரசேகருக்கு பா.ஜ.க. பொதுச் செயலாளர் லால் கிருஷ்ண சர்மா கடிதம் எழுதினார். இராம ஜென்ம பூமி பற்றி காந்தியின் கருத்துக்கள் 27.7.1937 தேதியிட்ட **'ஹரிஜன் சேவக்'** பத்திரிகையில் (நவஜீவன் பத்திரிகையில் அல்ல) வெளி வந்ததாகக் குறிப்பிட்டு அக்கட்டுரையிலிருந்து இரண்டு பத்திகளை மேற்கோள் காட்டியிருந்தார். இச்செய்தி 1990 ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் தேதியன்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையில் வெளி வந்தது என்றும் குறிப்பிடப்பட்ட 'ஹரிஜன் சேவக்' இந்தி வார இதழைத் தாமே படித்துப் பார்த்ததாகவும் கிஷன்லால் சர்மா குறிப்பிட்டிருந்தார்.

இச்செய்தி பொய்யானது என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையின் புலனாய்வுப் பிரிவு செய்தி வெளியிட்டது. காந்திஜி அப்படிப்பட்ட கட்டுரை எதனையும் எழுதவில்லை. இதுபற்றி சர்மாவிடம் பத்திரிகையாளர்கள் வினாக்களை தொடுத்தபோது 'விஸ்வாஸ்' என்ற உள்ளூர் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த கட்டுரையிலிருந்து இதனைத் தான் தெரிந்து கொண்டதாக அவர் பதில் அளித்தார். பின்னர் வேறுவிதமாகப் பேச ஆரம்பித்தார். தான் கூறிய செய்தி சரியா? தவறா? என்று ஆய்வு செய்யும் பொறுப்பு பிரதமருடையதுதான் என்று குறிப்பிட்டிருந்தார். அந்தச் செய்தி ஆதாரபூர்வமற்றது என்றால் பிரதமர் மறுப்புச் செய்தி வெளியிட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

"கட்டுரை வெளி வந்ததாகச் சொல்லப்படும் ஹரிஜன் சேவக் அல்லது நவஜீவன் பத்திரிகையின் பிரதி ஒன்றை அளிக்குமாறு பா.ஜ.க. மத்திய அலுவலகத்துக்கு 'டைம்ஸ் ஆப் இந்தியா' மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்தது. ஆனால் குறிப்பிட்ட பத்திரிகைகளின் பிரதிகளை அதனால் அளிக்க முடியவில்லை" என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகை அம்பலப்படுத்தியது (டிசம்பர் 4, 1990).

பாபர் மசூதி பிரச்சினையில் சங் பரிவாரின் நிலைக்கு காந்தியின் ஆதரவு இருந்தது என்ற செய்தி பொய்யானது என்று நிரூபிக்கப்பட்ட பிறகும் மீண்டும் ஒருமுறை காந்தியை மேற்கோள் காட்டி பிரதமருக்கு இதே சர்மா கடிதம் எழுதினார். காந்தி பல்வேறு சமயங்களில் எழுதியவை பல நூல் தொகுதிகளாக வெளியிடப்பட்டிருந்தது. அவற்றில் 26ஆவது தொகுதியின் 65ஆவது பக்கத்தை மேற்கோள் காட்டியிருந்தார். 'யங் இந்தியா' பத்திரிகையின் வாசகர் ஒருவர் எழுதிய கடிதத்துக்கு காந்தி அனுப்பியிருந்த பதிலில், "ஒரு மசூதி முறையான அங்கீகாரம் பெறப்படாமலோ அல்லது வலுக்கட்டாயமான முறையிலோ கட்டப்பட்டிருந்தால் அதனைப் புனிதமானது என்று நான் கருத மாட்டேன்" என்று குறிப்பிட்டதாக மேற்கோள் காட்டப்பட்டிருந்தது. 1925 ஆம் ஆண்டு பிப்ரவரி 5ஆம் தேதி வெளியிடப்பட்ட 'யங் இந்தியா' இதழிலும், 1950ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் தேதி வெளியிடப்பட்ட 'சேவக்' இதழிலும் காந்திஜியின் பதில் பிரசுரிக்கப்பட்டிருந்ததாக சர்மாவின் கடிதம் தெரிவித்தது ('தி ஸ்டேட்ஸ்மேன், டிச. 6, 1950). இதுவும் பொய் என்று நிரூபிக்கப்பட்டது. இதே சர்மா 1990இல் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் அளித்த உறுதிமொழியை நினைவுகூர்வது நல்லது. "எனது கட்சியோ அல்லது நானோ எந்த மசூதியையும் இடிப்பதை ஆதரிக்கவில்லை. அதனால்தான் பாபர் மசூதிக் கட்டிடத்தை கௌரவமான முறையில் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று பா.ஜ.க. தலைவர் அத்வானி ஆலோசனை தெரிவித்துள்ளார்" என்று சர்மா பிரதமரிடம் வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால் அவர் கடிதம் எழுதிய நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் கழித்து அத்வானியின் முன்னிலையில் அவரது ஒப்புதலுடன் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இப்போது மீண்டும் காந்தியின் கருத்துகள் பற்றிய செய்திக்கு வருவோம்.

காந்தியின் எழுத்துக்கள் இடம் பெற்ற 90 தொகுதிகளையும் ஆய்வு செய்த அஜய் மற்றும் சகுந்தலா சிங் இருவரும் இப்படிப்பட்ட கடிதம் எதுவும் அத்தொகுதிகளில் இடம் பெறவில்லை என்பதைக் கண்டனர். இதுபற்றி சர்மாவோ அல்லது காந்தியின் சீடர்கள் எவராவதோ விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர் ('மெயின் ஸ்டீரீம்', ஜனவரி 12, 1991). 'மெயின் ஸ்டீரீம்' பத்திரிகையின் அதே இதழில் 1947 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதியன்று காந்திஜி பேசிய பேச்சை மேற்கோள் காட்டி விஷ்ணுநாகர் என்பவர் எழுதிய கட்டுரையும் வெளி வந்திருந்தது. மசூதிகளைக் கைப்பற்றுவது பற்றியும் அவற்றைக் கோயில்களாக மாற்றுவதைப் பற்றியும் குறிப்பிட்ட காந்திஜி, அதில் பின்வருமாறு கூறியுள்ளார். "ஒரு மசூதியை வலுக்கட்டாயமாகக் கைப்பற்றுவது இந்து மதத்திற்கும் சீக்கிய மதத்திற்கும் அவமானத்தை ஏற்படுத்தும். மசூதிகளுக்குள் வைக்கப்பட்ட கடவுள் சிலைகளை அப்புறப்படுத்துவது இந்துக்களின் கடமையாகும். மசூதிகளுக்குள் சிலைகளை வைப்பதன் மூலம் மசூதிகளின் புனிதத்தைக் கெடுப்பதுடன் சிலைகளையும் அவர்கள் அவமானப்படுத்துகிறார்கள்" என்று அக் கட்டுரையில் மேற்கோள் காட்டப்பட்டிருந்தது.


'பீப்பிள்ஸ் டெமாக்ரசி' (டிச.09,1990) வெளியிட்ட இரு கட்டுரைகள், காந்தியைப் பற்றி சங்பரிவாரங்கள் பரப்பிய தவறான தகவல்களை ஆதாரப்பூர்வமாக அம்பலப்படுத்தியிருந்தது. 'நவஜீவன்' பத்திரிகையில் (ஜூலை 27, 1937) வெளிவந்ததாகக் கூறி, ஒரு கட்டுரையை ஷரத் மேற்கோள் காட்டியிருந்தார். பா.ஜ.க. செயலாளர் சர்மா, அதே தேதியிட்ட 'ஹரிஜன் சேவக்' பத்திரிகையில் காந்திஜியின் கட்டுரை வந்ததாகக் கூறியிருந்தார். அந்தத் தேதியிட்ட 'ஹரிஜன் சேவக்' பத்திரிகையே வெளியிடப்படவில்லை என்று நிரூபித்தது 'டைம்ஸ் ஆப் இந்தியா'. அதற்குப் பிறகும் பா.ஜ.க. செயலாளர் சர்மா பொய்யை நிறுத்தவில்லை. அவர் பின்னர் மற்றொரு மேற்கோளையும் காட்டி சிக்கலில் மாட்டிக் கொண்டார்.

1950ஆம் ஆண்டு ஜூலை 13ஆம் தேதியிட்ட 'ஹரிஜன் சேவக்' இதழில் 'ஜோடிக்கப்பட்ட கடிதமும் கட்டுரையும்' (Concocted letter and article) என்ற தலைப்பில் ஜீவன்ஜி தேசாய் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். இந்தக் கட்டுரையைத் தான் 'பீப்பிள்ஸ் டெமாக்ரசி' இதழ் மறுபிரசுரமாக வெளியிட்டிருந்தது. 'இராமஜென்ம பூமி எதிர்ப்பாளர்களின் கருப்பு நடவடிக்கைகள்' என்ற தலைப்பில் ராம்கோபால் பாண்டே என்பவர் புத்தகம் ஒன்றை எழுதியிருந்தார். இராமஜென்ம பூமி சேவா சமிதி அந்த நூலைப் பிரசுரித்தது. அந்தப் புத்தகத்தில் தாம் 1937ஆம் ஆண்டு மே 15 ஆம் தேதியன்று காந்திஜிக்கு ஒரு கடிதம் எழுதியதாகவும் அதற்கு காந்திஜியின் தனிச் செயலாளரான மகாதேவ் தேசாய் வார்தாவிலிருந்து மே 20ஆம் தேதி பதில் எழுதியதாகவும் அந்த நூலில் குறிப்பிட்டிருந்தார். பாண்டேயின் கடிதம் குறித்து தமது கருத்துக்களை 'நவஜீவன்' இந்தி மொழி இதழிலோ அல்லது ஹரிஜன் இதழிலோ காந்திஜி விளக்குவார் என்று மகாதேவ் தேசாய் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாகவும் பாண்டே தமது நூலில் குறிப்பிட்டிருந்தார். ஜூலை 27 (1937) 'நவஜீவன்' இதழில் காந்திஜியின் கட்டுரை வந்ததாகக் கூறி அதனை முழுமையாகத் தமது நூலில் பாண்டே வெளியிட்டிருந்தார்.,

மகாதேவ் தேசாயின் கடிதமும், காந்திஜி 'நவஜீவன்' பத்திரிகையில் எழுதியதாக மேற்கோள் காட்டப்பட்ட கருத்துக்களும் போலியானவை என்று ஜீவன்ஜி தேசாய் முகத்திரையைக் கிழித்தார். 1937ஆம் ஆண்டில் இந்தி மொழியில் 'நவஜீவன்' பத்திரிகையே வெளியிடப்படவில்லை. 'நவஜீவன்' பத்திரிகையின் இந்தி பதிப்பாக 'ஹரிஜன் சேவக்' தான் வெளியிடப்பட்டு வந்தது. 'ஹரிஜன் சேவக்' மற்றும் 'ஹரிஜன்' (ஆங்கிலம்) பத்திரிகைகள் தொடர்பான கோப்புகள் அனைத்தையும் தாம் பரிசீலனை செய்ததாகவும் காந்திஜி எழுதியதாகக் கூறப்பட்ட கட்டுரை ஜோடிக்கப்பட்டது என்றும் இல்லாத ஒன்று என்றும் ஜீவன்ஜி தேசாய் தனது கட்டுரையில் அம்பலப்படுத்தினார். அது தொடர்பான மற்ற விவரங்களும் இந்த முடிவை உறுதிப்படுத்தின. 1937ஆம் ஆண்டு மே 20ஆம் தேதி வாக்கில் காந்திஜியோ, மகாதேவ் தேசாயோ வார்தாவில் இருக்கவில்லை. அவர்கள் அப்போது குஜராத்தில் இருந்தனர்.

காந்திஜியின் நெருங்கிய கூட்டாளியான கேஜி. மஷ்ருவாலா என்பவர் எழுதி 1950 ஆகஸ்டு 19 ஆம் தேதியிட்ட 'ஹரிஜன் சேவக்' மற்றும் 'ஹரிஜன்' இதழ்களில் வெளிவந்த கட்டுரை ஒன்றையும் 'பீப்பிள்ஸ் டெமாக்ரசி' பிரசுரித்திருந்தது. 'அயோத்தி முஸ்லிம்கள்' (Muslims in Ayodhya) என்பது அக்கட்டுரையின் தலைப்பு. 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 23ஆம் தேதியன்று பாபர் மசூதி கைப்பற்றப்பட்டது குறித்து, அதே காலத்தில் எழுதப்பட்டிருந்த அதிகாரப்பூர்வமான கட்டுரை அது. அட்சய பிரம்மச்சாரி என்பவர் அளித்த சாட்சியத்தின் அடிப்படையில் அக்கட்டுரை எழுதப்பட்டிருந்தது. மசூதி கைப்பற்றப்பட்ட விதம் குறித்து சங்பரிவார் பரப்பி வரும் பொய்களை அம்பலப்படுத்தும் வகையில் அக்கட்டுரை அமைந்துள்ளது. இப்படி காந்திஜி எழுதியதாகக் கட்டுரை விவகாரத்தில் எந்த அளவுக்குக் கீழ்த்தரமான பொய்களைக் கூறும் அளவுக்கு பா.ஜ.க.வின் உயர்மட்டத் தலைவர்கள் தரம் தாழ்ந்த வகையில் செயல்பட்டனர் என்பது இக்கட்டுரைகளின் மூலம் அம்பலமாகியுள்ளது. இந்த விவகாரம் குறித்து இன்று வரை அவர்கள் மன்னிப்பு எதனையும் கோரவில்லை.

## விஜய்–சந்திரலேகா வாழ்க்கை ஒப்பந்த விழா



*டிசம்பர் 10, 2014 புதன் கிழமை, விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் வட்டம், பாக்கம் கிராமத்தில் கழகத் தோழர் செவிஜய்-சந்திரலேகா வாழ்க்கைத் துணை நல ஒப்பந்தம் இரவு 7 மணிக்கு பொதுக் கூட்ட மேடையில் நடைபெற்றது. இவ்விழாவுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார். ச.க. பெரியார் வெங்கட் வரவேற்புரை யாற்றினார். தோழர்கள் உமாபதி, அமுதா, வழக்கறிஞர் துரை அருண், ந. அய்யனார் மற்றும் பலர் வாழ்த்துரையாற்றினர். க. இராமர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கினர்.*

*முன்னதாக பாக்கம் கிராமத்தில் பெரியார் சிந்தனை பலகையை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்த வைத்து கொடியேற்றி வைத்தார். நிகழ்ச்சிக்கு மாவட்ட பொறுப்பாளர்கள், தோழர்கள் மற்றும் பொது மக்கள் திரளாக வந்திருந்தனர். இரவில் அனைவருக்கும் மாட்டுக்கறி உணவு பரிமாறப்பட்டது. இவ்விழாவுக்கு பத்து நாள்களாக இரவு பகலாக சி. சாமிதுரை, மு. நாகராஜ், இரா. நாகராஜ், லோ. மோகன், கொ. ஏழுமலை ஆகிய தோழர்கள் உழைத்தனர்.*

# காந்தி கொலை வழக்கு விசாரணை : சில தகவல்கள்

- காந்தியார் கொலை வழக்கு 1948 மே மாதம் இறுதியில் டெல்லி செங்கோட்டையில் தொடங்கி 7 மாதங்கள் நடந்தன. டிசம்பர் 30ஆம் தேதி நிறைவடைந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி ஹெச் ஆத்ம சரண்.
- வழக்கு விசாரணை வெளிப்படையாக நடந்தது. உரிய அனுமதி பெற்று வழக்கு விசாரணையை நேரில் பார்வையிட பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டார்கள்.
- வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்களில் ஒருவரான சித்பவன் பார்ப்பனர் சாவர்க்கருக்கு 8 வழக்கறிஞர்கள் வாதிட்டனர். கோட்சே உட்பட ஏனையோருக்கு தலா ஒரு வழக்கறிஞர் மட்டுமே வாதிட்டார்.
- வழக்கின் முதன்மைக் குற்றவாளியான கோட்சே, நாராயண் ஆப்தே இருவரும் சாவர்க்காரின் சீடர்கள். இவர்களின் செயல்பாடுகள் அனைத்துக்கும் சாவர்க்கர் ஆதரவு இருந்ததை காவல்துறை தரப்பு நிரூபித்தது. ஆனால், சதித் திட்டத்தை சாவர்க்கார் தான் உருவாக்கித் தந்தார் என்பதை மட்டும் அரசு தரப்பால் நிரூபிக்க முடியாததால் அவர் வழக்கிலிருந்து விடுதலை ஆனார். வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களோடு சாவர்க்கார் நடுநாயகமாக அமர்ந்து எடுத்துக் கொண்ட ஒரு படம் முக்கிய சாட்சியாக முன் வைக்கப்பட்டது. (இப்போது நாடாளுமன்ற வளாகத்திலேயே சாவர்க்கர் படம் மாட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது)
- தன்னுடைய தரப்பு வாதங்களை 90 பக்கங்களில் ஒரு அறிக்கையாக தயாரித்து, கோட்சே நீதிமன்றத்தில் ஆங்கிலத்தில் தான் படித்தான். காந்தியை கொலை செய்தது நான்தான் என்பதை கோட்சே ஒப்புக் கொண்டான். வழக்கையும் தாண்டி ஒரு இந்துத்துவப் பிரச்சார மேடையாக கோட்சே நீதிமன்றத்தைப் பயன்படுத்தினான். இந்து புராணங்களிலிருந்து மேற்கோள் காட்டியதோடு, பகவத் கீதையில் தர்மத்தைக் காக்க கொலை செய்வது பாவம் இல்லை என்ற 'கிருஷ்ணன் உபதேச'த்தையும் தனது கொலைக்கு நியாயம் கற்பிக்க கோட்சே பயன்படுத்தினான். "அகண்ட பாரதம் வாழ்க; வந்தே மாதரம்" என்ற முழக்கங்களோடு தனது வாக்குமூலத்தை நிறைவு செய்தான். (கோட்சே கூறும் அகண்ட பாரதம் என்பது இந்திய எல்லைகளைக் கடந்து பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கான், பர்மா, இலங்கையையும் உள்ளடக்கியது)



- கோட்சேயின் இந்த பேச்சு பிறகு சிறு வெளியீடாக வெளி வந்தது. இந்த உரையை தயாரித்துக் கொடுத்தது அவனின் குருவான சாவர்க்கார் தான் என்று சொல்லப்படுகிறது.
- செங்கோட்டை நீதிமன்றம் - கோட்சே, நாராயண் ஆப்தே இருவருக்கும் தூக்குத் தண்டனை விதித்தது. இருவரும் பார்ப்பனர்கள் சதியில் பங்கேற்ற கோபால் கோட்சே (கோட்சே சகோதரர்) தார்கரே, மதன்லால், ஷங்கர், பார்ச்சூர் ஆகிய 5 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.
- கொலை சதியில் இடம் பெற்று பிறகு அப்ரூவராக மாறி உண்மைகளைக் கூறிய திகம்பர் பாட்ஜேவுக்கு மன்னிப்பு வழங்கி நீதிமன்றம் விடுதலை செய்தது. நீதிபதி தீர்ப்பை வாசிக்கும்போது குற்றவாளிகள் "ஹிந்து தர்ம கி ஜெய்; ஹிந்தி, ஹிந்து, ஹிந்துஸ்தான்" என்று முழக்கமிட்டபடியே இருந்தார்கள்.
- தண்டனை பெற்ற நான்கு நாட்களில் குற்றவாளிகள் வழக்கை மேல் முறையீடு செய்தனர். வழக்கு விசாரணை சிம்லாவில் இருந்த பஞ்சாப் உயர்நீதிமன்றத்துக்கு வந்தது. 1949 மே 2 ஆம் தேதி மேல்முறையீட்டு விசாரணைகள் தொடங்கின. நீதிபதிகள் ஏ.என்.பண்டாரி, அச்ரூராம், ஜி.டி. கோரல்லா ஆகியோர் வழக்கை விசாரித்தனர்.
- மேல் முறையீட்டு வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தபோது குற்றவாளிகளுக்கு ஆதரவாக அனுதாபங்களை உருவாக்கும் முயற்சிகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன.
- கோட்சேவாவது திருமணமாகாதவர்; ஆனால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நாராயண் ஆப்தேவுக்கு ஒரு மனைவியும், ஒரு காதலியும் இருக்கிறார்களே, அவரை தூக்கில் போட்டால், குடும்பம் என்னாவது என்ற கருத்தை ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன வட்டாரங்கள் திட்டமிட்டு பரப்பின. சில ஏடுகளும் எழுதின.
- சிம்லா உயர்நீதிமன்ற விசாரணையிலும் கோட்சே தனது வாக்குமூலத்தை நீண்ட உரையாக கைதேர்ந்த பேச்சாளனாக முன் வைத்தான். நீதிமன்றத்தில் திரட்டப்பட்டிருந்த பெண்கள், கோட்சே வாக்குமூலத்தைக் கேட்டு கண்ணீர்விட்டு அழுதார்கள். இதன் பின்னணியைப் புரிந்து கொண்ட நீதிபதி ஜி.டி. கோஸ்லா "இந்தப் பெண்களை தீர்ப்பு எழுதச் சொல்லியிருந்தால் கோட்சேயை விடுதலை செய்திருப்பார்கள்" என்று கூறினார்.
- ஒன்றரை மாத விசாரணைக்குப் பிறகு 1949 ஜூன் 21 ஆம் தேதி தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்றம், கோட்சே, ஆப்தே தூக்குத் தண்டனையை உறுதி செய்தது. கார்கரே, மதன்லால், கோபால் கோட்சே ஆகியோர் ஆயுள் தண்டனையும் உறுதி செய்யப்பட்டது. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட, டாக்டர் பார்ச்சூர், ஷங்கர் கிஸ்தய்யா இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.
- இதற்குப் பிறகு ஆர்.எஸ்.எஸ். வட்டாரங்கள், காந்தி உயிருடன் இருந்திருப்பாரேயானால் இந்த தூக்குத் தண்டனை விதிப்பை ஏற்க மாட்டார் என்ற கருத்துகளைப் பரப்பி வந்தன. காந்தியின் மகன்கள்கூட தூக்குத் தண்டனை வேண்டாம் என்று அறிக்கை விடுத்தனர்.
- 1949 நவம்பர் 15ஆம் தேதி தூக்கிலிட நாள் குறிக்கப்பட்டது. அம்பாலா பொதுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இருவரையும் தூக்கிலிடப்படும் நாளன்று அதிகாலையில் இதே வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கோபால் கோட்சே, மதன்லால், கார்கரே மூவரும் நேரில் சந்திக்க வந்தனர். அனைவரும் ஒன்றாக சேர்ந்து 'பகவத் கீதை'யை படித்தார்கள்.
- அந்த நேரத்திலும் தனது ஜோதிடப் பலன் மீது ஆப்தே அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தான். தனது ஜோதிட பலன்படி தனக்கு நீண்ட ஆயுள் உறுதி செய்யப்பட்டிருப்பதால் தூக்குத் தண்டனை எப்படியும் நின்றுவிடும் என்று மதன்லால் கூறியதாக சிறைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், ஜோதிடம் மதன்லாலையும் காப்பாற்றவில்லை. கடைசி நேரத்தில் தூக்கு மேடைக்கு வருவதற்கு ஆப்தே முரண்டு பிடித்தான். மிகவும் போராடி சிரமப்பட்டே அவரை தூக்கிலிட வேண்டியிருந்தது என்று சிலர் நூல்களில் எழுதியிருக்கிறார்கள். ஆனால், கோட்சேவிடம் கடைசி நேரத்தில் பயமும் தடுமாற்றமும் இருந்தது என்றும், ஆப்தே தான் உறுதியாக இருந்தார் என்றும் தண்டனை நிறைவேற்றத்தை நேரில் பார்த்த நீதிபதி ஜி.டி.கோஸ்லா எழுதி இருக்கிறார்.
- "நான் இறந்த பிறகு என்னுடைய சாம்பலை இந்தியாவிலுள்ள எந்த நதிகளிலும் கரைக்கக் கூடாது; இந்த நதிகளில் காந்தி சாம்பல் கரைக்கப்பட்டு அசுத்தமாகிவிட்டது; காந்தி சாம்பல் கரைக்கப்படாத, பாகிஸ்தானில் உள்ள சிந்து நதியில்தான் கரைக்க வேண்டும்" என்று கோட்சே தன்னிடம் நேரில் கூறியதாக அவரது தம்பி கோபால் கோட்சே கூறினார். தூக்கிலிடப்பட்ட இருவரின் உடலும் அம்பாலா சிறைச்சாலையில் எரியூட்டப்பட்டன.
- காந்தியார் கொலையில் அரசு, அரசியல்வாதிகள் பங்களிப்பு மற்றும் விசாரணையில் நீண்ட தாமதம் குறித்த அய்யங்கள் எழும்பியதால் மத்திய அரசு 1965இல் கோபால் ஸ்வரூப் பதக் தலைமையில் ஒரு விசாரணை ஆணையத்தை நியமித்தது. 1966இல் பதக் மத்திய அமைச்சரானார்; ஆணையம் செயலிழந்தது.
- அரசுக்கு எதிராக மீண்டும் போராட்டங்கள் நடந்ததால் 1966இல் நீதிபதி ஜே.எல். கபூர் தலைமையில் மற்றொரு ஆணையம் அமைக்கப்பட்டது. டெல்லி மற்றும் பூனா காவல்துறை விசாரணையில் அலட்சியம் காட்டியுள்ளதாக ஆணையம் இடித்துரைத்து விசாரணையை முடித்துக் கொண்டது.

**தொகுப்பு: 'இரா'**

**காந்தியார் மீது 7 முறை கொலை முயற்சிகள் - அடுத்த இதழில்**

DATE OF PUBLICATION 07.01.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# குமாரபாளையத்தில் கலை நிகழ்ச்சிகளுடன் பெரியார் நினைவு நாள்





தந்தை பெரியாரின் 41ஆம் நினைவு நாள் பொதுக் கூட்டம் 24.2.2014 புதன் கிழமை மாலை 6 மணிக்கு நாமக்கல் மாவட்டம் கொமாரபாளையத்தில் திராவிடர் கலைக் குழுவினரின் வீதி நாடகமும், துரை. தாமோதரன் 'மந்திரமல்ல எல்லாம் தந்திரமே' என்னும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. மாலை 5 மணியளவில் ஆனங்கூர் பிரிவு தேசிய நெடுஞ்சாலையில் பெரியார் பொன்மொழி வாசக பலகையை மோகன் திறந்து வைத்தார். பொன்மொழி வாசகப் பலகையை நன்கொடையாக வழங்கினார், தே.மு.தி.க. சிவசுப்பிரமணியம். சென்னையில் 'முழக்கம்' உமாபதி தாக்கப்பட்டதைக் கண்டித்து, கடுமையாக சாடி பேசி கண்டன கூட்டம்போல் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினார் தாமோதரன். வீதி நாடகத்தை துவக்கி வைத்து, மீ.த. தண்டபாணி (நகர தலைவர்) பேசினார். மாவட்ட காப்பாளர் மு.கேப்டன் அண்ணாதுரை, சா.சந்திரா, வை. தனலட்சுமி, மணியம்மை ஆகியோர் முன்னிலை வகித்தனர். திரா. ரேணுகா வரவேற்புரை நிகழ்த்தினார். மாவட்ட தலைவர் மு.சாமிநாதன் தலைமையேற்றார். ஈ.செல்வராசு நன்றியுரை கூறினார். அகமண முறையை விளக்கி நடந்த வீதி நாடகத்தின் கடைசி பகுதி, பொது மக்களையும், கழகக் குடும்பத்தினரை கண்ணீர் மல்க வைத்தது.

## கலவையில் கருத்தரங்கு

28-12-2014 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணி அளவில், வேலூர் மாவட்டம் கலவையில் உள்ள எம்.ஜி.ஆர் திருமணக் கூடத்தில், தந்தை பெரியார் புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. சமூக நீதி படிப்பகம் பயிலகம் சார்பாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு கருநாடகத் தமிழ் மக்கள் இயக்க தலைவர் பன்முகன் தலைமை ஏற்றார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தலித் முரசு இதழ் எழுத்தாளர் யாழன் ஆதி, தமிழ்நாடு விவசாய சங்க கலவை பகுதி தலைவர் ப.வேலாயுதம், காஞ்சி மக்கள் மன்ற தோழர் மேகலா ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். கருநாடகத் தமிழ் மக்கள் இயக்க கலைக்குழு தோழர்கள் மாரி, செளரி ஆகியோர் இன எழுச்சிப் பாடல்களைப் பாடினர்.

## கருநாடக அரசை கண்டித்து இரயில் மறியல்

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் இரயில் நிலையத்தில் தமிழர்களின் வாழ்வாதாரமான காவிரி நதி நீரை தடுத்து நிறுத்தும் நோக்கோடு கர்நாடக அரசு மேகத்தாட்டுவில் அணை கட்ட முயற்சிப்பதையும், கேரள அரசு பாம்பாற்றின் குறுக்கே அணைக்கட்ட முயற்சிப்பதையும் தடுத்து நிறுத்தாத மத்திய அரசை கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகம் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்ட இரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில் பங்கேற்ற திராவிடர் விடுதலைக் கழகம், தந்தை பெரியார் திக தமிழக வாழ்வுரிமைக் கட்சி, புரட்சிகர இளைஞர் முன்னணி, அருந்தமிழர் பேரவை, கொங்கு இளைஞர் பேரவை, தமிழ்ப்புலிகள் உள்ளிட்ட அமைப்புகளை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு கைதானார்கள்.போராட்டத்திற்கு பள்ளிபாளையம் நகர திவிக செயலாளர் முத்துப்பாண்டி தலைமையேற்றார்.

## நன்கொடை

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக் கோட்டை வட்டம் சிலம்ப வேளாங்காடு பா. வீரபாண்டியன்- கோமதி இவர்களின் மகள் வீ.அமுதினி 1.12.2014 அன்று அய்ந்தாவது பிறந்தநாளையொட்டி திராவிடர் விடுதலைக் கழக வளர்ச்சி நிதிக்காக ரூ.2000 அன்பளிப்பு அளித்தனர்.

**'புரட்சிப் பெரியார் முழக்கம்' வங்கிக் கணக்கு**

கரூர் வைஸ்யா வங்கி,
அடையாறு கிளை
'கரண்ட்' அக்கவுண்ட்.
எண் : 1257115000002041

## வினாக்கள்... விடைகள்...!

- 'தில்லை நடராஜன்' கோயில் தேரோட்டம்: பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர். **– செய்தி**

*கோயில் உரிமை 'அவாளு'க்கு மட்டும்; தேர் இழுக்கும் உரிமை 'சூத்திராளுக்கு' மட்டும்! 'இந்து ஒற்றுமை' ஓங்குக...*

- பிற மதத்திலிருந்து 'தாய் மதத்துக்கு' திருப்பும் இயக்கத்தை விசுவ இந்து பரிஷத் தீவிரமாக நடத்துகிறது. **– செய்தி**

*அமெரிக்கா, இலண்டன்னு 'பிற தேசம்' போன இந்துக்களை 'தாய் தேசம்' நோக்கித் திருப்பும் இயக்கத்தையும் நடத்துவேளா?*

- 'மிஸ்டு கால்' போட்டால் பா.ஜ.க.வில் உறுப்பின ராக முடியும். **– செய்தி**

*10 'மிஸ்டு கால்' வந்தால் 'டாக்டைம்' சலுகை உண்டுன்னு அறிவிச்சுப் பாருங்க, இன்னும் ஆதரவு பெருகும்!*

- ஸ்ரீரங்கம் 'சொர்க்க வாசல்' திறப்பின்போது பக்தர்களுக்கு உதவிட 108 ஆம்புலன்ஸ். **– செய்தி**

*நியாயம்தான். உண்மையாகவே எந்த பக்தராவது சொர்க்கத்துக்குப் போயிடாம தடுக்க வேண்டியது கோயிலின் கடமையாச்சே! கடமை தவறுவது, 'கடவுளுக்கே' ஆகாது.*

- டெல்லி – தனியார் தொலைக்காட்சி விவாதத்தில் பங்கேற்ற ஆம் ஆத்மி பா.ஜ.க. தலைவர்கள் கைகலப்பு. **– செய்தி**

*இப்படியே போனா – தொலைக்காட்சி விவாதத் துக்கும் காவல்துறை அனுமதி வழங்கும் நிலை வந்துடும்போல!*

- ரிக்வேதத்தில் நமது மூதாதையர்கள் விமானம் ஓட்டியதற்கான சான்றுகள் உண்டு என்று மும்பையில் விஞ்ஞானிகள் மாநாட்டில் பேச்சு. **– செய்தி**

*அப்ப, ஏன், 'பிராமணாள்' கடல் தாண்டுவது பாவம்னு சொன்னீங்க?*

- அமெரிக்காவில் மதுபாட்டிலில் காந்தி படம். **– செய்தி**

*பாவம் காந்தி! அவரு படத்தை எடுத்துட்டு இராமன் படம் போடுங்க. அவன் தாங்க 'சுராபானத்தை' சுவைத்துக் குடிச்சவன்!*


## ஓர் அறிவிப்பு

**சந்தா புதுப்பிக்காத உறுப்பினர்களுக்கு 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இந்த இதழோடு நிறுத்தப்படுகிறது.**

*– நிர்வாகி*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 9th January 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஜனவரி 15, 2015 | புரட்சி 14 | முழக்கம் 1 | விலை: ரூ.3.00

## சரித்திரக் குப்பைத் தொட்டியில் வீசப்பட்டார், இராஜபக்சே!

# ஆட்சி மாற்றம்: தமிழர்களுக்கு தீர்வைத் தருமா?

இலங்கையில் சுதந்திரா கட்சியின் சார்பில் 10 ஆண்டுகாலம் அதிகாரத்திலிருந்து தமிழர்களை இனப்படுகொலை செய்து அய்.நா.வின் கண்டனத்துக்கு உள்ளாகியுள்ள இனக் கொலைக் குற்றவாளி இராஜபக்சே தேர்தலில் தோல்வியை சந்தித்துள்ளார். அவரது அமைச்சரவையில் இடம் பெற்று, இனப் படுகொலைக்கு துணை நின்ற மைத்ரிபால சிறிசேனா, இராஜபக்சேயிடமிருந்து வெளியேறி, எதிர்க்கட்சி களின் பொது வேட்பாளராக நின்று வெற்றி பெற்று விட்டார். சிறிசேனாவுக்கு 51.28 சதவீதமும், இராஜ பக்சேவுக்கு 47.28 சதவீத ஓட்டுகளும் கிடைத் துள்ளன. தமிழர்களின் தாயகமான யாழ்ப்பாணத்தில் சிறிசேனாவுக்கு 74.42 சதவீத வாக்குகளும், இராஜ பக்சேவுக்கு 21.85 சதவீத ஓட்டுகளும், வன்னியில் முறையே 78.42,19.07 சதவீத வாக்குகளும், திரிகோண மலையில் முறையே 71.84, 26.87 சதவீத வாக்குகளும் மட்டக் களப்பில் முறையே 81.62 , 16.22 சதவீத வாக்குகளும் கிடைத்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டணி இந்தத் தேர்தலில் இராஜபக்சேவை தோற்கடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு சிறிசேனாவுக்கு ஆதரவு அளித்தது. ஆக இராஜ பக்சேவின் தோல்விக்கு தமிழர்களின் வாக்குகள் உதவியிருக்கின்றன. சிறிசேனா, புதிய அதிபராக பதவியேற்றபோது, புதிய பிரதமராக ரணில் விக்ரம சிங்கே பிரதமராக பதவி ஏற்றுக் கொண்டுள்ளார்.

யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதைத் தீர்மானிப்பதே இத்தேர்தலின் முக்கிய நோக்கமாக இருந்திருக்கிறது. இராஜபக்சே அதிகாரத்தைக் குடும்பத்தில் குவித்தார். தனது ஒரு சகோதரரை (கோத்தபய இராஜபக்சே) பாதுகாப்புத் துறை செயலாளராக்கினார். மற்றொரு சகோதரரை (பசில் இராஜபக்சே) பொருளாதார மேம்பாட்டுத் துறை அமைச்சராக்கினார். இன்னொரு சகோதரரை (சாமல் இராஜபக்சே) நாடாளுமன்ற சபாநாயகராக் கினார். அவரது மகன் நமல், அரசியல் வாரிசாக உருவெடுத்தார். இதனால் இராணுவத்தை தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, இனப்படுகொலையை அவரால் செய்து முடிக்க முடிந்தது. இராஜபக்சே ஆதரவோடு ‘பொது பலசேனா’ என்ற சிங்கள தீவிரவாத அமைப்பு, இஸ்லாமியர்கள் மீதான தாக்குதலை நடத்தியதால் இஸ்லாமியர்கள் இராஜபக்சேவுக்கு எதிராக திரண்டார்கள். ஆளும் கூட்டணியில் இடம் பெற்றிருந்த ‘சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்’ கடைசி நேரத்தில் வெளியேறி சிறிசேனாவை ஆதரித்து விட்டது.


சர்வாதிகாரிகளாக தங்களை வளர்த்துக் கொண்டவர்கள், சரித்திரத்தின் குப்பைத் தொட்டியில் வீசப்படுவார்கள் என்பதற்கு இராஜபக்சே விலக்கு அல்ல. போர்க் குற்ற விசாரணைக்கு இராஜபக்சே உள்ளாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மேலும் வலிமை பெற்றாக வேண்டும். இந்த விசாரணைக்கு அவர் வகித்து வந்த அதிகாரம் தடையாக இருந்ததும் இப்போது நீங்கியுள்ளது. ஆனால், அமெரிக்கா, தொடர்ந்து அய்.நா.வில் போர்க்குற்ற விசாரணை கோரிக்கையை வலியுறுத்துமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

குடியரசுத் தலைவருக்காக இராஜபக்சே குவித்துக் கொண்ட அதிகாரங்களைக் குறைப்பேன் என்று சிறிசேனா தேர்தல் பரப்புரையில் உறுதியளித்திருக் கிறார். இதற்கு இலங்கையின் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். அப்படி திருத்தியமைப் பதற்கு மூன்றில் இரு பங்கு உறுப்பினர்கள் ஆதரவு தேவை. இப்போதுள்ள நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு ஓராண்டுக்கு முன்பு புதிய தேர்தலை நடத்தினால் இது சாத்தியம். மீண்டும் தேர்தலை சந்திக்க வேண்டிய சூழலில் சிங்களர்களின் ஆதரவை நாடி நிற்க வேண்டிய ஆட்சி, தமிழர்களுக்கான உரிமைகளை சிங்களர்களின் எதிர்ப்பையும் மீறி வழங்க முன் வருமா என்ற கேள்விகளும் இருக்கின்றன.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டணி, தேர்தலைப் புறக்கணிக்கக் கூடாது என்று எடுத்த முடிவு சூழ்நிலைக்கேற்ற சரியான முடிவு என்றே கூற வேண்டும். தமிழர்களிடம் உள்ள ஒரே அதிகாரமான வாக்குச் சீட்டை இராஜபக்சேவுக்கு எதிராகப் பயன்படுத்துவது என்பது வரலாற்றின் கட்டாயம். சிறிசேனாவின் வெற்றி, தமிழர்களை வாழ வைக்கப் போகிறது என்பது இந்த ஆதரவுக்கான அர்த்தமல்ல; இலங்கை அரசியலில் மாற்றத்துக்கான கதவை திறப்பதே இதன் நோக்கம். இந்த அரசியல் மாற்றம், தமிழர்களுக்கான தீர்வுகளை நோக்கி நகரும் என்பதை உறுதியாகக் கூற முடியாது. ஆனால், அதற்கான சர்வதேச நிர்ப்பந்தங்களை உருவாக்கு வதற்கான தளங்களை விரிவுபடுத்தியிருக்கிறது என்று கூறலாம். இராஜபக்சே தமிழர்களுக்கு மறுத்த உரிமைகளை புதிய ஆட்சி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற அழுத்தங்கள், சர்வதேச அரங்கி லிருந்து உருவாகும் வாய்ப்புகள் இருக்கின்றன. அய்.நா.வின் வழியாகஅழுத்தங்கள் கூடுதலாக்கப்பட வேண்டும். வடக்கு மாகாணத்தில் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட ஆட்சியின் முதல்வர் விக்னேசுவரன், தான் அதிகாரமற்றவராக மாற்றப்பட்டதை ஆதாரங் களுடன் பட்டியலிட்டுள்ளார். (வேறு இடத்தில் அதை வெளியிட்டுள்ளோம்) தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்காக பேசக்கூடிய அதிகாரம் பெற்ற அரசு என்ற நிலை வடக்கு மாகாண அரசுக்கு இருப்பதை இலங்கையால் பறித்துவிட முடியாது. இந்த அதிகாரத்தின் வழியாக இலங்கை அரசுக்கான எதிர்ப்பை சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

ஈழ விடுதலை என்பது இறுதி இலக்கு என்றாலும், அந்த இலக்கு நோக்கிய அரசியல் நடவடிக்கைகளும் அதை படிப்படியாக முன்னெடுப்பதற்கான செயல் திட்டங்களை வகுத்தலும்தான் இன்று புலம் பெயர்ந்த தமிழர்கள், தமிழ்நாட்டுத் தமிழர்களிடம் முன் நிற்கும் சவால். உணர்ச்சி முழக்கங்களும் கற்பனைப் பெருமிதங்களும் கரவொலிப் பேச்சுகளும், அரசியல் முன்னெடுப்புக்கு ஒருபோதும் பயன்படாது என்பதை மட்டும் கவலையுடன் பதிவு செய் கிறோம்.

# பறிக்கப்பட்ட உரிமைகள்: பட்டியலிடுகிறார் விக்னேசுவரன்



இலங்கையில் ஆட்சி மாற்றம் நடந்து முடிந்துள்ள நிலையில் தமிழர்களுக்கு நியாயமான அரசியல் உரிமைகளை சிங்களம் வழங்குமா என்பது அய்யத்துக்குரியதுதான். தமிழர்களின் வடக்கு மாகாணத்தில் இராஜபக்சே காலத்தில் ஒரு தேர்தல் நடத்தப்பட்டு, தமிழர்கள் பேராதரவோடு தமிழ் தேசியக் கூட்டணி ஆட்சியைப் பிடித்தது. இலங்கையின் உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்த சி.ஆர். விக்னேசுவரன் மாகாண முதல்வராக உள்ளார். கடந்த 2014, நவம்பர் 9ஆம் தேதி சென்னையில் ‘பி.யு.சி.எல்.’ (மக்கள் சிவில் உரிமைக் கழகம்) ஏற்பாடு செய்திருந்த ‘கண்ணபிரான் நினைவு அறக்கட்டளை’ யின் சார்பில் ‘பாதுகாப்பு மற்றும் இறையாண்மையை பாதுகாத்தல்’ என்ற தலைப்பில் ஆழமான கருத்துரையை வழங்கினார். அப்போது இலங்கை அரசு வடக்கு மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழர்களின் ஆட்சி உரிமைகளை பறித்து வைத்துள்ளதை பட்டியலிட்டார். இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள சூழலில் புதிய ஆட்சி, பறிக்கப்பட்டுள்ள உரிமைகளை மீண்டும் வழங்குமா? என்ற கேள்வியோடு அவர் வெளியிட்ட உரிமை பறிப்புகளை பட்டியலிடு கிறோம். (ஆர்)

1. தலைமைச் செயலாளர் மாகாண முதல்வர் ஆணைகளைப் பின்பற்றத் தேவையில்லை. இதனடிப்படையில் முதல்வருக்கு நிதி தொடர்புடைய செயல்பாடுகளை நிர்வகிக்கும் அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளது.
2. முதல்வர் எடுக்கும் எந்த முடிவுக்கும் தலைமை செயலாளர் மற்றும் ஆளுநரின் அனுமதி கிடைத்தால் மட்டுமே செயல்படுத்த முடியும். இவர்கள் இருவருமே மத்திய அரசின் பிரதிநிதிகள் என்பதால் மத்திய அரசு விருப்பத்துக்கு மாறான எந்த முடிவையும் செயல்படுத்த முடியாது.
3. மாவட்ட தலைமை அதிகாரிகள், பிரதேச தலைமை அதிகாரிகள், மாகாண முதல்வருடன் எந்த தொடர்பும் கொள்ளாமல், மத்திய அரசு அதிகாரிகளின் ஆணைக்கு கீழே செயல்படு கிறார்கள். குறிப்பாக நிலம் தொடர்பான பிரச் சினைகளில் அவர்கள் தான் முடிவு எடுப்பார்கள்.
4. அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் நியமனங்கள்; பதவி உயர்வு, ஒழுங்கு நடவடிக்கை குறித்த அதிகாரங்கள், ஆளுநர்களுக்கே வழங்கப்பட் டுள்ளது. எனவே, மாகாண அரசு சுதந்திரமாக அதிகாரிகள் வழியாக கடமைகளை நிறைவேற்ற முடியாது.
5. மத்தியில் உள்ள அரசியல் கட்சிகளின் விருப்பத் துக்கு மாறாக மாகாண அரசு ஏதேனும் மக்களுக்கான செயல்பாடுகளில் இறங்கினால், தலைமைச் செயலாளர் மற்றும் ஆளுநர் அச்சுறுத்தலால் அவை முடக்கப்படுகின்றன.
6. மத்தியில் ஆளும் கட்சி மற்றும் அதன் பிரதேச தலைவர்களின் முகவராக ஆளுநர் செயல்படு வதால் அவருக்கு அஞ்சி, மாகாண அரசின் கடமைகளை எமது அலுவலர்களால்

(4 ஆம் பக்கம்)

தலையங்கம்

## படைப்பாளிகளுக்கு எதிரான மிரட்டல்!

சமூகம் சார்ந்த இலக்கியங்களைப் படைத்து வரும் எழுத்தாளர் பெருமாள் முருகன் எழுதிய **'மாதொரு பாகன்'** நாவலுக்கு மதவாத சக்திகள், ஜாதியவாதிகளைத் தூண்டிவிட்டு நடத்தி வரும் போராட்டம் வன்மையான கண்டனத்துக்கு உரியது. இது தமிழ்நாட்டுக்கே தலைகுனிவாகும். இந்த நிலையில் படைப்பிலக்கியவாதிகள் எழுத்தாளர் பெருமாள் முருகனுக்கு ஆதரவாக குரல் கொடுப்பது நம்பிக்கையைத் தருகிறது.

திருச்செங்கோடு தேர்த் திருவிழா நாளில் திருமணமான ஆண்களும் பெண்களும் தங்களுக்குள் உறவு கொள்ளும் ஒரு பழக்கம், சில நூறு ஆண்டுகளுக்கு முன் நிலவியதை கதைக்களம் சுட்டிகிறது என்பதாலேயே திருச்செங்கோட்டையே இழிவுபடுத்துவதாக மதவாத சக்திகள், உள்ளூர் மக்களைத் தூண்டிவிட்டு கதவடைப்பு நடத்தும் அளவுக்கு எதிர்ப்புகளை உருவாக்கியுள்ளனர். ஒரு படைப்பாளி, சமூக தொன்மங்களை தனது கற்பனை கலந்து படைப்பாக்கும் உரிமைகளை அச்சுறுத்துவது மிக மோசமான வன்முறை என்றே கூற வேண்டும். தமிழகத்தில் காலூன்ற துடிக்கும் சங்பரிவாரங்கள், இத்தகைய பிரச்சினைகளை ஆங்காங்கே உருவாக்கி வருகின்றன. அந்த சதித் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இது தெரிகிறது. இந்த நாவல் வெளிவந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போது எதிர்ப்புகள் கிளம்புவதிலிருந்தே இதைப் புரிந்து கொள்ள முடியும்?

அய்வருக்குப் பத்தினியான திரவுபதியை மதிப்பவர்கள், குந்திதேவி, சூரியனோடு உறவுகொண்டு கர்ணனைப் பெற்றாள் என்பதை பயபக்தியுடன் ஏற்பவர்கள், ஒரு படைப்பிலக்கியத்தை மட்டும் ஏன் எதிர்க்க வேண்டும்? இவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள 'இந்து' தர்மமே 'நியோககாதர்மம்' என்ற தர்மத்தைப் பேசுகிறது. இதன்படி குழந்தை இல்லாத ஒரு பெண், வேறு ஒரு ஆணோடு உறவுகொண்டு குழந்தைப் பெறுவதற்கு இந்து தர்மம் அனுமதிக்கிறது. இந்த 'நியோககாதர்மம்' பற்றி ரிக்வேதத்தில் கூறப்பட்டுள்ளது: கேரளாவில் நம்பூதிரிப் பார்ப்பனர்களோடு உறவுகொண்டு குழந்தைப் பெறுவதை அங்கே உள்ள பார்ப்பனரல்லாதார் பெருமையாகக் கருதிய வழக்கம் இருந்தது. நம்பூதிரிப் பார்ப்பனர், எந்த வீட்டுக்குள்ளும் நுழையும் உரிமைகளை வைத்திருந்தார்கள். வீட்டு வாசலில் ஒரு சொம்பை அடையாளமாக விட்டுச் சென்றால், உள்ளே நம்பூதிரி இருக்கிறார் என்பதற்கான அடையாளம். கணவனாக இருந்தாலும் வீட்டிற்குள்ளே நுழைய முடியாது. இந்த வரலாற்று உண்மைகளை அம்பேத்கரும் பெரியாரும் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள்.

தாய்வழிச் சமூகமாக சமூகம் இருந்த காலத்தில் உறவுகள் எப்படி இருந்தன? மிகச் சிறந்த சமூகவியல் ஆய்வாளரான ராகுல் சாங்கிருத்தியாயன் கூறுகிறார்:

"தாய் வழிச் சமூகம் நிலவிய காலத்தில் நிச்சயிக்கப்பட்ட திருமணமுறை கிடையாது. கணவன் மனைவி முறையும் இருக்கவில்லை. தன் தாயின் குடும்பத்தைச் சார்ந்த எந்த ஆணோடும் ஒரு பெண் கர்ப்பம் தரிக்கலாம். இக்காலத்தில் ஆண்-பெண் உறவை, திருமணத்தை ஏங்கல்ஸ் "குழுத் திருமணம்" (Group marriage) எனக் குறிப்பிடுகிறார். அதாவது திருமணத்தில் தனி மனிதனுக்கில்லால், குழுவுக்கு முக்கியத்துவம் இருந்தது. தாய் வழிக் குடும்பத்திலுள்ள அனைவரையும் ஆண்-பெண் எனும் இரண்டு பிரிவுகளாகப் பிரித்தால், ஒரு பிரிவு மற்ற பிரிவுடன் கணவன் மனைவி தொடர்பு கொண்டிருந்தது. ஒரு குடும்பத்தில் 'பெண்' என்றால் மனைவி என்றும், 'ஆண்' என்றால் கணவன் என்றும் நிலை இருந்தது" என்று எழுதுகிறார், சாங்கிருத்தியாயன். (நூல்: 'மனித சமுதாயம்' என்.சி.பி.எச். வெளியீடு)

இந்த சமூக வரலாறுகளையும் இவர்கள் நம்பும் கடவுள் புராணங்களையும் தீ வைத்து எரித்துப் பொசுக்கிட வேண்டும் என்று இவர்கள் கூறுவார்களா?

குழந்தை பெறுவதற்கான வாய்ப்பில்லாதவர்களுக்கு செயற்கைக் கருவூட்டல், சோதனைக் குழாய் குழந்தை முறைகளும், அதற்காக விந்து வங்கிகளும் வந்துவிட்டனவே. அதையெல்லாம் எதிர்த்துப் போராடுவார்களா? குழந்தைகளை வாடகைக்கு வயிற்றில் சுமக்கும் பெண்கள் அதை தொழிலாக செய்கிறார்களே. இத்தகைய பெண்கள் குஜராத்தில்தான் அதிகம் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றனவே. இவையெல்லாம் இவர்களின் பார்வையில் 'புனிதம்' கெட்டவையா? ஆர்.எஸ்.எஸ். சிந்தனையாளராகவே போற்றப்படுகிற ஜெயமோகன், 'விஷ்ணுபுரம்' நாவலில் இப்படிப்பட்ட உடலுறவுகளைப் பற்றி விவரிக்கிறாரே!

வரலாற்றுக் காரணம் ஏதும் இல்லாமலே ஒரு நூலை தடைசெய்ய வேண்டும் என்று கூப்பாடு போடுவதில் நியாயம் இருக்கிறதா? பெருமாள் முருகன் எழுதியுள்ளதுபோல கடந்த நூறாண்டுகளில் சமூகத்தில் அப்படிப்பட்ட உறவு முறைகளே இருந்தது இல்லை என்று இவர்களால் கூற முடியுமா?

"சூத்திரர்களை" பார்ப்பனர்களின் வைப்பாட்டி மக்கள் என்று கூறும் 'மனுசாஸ்திரம்', இப்போதும் அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்படுகிறதே, இதைத் தடை செய்ய வேண்டும் என்று இந்த 'சங்பரிவாரங்கள்' கேட்டார்களா? பெரும்பான்மை மக்களை சாஸ்திரப்படியே இழிவுபடுத்தும் ஒரு கேவலத்தை இந்த சமூகம், இன்னும் சுமந்து கொண்டுதானே நிற்கிறது?

எதிர்ப்பாளர்கள் தங்கள் அமைப்பையோ, கோரிக்கையையோ முன் வைக்காமல் மிகவும் சூழ்ச்சியாக இந்த நூலுக்கு எதிரான வெறுப்புணர்ச்சியைத் தூண்டிவிட்டுக் கொண்டிருப்பது மிகவும் ஆபத்தானது. இந்த ஆபத்தான போக்கை எதிர்த்து தமிழ் நாட்டில் அரசியல் தலைவர்கள் இயக்கத் தலைவர்கள் கடும் கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டியது அவசியம்!

# 7000 ஆண்டுகளுக்கு முன்பு விமானம் விட்டார்களாம்!

பிரதமர் மோடி தொடங்கி வைத்த, மும்பையில் நடந்த இந்திய அறிவியல் காங்கிரசில் (ஜன.3-7) படிக்கப்பட்ட சில கட்டுரைகள் - சர்வதேச விஞ்ஞானிகளிடையே இந்தியாவை கேலிக்கும் அவமானத் துக் கும் உள்ளாக்கியிருக்கிறது. 'சமஸ் கிருதத்தில் அறிவியல்' என்ற தலைப்பில் ஒரு தனி அமர்வு அமைக்கப்பட்டதாம் அதில் 'ஆய்வு' கட்டுரை ஒன்றை படித்திருக்கிறார், விமான கேப்டனாக இருந்த போடாஸ் என்பவர், 7000 ஆண்டு களுக்கு முன்பே, முன்னோர்கள் விமானம் ஓட்டியதாகவும், அந்த விமானம் பூமியில் மட்டுமல்ல, வானமண்டலத்திலேயே கிரகங்கள் விட்டு கிரகங்களுக்கு பறந்ததாகவும் - ஏதோ, பள்ளிக்கூட மாணவன் தேர்வு மதிப்பெண்ணுக்கு எழுதும் கற்பனைக் கட்டுரை போல தரம் தாழ்ந்த ஒரு 'ஆய்வை' முன் வைத்திருக்கிறார். கொதித்துப் போன, அமெரிக்காவில் 'நாசா'வில் பணியாற்றும் இந்திய விஞ்ஞானி காந்தி ராமனும், 200க்கு மேற்பட்ட அறிவியல் விஞ்ஞானி களும் இந்த உரையை வன்மையாகக் கண்டித்ததோடு, இதுபோன்ற கட்டுரைகள், இந்திய அறிவியலின் பெருமைகளை மிகவும் கீழ்த்தரமாக்கி விடும் என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.


வானில் பறப்பது என்பது ஒரு மனிதனின் கனவாக இருந்திருப்பதில் எந்த வியப்பும் இல்லை. அப்படி கனவு கண்டவர்கள் வெளிப்படுத்திய விருப்பங்களையெல்லாம் பார்ப்பனர்கள் தங்களின் 'சமஸ்கிருத'ப் பெருமையாக்குவது வெட்கக்கேடு அல்லவா? இதற்கு மறுப்பாக 'தமிழ் இந்து' நாளேட்டில் வெளிவந்த ஒரு மறுப்புக் கட்டுரையிலிருந்து சில பகுதிகளை வெளியிடுகிறோம்:

"ரைட் சகோதரர்கள் 1903ஆம் ஆண்டுக்கு முதன்முதலாக விமானத்தில் பறக்க முடிந்தது என்றால், அறிவியல் அதற்கு முன்னால் பல மைல்கற்களைத் தாண்ட வேண்டி யிருந்தது. நியூட்டனின் விதிகளும் பெர்னூலியின் கொள்கையும் இல்லையென்றால், விமானம் பிறந்திருக்காது. இரப்பர், அலுமினியம், பெட்ரோல் இல்லையென்றால் விமானம் பிறந்திருக்காது. எல்லாவற்றுக்கும் மேலாக 'உள் எரிபொறி' (இன்டெர்னல் கம்ப்ரஷன் இன்ஜின்) கண்டுபிடித்திருக்காவிட்டால், விமானம் பிறந்திருக்காது. மற்றைய அறிஞர்களின் தோள்களில் ஏறி நின்றே புதுப்புதுக் கண்டு பிடிப்புகளை அறிவியலாளர்கள் நிகழ்த்துகிறார்கள். இந்தக் கண்டுபிடிப்பு மற்றும் கொள்கைச் சங்கிலிகளில் ஒரு இணைப்பு அறுந்தாலும், புதிய கண்டுபிடிப்புகள் அரிதாகிவிடும். மேலாக, மனிதனுக்குப் பயன்படும் எந்த அறிவியல் கண்டு பிடிப்பையும் அவன் மறந்ததாகத் தெரியவில்லை. எனவே, விமானங்களைச் செய்து அவற்றைப் பறக்க வைக்கும் தொழில்நுட்பம் மனிதனுக்குத் தெரிந்திருந்தால், அதை அவனால் மறந்திருக்கவே முடியாது.

காப்டன் போடாஸ் கட்டுரை 'வ்யாமானிக சாஸ்திரம்' என்ற புத்தகத்தைப் பற்றியது. பாரத்வாஜ முனிவரால் எழுதப்பட்ட இந்தப் புத்தகம், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது என்று சொல்லப்படுகிறது. ஆனால், இந்தப் புத்தகத்தை ஆராய்ந்த இந்திய அறிவியல் கழக விஞ்ஞானி தேஷ்பாண்டே என்பவர், இந்தப் புத்தகத்தை 1904ஆம் ஆண்டுக்கு முன்னால் எழுதியிருக்க முடியாது என்பதையும், அதில் கொடுக்கப்பட் டிருக்கும் முறைப்படி விமானம் செய்தால் அது பறக்க முடியாது என்பதையும் தெளிவாகச் சொல்லி யிருக்கிறார்" என்று அந்தக் கட்டுரை போலி அறிவியலை மறுத்துள்ளது.

'இந்திய அறிவியல் காங்கிரஸ்' முதன்முதலாக 1914ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சென்னையில் இரண்டாவது அறிவியல் காங்கிரஸ் மாநாடு இன்றைக்கு 99 ஆண்டுகளுக்கு முன் சென்னை மாநில கல்லூரியில் கூடியபோது, காங்கிரசின் தலைவராக இருந்த மருத்துவர் டபிள்யூ.ஆர். பென்னர்மேன், "இந்த காங்கிரசின் நோக்கமே மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் போராடுவதுதான்" என்று தெளிவுபடுத்தினார். அப்போது, மலேரியா, காலரா, வாந்தி பேதி, பிளேக் போன்ற நோய்கள் கட்டுப் படுத்த முடியாமல் பரவிக் கொண் டிருந்தது. அந்த நோய்களைத் தவிர 'பேய், பிசாசு, ஆவி, பில்லி சூன்யம்' போன்ற வியாதிகள் மக்களிடம், படித்தவர் படிக்காதவர்கள் என்கிற வேறுபாடின்றி பரவிக் கிடப்பதை சுட்டிக்காட்டிய பென்னர்மேன், இந்த மூடநம்பிக்கை வியாதிகளை எதிர்த்துப் போராடுவதே அறிவியல் காங்கிரசின் நோக்கம் என்று தெளிவுபடுத்தினார். இப்போது கூடிய 102ஆவது காங்கிரசு மூடத்தனங்களை யும் போலி அறிவியலையும் அறிவியலாக்க முயற்சிப்பது மிகப் பெரும் தலைகுனிவாகும். +

## காயத்ரி–ராஜேஷ் ஜாதி மறுப்பு மணவிழா



காஞ்சி மாவட்ட திராவிடர் விடுதலைக்கழக செயலாளர் தினேஷ்குமார் சகோதரரும், மு. ரமணி -கு.குருசாமி மகனுமான மு.இராஜேஷ், மறைமலை நகர் கே.நாகலட்சுமி–சு.கேசவன் ஆகியோரின் மகள் கே. காயத்ரி ஆகியோரின் ஜாதி மறுப்பு வாழ்க்கை ஒப்பந்த விழா 4.1.2015 ஞாயிறு மாலை 5 மணியளவில் கூடுவாஞ்சேரி சாரதாம்பாள் திருமண மண்டபத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடந்தது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் சரசுவதி, வே. மதிமாறன், வ. வேம்பையன், மு.பிச்சைமுத்து, மா. சமத்துமணி, சு.செங்குட்டுவன் (மாவட்ட தலைவர்) வாழ்த்துரை வழங்கினர். பெண் வீட்டார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்கள். தி.வி.க. – தி.க. தோழர்கள் ஏராளமாக வந்திருந்தனர். கழக ஏட்டுக்கு ரூ.2000 நன்கொடை வழங்கப்பட்டது.

# காந்தி மீது 9 முறை நடந்த கொலை முயற்சிகள்

சுனிபாய் வைத்யா என்ற குஜராத் மாநிலக்காரர் காந்தி கொலை பற்றி சில ஆண்டுகளுக்கு முன் ஒரு நூலை எழுதினார். அப்போது அவருக்கு வயது 85. சர்வோதய இயக்கத்திலும், வினோபாவின் பூமி தான இயக்கத்திலும் பங்கு பெற்றவர். இவர் குஜராத்தில் 'பூமி புத்ரா' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தவர். இந்திராவின் அவசர நிலைக் காலத்தில் 7 மாதம் சிறையில் இருந்தவர். காந்தியைக் கொன்ற கோட்சேயை - மாவீரனாக சித்தரித்து, மராட்டியத்தில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் நாடகம் நடத்தியபோது இந்த முதியவர் கொதித்தெழுந்து, காந்தி கொலை பற்றிய ஒரு நூலை வினா-விடை வடிவத்தில் எழுதினார். குஜராத்தி மொழியில் எழுதப்பட்ட அந்த நூல் வேறு பல மாநில மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மதுரையில் 'சர்வோதய இலக்கியப் பண்ணை' என்ற அமைப்பின் சார்பில் - இதன் தமிழ் பதிப்பும் வெளி வந்திருக்கிறது. அதில் காந்தியைக் கொலை செய்வதற்கு - சுமார் 9 முறை முயற்சிகள் நடந்தன என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.


1934ஆம் ஆண்டில் - பூனா நகராட்சியின் வரவேற்பு விழாவில் பங்கேற்க காந்தியடிகள் சென்றபோது, அவர் மீது வெடிகுண்டு வீசும் முயற்சி நடந்தது. வெடிகுண்டு காந்தியடிகளின் காருக்கு முன்னால் சென்று கொண்டிருந்த காரின் முன்னால் விழுந்ததால், அவர் உயிர் தப்பினார். இந்த குண்டு வீச்சில், தலைமை நகராட்சி அதிகாரியும், இரண்டு காவல்துறை அதிகாரிகள் உள்பட 6 பேரும் படுகாய மடைந்தனர். (இது குறித்து இராமச்சந்திர குகா தரும் தகவல் வேறு இடத்தில் வெளியிடப்பட்டுள்ளது)

அதன் பிறகு 1944 ஆம் ஆண்டு இதே நாதுராம் வினாயக் கோட்சே, காந்தியைக் கொலை செய்ய முயற்சித்தார். 'பஞ்சக்கனி' என்ற இடத்தில் நாதுராம் கோட்சே, கையில் கத்தியுடன், காந்தியைக் குத்திக் கொலை செய்வதற்கு ஓடினார். அப்போது காந்தியுடனிருந்த, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.டி. பிசாரே என்பவர், பாய்ந்து சென்று, கோட்சேயின் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கி, காந்தியின் உயிரைக் காப்பாற்றினார்.

இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டது. பூனேயில் உள்ள காரத்தி என்னும் தங்கும் விடுதியின் உரிமையாளரான மணி சங்கர் புரோகித் என்பவர், இந்த சம்பவத்தை நேரில் பார்த்தவர் என்பதால் சாட்சி கூறினார். அந்தச் சம்பவம் நடந்த உடனேயே, தன்னைக் கொலை செய்ய வந்த கோட்சேயை, தாம் சந்திக்க வேண்டும், அவரோடு விவாதிக்க வேண்டும் என்று காந்தி விரும்பி, அவரை அழைத்து வரப் பணித்தார். ஆனால், கோட்சே, காந்தியை சந்திக்க மறுத்துவிட்டார்.

1944ஆம் ஆண்டு காந்தியை கொல்ல மற்றொரு முயற்சி நடந்தது. அப்போது அவர் வார்தாவிலிருந்து பம்பாய்க்கு, ஜின்னாவைச் சந்திக்க புறப்பட இருந்த நேரம். இத்திட்டத்தை முறியடித்து, காந்தி-ஜின்னாவின் சந்திப்பு நடக்கவே கூடாது என்று ஒரு தீவிரவாதக் குழு திட்டமிட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவே அந்தக் குழு வார்தாவுக்கு வந்திருந்தது. உளவுத் துறையின் வழியாக இந்தத் தகவல் காந்தியடிகளிடம் தெரிவிக்கப்பட்டவுடன், இவர் இந்தக் குழுவை சந்தித்து விட்டுத்தான் பம்பாய் போவேன் என்று கூறி விட்டார். ஆனால், பாதுகாப்புக் கருதி, காவல்துறை அதற்கு அனுமதிக்க மறுத்துவிட்டது. தீவிரவாதிகளின் குழுவையும் காவல்துறை பிடித்துவிட்டது. அந்தக் குழுவிலிருந்த தாட்டே என்பவர் கையில் ஒரு கத்தியை வைத்திருந்தார் . விசாரணையில், காந்தியின் பயணத்தைத் தடுக்கும் நோக்கத்துடனேயே வந்ததாக ஒப்புக் கொண்டார்கள். காந்தியின் உயிருக்கு ஆபத்தை உருவாக்குவதே, இந்தத் தீவிரவாதக் குழுவின் திட்டம் என்று, புனே மாவட்ட காவல்துறை அதிகாரி, காந்தியின் செயலாளர் பியாரிலாலுக்கு அவசரமாக தொலைபேசி மூலம் எச்சரிக்கை செய்தார்.

1946ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மற்றொரு கொலை முயற்சி நடந்தது. அப்போது காந்தியடிகள் சிறப்பு இரயில் மூலம் புனாவுக்குச் சென்றுக் கொண்டிருந்தார். அந்தச் சிறப்பு இரயில் 'நேரல்' என்ற ஊருக்கும், 'கர்ஜத்' என்ற ஊருக்கும் இடையே வந்து கொண்டிருந்தபோது, தண்டவாளத்தின் மீது பாறாங்கற்களைப் போட்டு இரயிலைக் கவிழ்க்கும் சதி நடந்தது. இரயில் ஓட்டுநரின் திறமையால் விபத்து தவிர்க்கப்பட்டது. ஆனால், இன்ஜின் பலத்த சேதத்துக்குள்ளானது. தொடர்ந்து இப்படி கொலை முயற்சிகள் நடந்து கொண்டே இருந்தன. அதனைத் தொடர்ந்து காந்தியடிகளே ஒரு வழிபாட்டுக் கூட்டத்தில் இவ்வாறு பேசினார்.



**காந்தி – ஜின்னாவின் சந்திப்பு நடக்கவே கூடாது என்று ஒரு தீவிரவாதக் குழு திட்டமிட்டது.**

"இதுவரை கொலை முயற்சியிலிருந்து எனது உயிர் 7 முறை காப்பாற்றப்பட்டிருக்கிறது. நான் அவ்வளவு சீக்கிரம் இறந்து விட மாட்டேன். நூற்று இருபத்தைந்து ஆண்டுகள் வரை நான் உயிர் வாழ்வேன்" என்றார். அதற்கு பதிலளித்து - உடனே நாதுராம் கோட்சே தான் நடத்தி வந்த 'அக்ரனி' என்ற மராத்திய பத்திரிகையில் எழுதினார். "அதுவரை யார் உங்களை உயிருடன் விட்டு வைக்கப் போகிறார்கள் பார்ப்போம்" என்று. அதற்குப் பிறகு 1948ஆம் ஆண்டு ஜனவரி 20இல் நடந்த வெடிகுண்டு வீசும் முயற்சி நடந்தது.

காந்தியார் - சுட்டுக் கொல்லப்படுவதற்கு 10 நாள்களுக்கு முன்பு அவரை தீர்த்துக்கட்ட ஒரு முயற்சி நடந்தது.

இந்த சதிக்கான திட்டம் வகுத்தவர்கள் :
1. நாராயணன் ஆப்தே (சித்பவன் பார்ப்பனர்),
2. நாதுராம் கோட்சே (சித்பவன் பார்ப்பனர்),
3. கோபால் கோட்சே (சித்பவன் பார்ப்பனர்),
4. மதன்லால் (பார்ப்பனர்), 5. விஷ்ணு கார்க்கோர்,
6. திகம்பர் பேட்கே.

இவர்கள் எல்லாம் சேர்ந்து நடத்திய கூட்டு சதி!

1948 ஜனவரி 19ஆம் தேதி டில்லி 'கன்னாட் சர்க்கஸ்' பகுதியிலுள்ள மெரினா ஓட்டலில் இந்தக் கூட்டம் தங்குகிறது! காந்தியார் பிர்லா மாளிகையிலே தங்கியிருக்கிறார். அப்போதுதான் காந்தியார் தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டு பாகிஸ்தானுக்குச் செல்ல முடிவெடுத்த நேரம்! கோபால் கோட்சே காந்தியாரின் வழிபாட்டுக் கூட்டத்துக்கு வந்து, இடங்களை எல்லாம் பார்வையிடுகிறான். காந்தியாரை கோபால் கோட்சே பார்த்ததே - அதுதான் முதல் முறை. எப்படி காந்தியாரை தீர்த்துக் கட்டுவது என்பதற்கான முன்னோட்டத்திற்காக கோபால் கோட்சே அங்கு வருகிறான்; 20 ஆம் தேதி மாலை 5 மணிக்கு காந்தியாரை தீர்த்துக் கட்டுவது என்று முடிவெடுக்கப்படுகிறது. 19ஆம் தேதி காலையும் ஆப்தே, திகம்பர் இருவரும் வந்து பார்வையிட்டு செல்கிறார்கள்; அறைக்குத் திரும்பியவர்கள் வெடிகுண்டுகளை தயார்படுத்திக் கொள்கிறார்கள்; யார் யாருக்கு என்னென்ன வேலை என்று பிரிக்கப்படுகிறது.

மதன்லால் - காம்பவுண்டு சுவரில் வெடி குண்டோடு இருக்க வேண்டும். முதலில் இவன் வெடிகுண்டை வீசி கூட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும். திகம்பர் பேட்கே, கோபால் கோட்சே ஆகிய இருவரும் காந்தியார் பேசிக் கொண்டிருக்கும் இடத்திற்குப் பின்னால் உள்ள வேலைக்காரர் தங்கும் அறையில் வெடிகுண்டோடு இருக்க வேண்டும். அங்குள்ள ஜன்னல் வழியாக வெடிகுண்டை காந்தியார் மீது வீசுவது என்பது திட்டம். வேலைக்காரர்களிடம் காந்தியாரை போட்டோ எடுக்க வந்ததாக சொல்லிவிட வேண்டும்; காம்பவுண்டு சுவரில் உள்ள மதன்லால் வெடிகுண்டை வீசி வெடித்தவுடன் கூட்டத்தில் குழப்பம் ஏற்படும். அப்போது - வேலைக்காரர் அறையிலிருந்து ஜன்னல் வழியாக காந்தியார் மீது ஒருவன் வெடிகுண்டை வீச வேண்டும். இன்னொருவன் துப்பாக்கியால் சுட வேண்டும்; இதைத் தவிர கூட்டத்தோடு கூட்டமாக உட்கார்ந்திருக்கும் கார்க்கோர் என்பவனும் காந்தியார் மீது ஒரு வெடிகுண்டை வீச வேண்டும்; நாதுராம் கோட்சே, நாராயணன் ஆப்தே ஆகிய இருவரும் இவைகளை எல்லாம் கண்காணிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

தங்கியிருந்த ஓட்டலை விட்டு இருவர் இருவராக தனித்தனியே வெளியே கிளம்பினார்கள்; வெடிகுண்டுகள் சகிதமாக! அந்த நேரத்திலும் ஆப்தே - டாக்சிக்காரருடன் பேரம் பேசிக் கொண்டிருந்தான்! திட்டமிட்டவாறு - அந்தந்த இடத்துக்கு எல்லோரும் சென்றனர்! காந்தியாரின் பிரார்த்தனைக் கூட்டம் துவங்கியது! வேலைக்காரர் அறைக்குள் சென்ற பேட்கேவுக்கு ஓர் அதிர்ச்சி! அங்கே இருந்த வேலைக்காரனுக்கு ஒற்றைக் கண்! ஒற்றைக்கண் மனிதர் ஒரு அபசகுனம் என்பது இந்து தர்மத்தின் நம்பிக்கை! அதனால் பேட்கே நடுங்கிப்போய் வெளியே ஓடிவந்துவிட்டான்!

உள்ளே இருந்தது கோபால் கோட்சே மட்டும்தான். ஆனால் எந்த ஜன்னல் வழியாக காந்தியாரை நோக்கி சுட வேண்டுமோ அந்த ஜன்னலுக்கும், காந்தியார் அமர்ந்திருந்த மேடைக்கும் உயரம் வித்தியாசமாக இருந்தது. அந்த ஜன்னல் வழியே காந்தியாரைக் குறி வைத்துப் பார்க்க முடியவில்லை; கோபால் கோட்சேவுக்கு இது மிகப் பெரிய ஏமாற்றமாகிவிட்டது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. காம்பவுண்டு சுவரில் தயாராக இருந்த மதன்லால் என்ற பார்ப்பனன், சமிக்ஞை கிடைத்த வுடன் அமைதியக ஒரு சிகரெட்டை எடுத்துப் புகைத்தான்; அந்த சிகரெட் நெருப்பைக் கொண்டு - காலுக்கு அடியில் இருந்த வெடிகுண்டைப் பற்ற வைத்து - வீசினான்; குண்டு வெடித்துவிட்டது; கூட்டத்தில் குழப்பம். இப்போது ஜன்னல் வழியே காந்தியாரை நோக்கிச்சுட வேண்டிய நேரம்; கோபால் கோட்சே ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறான்; திட்டம் தோல்வியில் முடிகிறது! போலீசார் - மதன்லாலைக் கைது செய்தனர்; மற்றவர்கள் தப்பி ஓடி விடுகின்றனர்; போலீசார் அவர்கள் தங்கியிருந்த ஓட்டலுக்கு சோதனையிடச் செல்வதற்குள் எல்லோருமே தப்பிவிட்டனர்!

குண்டு வெடித்தபோது - காந்தியார் அமைதியாகப் பேசிக் கொண்டிருந்தார்! உண்ணாவிரதத்தால் உடல்நலிவுற்ற அவரை - ஒரு நாற்காலியில் உட்கார வைத்து தூக்கி வந்திருந்தார்கள்; பேச முடியாத உடல் பலவீனம்; அருகே இருந்த சுசீலா நய்யார் குண்டு வெடித்தவுடன் அலறுகிறார். அப்போது காந்தியார், "பிரார்த்தனைக் கூட்டம் நடக்கும்போது சாவதைவிட - வேறு நல்ல சாவு ஏது?" என்று கேட்டுவிட்டு கூட்டத்தினரைப் பார்த்து அமைதிப்படுத்துகிறார். அருகே இருக்கும் இராணுவப் பயற்சி முகாமில் ஒத்திகை நடந்திருக்கிறது; வேறு எதுவும் இல்லை என்று சமாதானப்படுத்திவிடுகிறார்; அதற்கு சரியாக 10ஆவது நாளில் - அதே பார்ப்பனர் கூட்டம் காந்தியாரைத் தீர்த்துக் கட்டிவிடுகிறது!

**(விடுதலை இராசேந்திரன் எழுதிய 'ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம்', 'சங்பரிவார்களின் சதி வரலாறு' நூல்களிலிருந்து)**

DATE OF PUBLICATION 15.01.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# இராணுவத்தின் பிடியில் 6000 ஏக்கர்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்ற முடியாமல் தத்தளிக்கின்றனர். மாகாண அலுவலர்கள் நேரடியாக ஆளுநரின் ஆணைகளையே செயல்படுத்த வேண்டியிருக்கிறது.

7. மாகாண பொதுச் சேவை ஆணைக் குழு, ஆளுநரின் ஆணைப்படியே செயல்படும். ஆளுநர், மத்திய அரசின் ஒரு தலைபட்ச விருப்புவெறுப்புக் குட்பட்ட முடிவுகளையே செயல்படுத்துவார். இதனால், நாங்கள் தேவையான நியமனங்களை செய்ய முடியாமல், மத்திய அரசின் கட்டளைகளை அப்படியே பின்பற்ற வேண்டியிருப்பதால் மாகாண அரசு பலவீனமாகிவிட்டது.

8. ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த உரிமைகள்கூட வடக்கு மாகாணத்துக்கு மறுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, வடக்கு மாகாண முதல்வர் தமக்கென வங்கி ஒன்றைத் திறப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்த வங்கி, தலைமைச் செயலாளர் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அதை விலக்கி, முதலமைச்சர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர அனுமதி கேட்டும் மறுத்து விட்டார்கள். ஏனைய 4 மாகாணங்களில் இதுபோல் முதலமைச்சர் கட்டுப் பாட்டில் வங்கிகள் இருக்கின்றன. இது குறித்து அதிபரிடம் (இராஜபக்சே) எடுத்துக் கூறியபோது, "அந்த வங்கிகள் நாங்கள் பதவிக்கு வருவதற்கு முன் திறக்கப்பட்டவை. நாங்கள் வந்த பிறகு, இத்தகைய உரிமைகளை அனுமதிப்பது இல்லை; அனுமதிக்கவும் மாட்டோம்" என்று பதில் கூறினார்.

9. வடக்கு மாகாணத்தில் குவிக்கப்பட்டுள்ள ஒன்றரை இலட்சம் இராணுவத்தினர், மக்களின் அன்றாட வாழ்க்கையில் குறுக்கிடுகிறார்கள். பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை.

10. நிலங்களை இராணுவம் கைப்பற்றிக் கொண்டு அவற்றில் பயிரிட்டு அறுவடை செய்து அந்த நிலத்தின் உரிமையாளர்களான தமிழர்களிடமே தானியங்களை விற்பனை செய்கிறது.

11. சிங்களர்கள் தெற்குப் பகுதியிலிருந்து இராணுவத்தின் உதவியுடன் தடை செய்யப்பட்ட மீன் பிடிப்பு முறைகளில் மீன் பிடிக்கிறார்கள்; தமிழர்கள் மீன் பிடித்தால் கைது செய்து சிறையில் அடைக்கிறார்கள்.

12. வலி கிராமம் பகுதியில் மட்டும் 6000 ஏக்கருக்கும் மேற்பட்ட பகுதியை இராணுவம் கைப்பற்றி குடியிருப்புகள், கல்லூரிகள், கோயில்களை அழித்து அங்கு சுற்றுலா விடுதிகளையும், 'கோல்ஃப்' விளையாட்டு மைதானத்தையும் அமைத்துள்ளது. நிலத்துக்கு உரிமையுள்ள மக்களோ, உணவு, உடை, இருப்பிடமின்றி, தற்காலிக தங்குமிடங்களில், மாகாண அரசு அனுதாபத்துடன் காலத்தைக் கடத்தி வருகிறார்கள். இதனால், சமூக, கலாச்சார சீரழிவுகள் நடக்கின்றன.

13. 30, 40 வருடங்களுக்கு முன்னால் நிலங்களின் உரிமைகளுக்கான ஆவணங்களை வைத்திருந்த மக்கள், போரின் போது, நிலங்களை விட்டு வெளியேறி, ஆவணங்களையும் தொலைத்து விட்டார்கள். இப்போது மீண்டும் தங்கள் இடங்களுக்குச் சென்றால், அங்கு வேறு நபர்கள் இருப்பதைப் பார்க்கிறார்கள். இராணுவமோ உங்களிடம் ஆவணம் ஏதும் இல்லை; நாங்கள் இந்த இடங்களைக் கைப்பற்றி வேறு நபர்களுக்கு கொடுத்து விட்டோம்" என்று கூறுகிறது.

14. போரில் பாதிக்கப்பட்டு, செயலிழந்து போனவர்கள் 18,000 பேர். ஒரு இலட்சம் இளம் பெண்கள் 'விதவை'களாகிவிட்டனர்.

15. வேலை வாய்ப்புகள் இல்லை; தொழில் திறன் குறைந்து போய் விட்டதால், கட்டுமானத்துக்கு தெற்கிலிருந்து சிங்களர்களை அழைக்க வேண்டியிருக்கிறது.

16. மக்களின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது. அதனைப் போக்கக்கூடிய ஆலோசனை மய்யங்கள் இல்லை. குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துக்கள் இல்லை.

17. இந்திய அரசின் வீடு கட்டித்தரும் திட்டம், ஊழல் மலிந்து நியாயமாக கிடைக்க வேண்டியவர்களுக்கு கிடைப்பது இல்லை. மாகாண ஆட்சி வருவதற்கு முன்பே, இதற்கான ஒதுக்கீடுகள் முறைகேடாக வழங்கப்பட்டுவிட்டன.

- என்று பட்டியலிட்டுள்ளார் முதல்வர் விக்னேசுவரன்.

இலங்கையில் ஒற்றையாட்சி முறை மாற்றியமைக்கப்பட்டால் மட்டுமே மாநிலங்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்க முடியும் என்றும் திட்டவட்டமாக அறிவித்தார்.

இப்போது இராஜபக்சே மக்களால் தோற்கடிக்கப்பட்டுள்ளார் புதிய ஆட்சி தமிழர்களின் இந்தப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கப் போகிறதா? இந்திய அரசு இந்த நியாயமான அரசியல் உரிமைகளை இலங்கையிடம் வலியுறுத்துமா?

இவையே எழுப்பப்பட வேண்டிய கேள்விகள்! +

**தோழர்களுக்கும் வாசகர்களுக்கும் தமிழர் புத்தாண்டு-பொங்கல் வாழ்த்துக்கள்!**

# தீண்டாமையை எதிர்த்த காந்தி மீது மலம் வீசிய பார்ப்பனர்கள்

## ஆய்வாளர் இராமச்சந்திர குகா வெளியிடும் தகவல்

தீண்டாமையை எதிர்த்து காந்தியார் பேசியதற்காக சங்பரிவாரங்களின் முன்னணி அமைப்பாகிய 'இந்து மகாசபை' காந்திக்கு கருப்புக் கொடி காட்டி, கலவரம் செய்ததோடு காந்தியாரை 1934ஆம் ஆண்டிலேயே கொல்லவும் முயற்சி செய்தது. இந்த வரலாற்று உண்மைகளை எழுதியிருப்பவர் இந்தியாவின் தலைசிறந்த வரலாற்று ஆய்வாளராக கருதப்படும் இராமச்சந்திர குகா இது குறித்து 'இந்துஸ்தான் டைம்ஸ்' நாளேட்டில் அவர் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து:

"காந்தியின் தீண்டாமை எதிர்ப்புப் பிரச்சாரம் கடும் அச்சுறுத்தலை சந்திக்க வேண்டியிருந்தது. காரணம், தீண்டாமை எதிர்ப்பு - இந்து பழமைவாதத்தின் ஆணிவேரையே அசைப்பதாகும். அப்போது சங்கராச்சாரிகள், காந்தியை கடுமையாகக் கண்டித்தனர். "சமஸ்கிருதம் பற்றி துளிகூட தெரிந்திராத ஒரு பனியாவுக்கு, இந்து புனித நூல்கள் பற்றி என்ன தெரியும்? இந்து புனித சாஸ்திரங்கள் தீண்டாமையை அங்கீகரித்திருக்கிறது. அதையெல்லாம் மறுத்துப் பேச காந்திக்கு யோக்கியதை கிடையாது" என்று சங்கராச்சாரியார்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் காந்தியை இந்து மதத்திலிருந்து விலக்கி வைத்து அறிவிக்க வேண்டும் என்று, சங்கராச்சாரிகள் மனு அளித்தனர். 1933-34ஆம் ஆண்டுகளில் காந்தி தீண்டாமைக்கு எதிராக சுற்றுப்பயணம் செய்தபோது, இந்து மகாசபைக்காரர்கள், பல ஊர்களில் கருப்புக்கொடி காட்டியதோடு, காந்தி மீது மலத்தை வீசினர். 1934இல் பூனாவில் காந்தியை கொலை செய்யவும் முயற்சி செய்தனர்.

இந்த நிலையில் காந்தி, இந்தியாவின் சட்ட அமைச்சராக அம்பேத்கரை நியமிக்குமாறு நேருவிடமும், பட்டேலிடமும் கூறினார். இவர்கள் இருவருக்கும் இதில் உடன்பாடு இல்லை என்றாலும், காந்திக்காக ஒப்புக் கொண்டனர். "சுதந்திரம் கிடைத்தது, காங்கிரஸ் கட்சிக்கு அல்ல, தேசத்துக்கு" என்று கூறிய காந்தி, "முதல் அமைச்சரவையில் கட்சிக் கண்ணோட்டம் கூடாது என்றார்" என்று இராமச்சந்திர குகா எழுதியுள்ளார்.

# இராமாயண எரிப்பு ஏன்?

இராமாயணத்தை ஆரியர் - திராவிடர் போராட்டம் என்றும்; 'இராமாயணக் கதை திராவிடரை இழிவுபடுத்துவதற்காகவே ஆரியர்களால் கற்பனை செய்யப்பட்ட கட்டுக்கதை' என்றும்; 'இராமாயணக் கதை ஆரியருக்குத் திராவிடர்கள் மீது இருந்த வெறுப்பைக் காட்டுவதற்கென்றே ஆரியரால் (பார்ப்பனரால்) புனையப்பட்ட கதை' என்றும்; 'இராமன் ஆரியத் தலைவன் - இராவணன் திராவிட அரசன்' என்றும்; மற்றும் 'இராமாயணம் புத்தனுக்குப் பின் கற்பனை செய்து பார்ப்பனரால் எழுதப்பட்டது' என்றும்; 'இராமாயணம் நடந்த கதையல்ல, சரித்திரத்தில் பட்டது அல்ல, நீதியும் அல்ல' என்றும்; 'இராமாயணம் பார்ப்பனர்கட்கு அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைத் தொகுப்பு' என்றும் - மற்றும் பலவாறாகச் சரித்திர ஆசிரியர்கள் முதல் ஆய்வாளர்கள் உள்படப் பார்ப்பனராலும், வெளிநாட்டு அறிஞர்களாலும், சுயமரியாதை உணர்ச்சியுள்ள தமிழறிஞர்களாலும் ஆதாரங்களுடன் சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றிற்கு ஆதாரங்களும் நம்மிடம் இருக்கின்றன. அவைகட்கு அன்று முதல் இன்று வரை எந்த அறிவாளியும் - தமிழரில் எந்தப் புலவரும் ஆட்சேபணையோ, மறுப்போ கூறியது கிடையாது.

மற்றும், இந்த இராமாயணத்தைப் பற்றி அதில் காணப்படும் ஆபாசங்களுக்கு, ஒழுக்கக் கேடான காரியங்களுக்கு, அநீதிகளுக்கு நாளதுவரை எந்தப் புலவரும் மறுப்புக் கூறியதும் கிடையாது.

இப்படிப்பட்ட நிலையிலுள்ள இராமாயணத்தைக் கடவுள் கதையாகப் பாவித்து, பாமர மூட மக்களிடம் புலவர்கள் புகுத்தி, அதில் பயன் பெறுகிறார்கள் என்றால் - இதற்கு எதை ஒப்பிடுவது? இப்புலவர்களுக்கு எதை உதாரணமாக்குவது?


தோழர்களே! சிந்தியுங்கள்! நன்றாய்ச் சிந்தியுங்கள்!

புலவர்களுக்குப் புத்தி, மானம் இல்லாவிட்டாலும் நீங்களாவது கொளுத்துங்கள் கம்ப இராமாயணத்தை!

**'விடுதலை' - தலையங்கம், 276.10.1972**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 16th January 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஜனவரி 22, 2015 | புரட்சி 14 | முழக்கம் 2 | விலை: ரூ.3.00

# ‘படைப்பாளி’களை மிரட்டும் மத-ஜாதி வெறி சக்திகள்

***பெருமாள் முருகன் எழுதிய ‘மாதொரு பாகன்’ நாவலுக்கான எதிர்ப்புகள் குறித்த ஒரு தொகுப்பு.***

பெருமாள் முருகன் எழுதிய ‘மாதொரு பாகன்’ நாவல் வெளி வந்து நான்கு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. முதல் பதிப்பு வெளிவந்தது 2010 டிசம்பரில். இப்போது திடீரென எதிர்ப்பு ஏற்பட்டது ஏன்? இதற்கு பெருமாள் முருகன் தரும் பதில்:

“திடீர் எதிர்ப்புக்கு எனக்கு காரணம் தெரிய வில்லை. இது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு 2014இல் வெளி வந்த பிறகுதான் எதிர்ப்பு வந்திருக்கிறது. ஆங்கிலத்தில் படித்த யாரோ சிலர், இதை தூண்டிவிட்டிருக்கும் வாய்ப்புகள் உண்டு”.

மேலும் அவர் கூறுகிறார்:

முதன்முதலாக ஜாதி அமைப்புகளும் இந்து அமைப்புகளும் ஒரே மேடையில் கைகோர்த்திருக் கின்றன. இந்து முன்னணி மற்றும் மூன்று ஜாதி அமைப்புகள் இணைந்து இந்த எதிர்ப்பை உருவாக்கி வருகின்றன. இந்த எதிர்ப்பு அந்த நாவலுக்கானது மட்டும் என்று நான் நினைக்கவில்லை. காரணம், அவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் ‘திருச்செங்கோடு’ ஊர்ப் பெயரை அடுத்த பதிப்புகளில் நீக்குவதாக அறிவித்து விட்டேன். அதற்குப் பிறகும் ஏன் எதிர்க்கிறார்கள்?

போராட்டம் நடத்தும் ஜாதிக்காரர்கள் - நாமக்கல், திருச்செங்கோடு பகுதிகளில் நடத்தி வரும் பள்ளிகளில் நடக்கும் கல்வி வியாபாரத்தையும் மாணவர்கள் மதிப்பெண் பெறுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு விளையாட்டு உள்ளிட்ட மாணவர்களுக்கான செயல்பாடுகளை தடை செய்துள்ளதையும் நான் தொடர்ந்து கண்டித்து எழுதி வருகிறேன். ஜாதியம் எப்படி வாழ்க்கையில் பாகுபாடுகளை இப்போதும் பின்பற்றத் தூண்டுகிறது என்பதை எனது மாணவர்களின் அனுபவங்களைத் திரட்டி, 32 கட்டுரைகளாக தொகுத்து ‘சாதியும் நானும்’ எனும் தலைப்பில் நூலாக வெளியிட் டுள்ளேன். (இந்த நூல் : தந்தை பெரியாருக்கு சமர்ப்பிக்கப்பட் டுள்ளதாகும் - ஆர்) கடைசியாக நான் எழுதிய ‘பூக்குழி’ நாவலை தர்மபுரியில் ஜாதி யத்துக்கு பலியான இளவரசனுக்கு சமர்ப்பித்தேன். அதற்காகவே அந்த நூலை வாங்க மறுத்தார்கள். இந்த சக்திகள் என் மீது கொண்ட கோபத்தை தீர்த்துக் கொள்ளும் ஒரு வாய்ப்பாக, இந்த எதிர்ப்பைப் பயன்படுத்துகிறார்கள்” என்கிறார் பெருமாள் முருகன்.

“நமது சமூகம், ஜாதியில் மூழ்கிக் கிடக்கிறது. இதிலிருந்து ஒரு எழுத்தாளரும் அவரது படைப்புகளும் மட்டும் எப்படி ஒதுங்கி நிற்க முடியும்?” என்று தனது ஜாதியத்துக்கு எதிரான எழுத்துகளை நியாயப்படுத்துகிறார்.

கோயில் திருவிழாவில் இப்படி விருப்பமுள்ள வரோடு உறவு கொள்ளும் வழக்கம் இருந்ததற்கு எழுத்துபூர்வ சான்றுகள் உள்ளனவா என்ற கேள்விக்கு பெருமாள் முருகன் தரும் பதில்:

“வரலாற்று பூர்வமாக சான்றுகள் இல்லை; ஆனால், அப்படிப்பட்ட வழக்கம் இருந்தது என்று வாய்மொழியாக சொல்லப்படுகிறது. இத்தகைய வழக்கங்கள் தமிழகத்தில் வேறு பகுதிகளில் நிலவியதை எழுத்தாளர் தியோடர் பாஸ்கரன், பேராசிரியர் ஏ.கே.பெருமாள் போன்றோரும் பதிவு செய்திருக்கிறார்கள். உதாரணமாக ‘துப்பட்டி திருவிழா’ என்ற விழாவில் ஆண்களும் பெண்களும் தங்கள் முகத்தை துணியால் மூடிக் கொண்டுதான் பங்கேற்க வேண்டும் என்ற சம்பிரதாயம் இருந்திருக்கிறது” என்கிறார், பெருமாள் முருகன்.




## ‘மாதொரு பாகன்’ கதை என்ன?

மகிழ்ச்சியுடன் உளம் நிறைந்து வாழும் இணையர் (காளி-பொன்னாயி) - தங்களுக்குள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்தாலும், ‘குழந்தை இல்லை’ என்பதால் உறவினருக்கு முன் அவமதிப்புக் கும் புறக்கணிப்புக்கும் உள்ளாகிறார்கள். திருச்செங் கோட்டிலுள்ள கடவுள் ‘அர்த்தநாரீஸ்வரர்’, ஆண் பாதி-பெண் பாதி உடலைக் கொண்டவர். ‘மாதொரு பாகன்’ என்ற பெயரும் அந்தக் கடவுளுக்கு உண்டு. குழந்தை இல்லாத தம்பதிகள், ஊர் தேர்த் திருவிழாவுக்கு வருவதும், கடவுள் ஆணைப்படி வேறு ஆணோடு தொடர்பு கொண்டு குழந்தையை பெற்றுக் கொள்வதும் வழக்கம்.

கதையின் நாயகியை தனது தாய், சகோதரர் தேர் திருவிழாவுக்கு செல்ல நிர்ப்பந்திக்கிறார்கள். கணவரிடம், ‘நீ சம்மதித்தால் போகிறேன்’ என்று அந்தப் பெண் கூறுகிறார். தன்னிடம் தனது மனைவி இப்படி ஒரு கேள்வியை கேட்பார் என்று எதிர்பார்க்காத கணவன், மனமுடைந்து போகிறார். மனைவி திருவிழாவுக்குப் போனதை அறிந்து மனம் உடைகிறார். அவர் இறந்து விட்டாரா? உயிர் பிழைத்தாரா? என்று உறுதியாக சொல்லாமல் கதை முடிகிறது. மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்தும்கூட ‘குழந்தை இல்லை’ என்ற பிரச்சினை சமூகத்தில் உருவாக்கும் தாக்கத்தை விவரிப்பதே நாவலின் நோக்கம்.

இது குறித்து பெருமாள் முருகன் ஒரு நிகழ்வில் பேசும்போது, “கதையின் நாயகன் முடிவை நான் வெளிப்படுத்தவில்லை என்றாலும், அவன் உயிருடன் இருந்திருப்பானேயானால் என்ன நிகழ்ந்திருக்கும்? மரணமடைந்திருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும்? என்ற பார்வையில் மற்றொரு நாவலை எழுதி முடித்துள்ளேன்” என்றார்.

## ஆய்வாளர் தரும் தகவல்

ஆய்வாளர் ஏ.ஆர். வெங்கடாசலபதி, இது குறித்து பெருமாள் முருகனுக்கு ஆதரவாக ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் (ஜன.2, 2015) ஒரு கட்டுரை எழுதி யுள்ளார். இதே திருச்செங்கோடு அர்த்தநாரிஸ்வரன் கோயிலில் 125 ஆண்டுகளுக்கு முன்பு ஈரோடு சின்னத்தாயம்மாளும் வெங்கட்ட நாயக்கரும் தங்களுக்கு பிள்ளை வரம் வேண்டி திருச்செங்கோடு “வரடிக் கல்லை” சுற்றி வலம் வந்தார்கள். அப்போது பிறந்தவர்தான் மிகப் பெரும் பகுத்தறிவுப் புரட்சிக்காரர் பெரியார் என்று குறிப்பிட்டுள்ளார். கேளிக்கை கொண்டாட்டம் வழியாக குழந்தை இல்லாத பெண் ‘வைகாசி விசாகம் தேர்த் திருவிழாவில் பங்கேற்று பிற ஆண்களுடன் கூடி குழந்தைப் பெறுவதும்; பிறந்த குழந்தைக்கு “கடவுள் கொடுத்த குழந்தை” என்று கூறி, சமூகம் அங்கீகரித்ததையும் குறிப்பிடுகிறார். இந்து மதமே அங்கீகரிக்கும் ‘நியோகா தர்மப்படி’ (இது பற்றி ரிக்வேதம் கூறுகிறது) குழந்தை இல்லாத ஒரு பெண், கணவரைத் தவிர வேறு ஆணுடன் உறவு கொண்டு குழந்தை பெற்றுக் கொள்வதை அனுமதிப்பதையும் ஆய்வாளர் வெங்கடாசலபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

## நீதிபதி சந்துரு கூறுகிறார்

‘இந்து’ பத்திரிகை நடத்திய இலக்கிய விழாவில் பங்கேற்றுப் பேசிய முன்னாள் நீதிபதி சந்துரு, இப்படி இலக்கியங்களைப் படித்து, அதில் மத அடிப்படையின் ‘எதிர்ப்பு’களைக் கண்டுபிடித்து தெரிவிக்க டெல்லியில் ஒரு குழு செயல்பட்டு வருகிறது என்றும், ஒரு ஜாதியமைப்பு, கல்லூரியில் மாணவர்களைத் திரட்டி, ‘சொந்த ஜாதியில் திருமணம் செய்து கொள்வேன்’ என்று உறுதியேற்கச் செய்துள்ளதையும் சுட்டிக் காட்டியிருப்பது அதிர்ச்சி தருவதாக உள்ளது. பெருமாள் முருகனுக்கு எதிராக திருச்செங்கோட்டில் முழு அடைப்புக்கு தூண்டியவர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. முழு அடைப்புக்கான கோரிக்கை களும் முன் வைக்கப்படவில்லை. சமாதானக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த அரசு அதிகாரிகள் ஜாதி-மத வெறியர்கள் பக்கமே சார்ந்து நின்று எழுத்தாளர் பெருமாள் முருகனை மிரட்டியுள்ளனர். அரசு எந்திரம் - ஜாதி மத வெறிக்குள் மூழ்கிக் கிடப்பதையே காட்டுகிறது. முதலில் வருத்தம்; பிறகு நிபந்தனையற்ற மன்னிப்பு என்று மிரட்டல் படலம் தொடர்ந்து, ‘இனி எழுதவே மாட்டேன்’ என்று ஒரு இலக்கியவாதியை அறிவிக்க வைத்து விட்டார்கள். பெருமாள் முருகனிடம் வற்புறுத்திப் பெறப்பட்ட இந்த ‘சரணாகதி’ உடன்பாடு ஏற்கெனவே அரசு நிர்வாக ஒப்புதலோடு ஜாதி மத வெறி சக்திகளால் அச்சிடப்பட்ட படிவமாகவே தயாரிக்கப்பட் டிருந்ததாக தகவல்கள் கூறுகின்றன.

## புத்தகக் கண்காட்சியில் எதிர்ப்பு

சென்னை புத்தகக் கண்காட்சியில் ஜன. 13 ஆம் தேதி பெருமாள் முருகனுக்கு ஆதரவாக எழுத்தாளர்கள் அமைதியாக துண்டுப் பிரசுரம் வழங்கி எதிர்ப்பைத் தெரிவிக்க கூடினர். ஆனால், காவல்துறை அரங்கத்துக்குள் அதற்கு அனுமதி இல்லை என்று கூறி துண்டுப் பிரசுரங்களை பறிமுதல் செய்து, எதிர்ப்பாளர்களைக் கலைத்து விட்டது. ஜனவரி 14ஆம் தேதி மாலை புத்தகக் கண்காட்சியில் கருத்தரங்குகள் நடக்கும் இடத்துக்கு அருகே “மாற்று இடதுசாரி இளைஞர்கள்” என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் வாயில் கருப்பு துணி கட்டிக் கொண்டு பெருமாள் முருகனுக்கு ஆதரவாக துண்டறிக்கைகளை வழங்கினர். காவல் துறையினர் துண்டறிக்கைகள் வழங்கிய இளைஞர்களை மிரட்டினர். அப்போது அந்தப் பகுதியில் கண்காட்சியில் இருந்த திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள், விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் திருமூர்த்தி, பேராசிரியர் சரசுவதி ஆகியோர் தோழர்களுடன் காவல்துறையின் மிரட்டலை தட்டிக் கேட்டனர். அமைதியாக எழுத்தாளரின் கருத்துரிமைக்கு ஆதரவாக - துண்டறிக்கை வழங்குவது குற்றமா? புத்தகக் கண்காட்சியில் எதிர்ப்பு தெரிவிக்காமல் வேறு எங்கே எதிர்ப்பு தெரிவிப்பது? இதைத் தடுக்க காவல்துறைக்கு ஏது உரிமை? - என்று தட்டிக் கேட்கவே பெரும் கூட்டம் கூடிவிட்டது. அருகே கருத்தரங்கில் பேசிக் கொண்டிருந்த பாரதி

(4ஆம் பக்கம்)

### திருச்செங்கோட்டில் களமிறங்குகிறது கழகம்

# ‘சூத்திரர்’ என்று இழிவுபடுத்தும் வேத, புராண, சாஸ்திரங்களைத் தடைசெய்!

பெருமாள் முருகன் எழுதிய ‘மாதொரு பாகன்’ நாவல் திருச்செங்கோடு பெண்களை இழிவுபடுத்துவதாக ஜாதி-மத வாத சக்திகள் அச்சுறுத்தி, மிரட்டி ஒரு இலக்கியவாதியின் படைப்பை முடக்கியுள்ளன. ஆனால், பெரும்பான்மை மக்களை இழிவுபடுத்தும் ‘மனு சாஸ்திரம்’ பெண்களை இழிவுபடுத்தும் புராணங்களை ‘புனிதமாக’ப் போற்றுகிறார்கள். பல நூறு ஆண்டுகளாக தொடர்ந்து ‘புனிதங்கள்’ என்ற பெயரில் நிலைநிறுத்தப்பட்டுள்ள ‘இழிவுகளுக்கு’ எதிராக பெரியார் இயக்கம் போராடி வருகிறது. ஆனால், பெரியார் இயக்கம் ‘மதத்தைப் புண்படுத்துவதாக’ குற்றம் சாட்டுகிறார்கள். ‘பெரும்பான்மை’ மக்களை இழிவுபடுத்தும் வேத புராண சாஸ்திரங்களை தடை செய்யக் கோரி திராவிடர் விடுதலைக் கழகம் திருச்செங்கோட்டில் ஜன.23இல் பொதுக் கூட்டம் நடத்தவிருக்கிறது. அதையொட்டி மக்களிடையே பரப்புவதற்காக கழகம் வெளியிட்ட துண்டறிக்கை:

**சூத்திரன் என்றால் யார்?**

இந்து மதத்தில் பார்ப்பனர்களைத் தவிர பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஜாதிகளைச் சேர்ந்த மக்கள் அனைவரும் சூத்திரர்கள் என இந்து மத சாஸ்திரங்கள் கூறுகின்றன.

“பிரம்மாவானவர் உலக விருத்தியின் பொருட்டு, தன்னுடைய முகத்திலிருந்து பிராமணரையும், தோளிலிருந்து க்ஷத்திரியரையும், தொடையிலிருந்து வைசியரையும், பாதத்திலிருந்து சூத்திரரையும் படைத்தார்.”

– மனு சாஸ்திரம்: அத்தியாம் 1, ஸ்ஸ்லோகம் 31

**சூத்திர ஜாதிகள் எப்படி உண்டாகின?**

உலகில் கடவுள் உருவாக்கியது மேற்கண்ட நான்று வர்ணங்கள் மட்டுமே என்றும் – இந்த நான்கு வர்ணத்தாரும் ஒருவருக்கு ஒருவர் விபச்சாரம் செய்ததால்தான் இன்று நடைமுறையில் உள்ள 6000 க் கும் மேற்பட்ட ஜாதிகள் உருவாயின என்றும் – இந்தியாவில் உள்ள அனைத்து பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட ஜாதிகளைச் சேர்ந்த மக்களும் விபச்சாரத்தால் பிறந்தவர்கள் என்று இந்து மத நூல்களில் எழுதிவைக்கப்பட்டுள்ளன.

ஆதாரம்: சுப்பர போதகம், பிரம்ம புராணம், வைகானசம், மாதவியம்.

இந்துமத சாஸ்திரங்களில் ‘சூத்திரர்’ எனக் குறிப்பிடப்படும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்டவர்களைப் பற்றி என்ன கூறப்பட்டுள்ளது?

சூத்திரன் என்றால் ஏழுவகைப்படும். 1. போரில் புறங்காட்டி ஓடியவன், 2. போரில் கைதியாகப் பிடிக்கப்பட்டவன், 3. பிராமணனிடத்தில் பக்தியினால் ஊழியம் செய்பவன், 4.விபச்சாரி மகன், 5. விலைக்கு வாங்கப்பட்டவன், 6. ஒருவனால் கொடுக்கப்பட்டவன், 7. தலைமுறைதலைமுறையாக ஊழியம் செய்பவன்.

ஆதாரம்: மனுசாஸ்திரம், அத்தியாயம் 8, ஸ்லோகம் 415

**இந்து சாஸ்திரங்கள் பெண்களை இழிவுபடுத்துகிறது!**

மனைவியில்லாத ஒருவன், பிள்ளையில்லாத ஒருவன், தனக்கு வாரிசு தேவைப்படு மானால், மற்றொருவனுடைய மனைவியிடம் பிள்ளை பெற்றுக்கொள்ளலாம்.

– மனுசாஸ்திரம்: அத்தியாயம் 9, ஸ்லோகம் 52.

பிள்ளை இல்லாமல் ஒரு குலம் அழியுமானால், ஒரு பெண் தனது கணவனின் உடன் பிறந்த சகோதரர்கள் அல்லது தனது கணவனின் ஏழு தலைமுறைக்கு உட்பட்ட பங்காளிகள் யாருடன் வேண்டுமானாலும் கூடி பிள்ளை பெற்றுக் கொள்ளலாம்.

– மனுசாஸ்திரம்: அத்தியாயம் 9, ஸ்லோகம் 59.

கணவன் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டால் மனைவி வேறு ஒரு ஆணிடத்தில், தனது கணவன் சம்பாதித்த பொருளைக் கொடுத்து, பிள்ளையைப் பெற்றுக்கொள்ளலாம்.

– மனுசாஸ்திரம்: அத்தியாயம் 9, ஸ்லோகம் 190.

**இந்துமதப் புராணங்கள் பெண்களை இழிவுபடுத்துகின்றன!**

மகாபாரதக் கதைப்படி, பரசுராமன் தொடர்ச்சியாக 21 அஸ்திரங்களை எய்தி, பூமியில் க்ஷத்திரியர்களே இல்லாமல் அழித்து விட்டார். அப்போது எல்லாத் தேசங்களிலிலும் உள்ள க்ஷத்திரிய பெண்கள் அனைவரும், வேதங்களில் கரைகண்ட பிராமணர்களைக் கூடி, அவர்களோடு உறவுகொண்டு பிள்ளைகளை உற்பத்தி செய்தார்கள்.

பரசுராமன் காலத்திற்குப் பிறகு வாழ்ந்த க்ஷத்திரியர்கள் அனைவரும் பிராமணனுக்குப் பிறந்தவர்களே என்றும், எல்லா தேசங்களிலும் இருந்த க்ஷத்திரிய ஜாதிப்பெண்கள் அனைவரும் பிராமணர்களுடன் உறவுகொண்டுதான் வாரிசுகளைப் பெற்றார்கள் என்றும் மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது.

– மகாபாரதம்: ஆதிபர்வம், அத்தியாயம் 113.

பெண்கள் ஆபத்துக்காலத்தில், தனது கணவன் அல்லாத மேல்ஜாதி ஆணிடத்திலோ, மைத்துனனிடத்திலோ பிள்ளை பெற்றுக்கொள்ளலாம்.

– மகாபாரதம்: ஆதிபர்வம், அத்தியாயம் 126

இவை மட்டுமல்ல, இன்னும் இந்துமதத்திற்கு அடிப்படையாக உள்ள யக்ஞவல்கியர் ஸ்மிருதி, பராசரர் ஸ்மிருதி, அர்த்தசாஸ்திரம், பகவத்கீதை, இராமாயணம், பெரியபுராணம், தேவாரம் போன்றவை அனைத்தும், இந்த நாட்டின் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரையும் விபச்சாரி மக்களாகவும், அடிமைகளாகவும், இழிவுபடுத்தியே உள்ளன. சுயமரியாதை உணர்வுள்ள ஒவ்வொரு மனிதனும் இந்த இந்துமத சாஸ்திரங்களையும், புராணங்களையும், வேதங்களையும் தடைசெய்யப் போராடு வோம்.

வெளியீடு: திராவிடர் விடுதலைக்கழகம் – திருச்செங்கோடு – 94428 28962

## பார்ப்பன பல்லக்கு சவாரி

ஸ்ரீரங்கம் ரெங்கநாதன் கோயிலில் இப்போதும் பார்ப்பன பல்லக்குச் சவாரி நடக்கிறது. வேதம் ஓதும் பார்ப்பனர்களான அரையான் குடும்பம், பட்டர் அய்யர், வேத வியாசகர், பராசுர பட்டர் ஆகியோரைக் கோயிலில் இருந்து அவரவர்களின் வீட்டுக்கு ‘சூத்திரர்’ கள் பல்லக்கில் சுமந்து செல்ல வேண்டுமாம். ‘சொர்க்க வாசல்’ திறப்புக்குப் பிறகு ஆண்டுதோறும் ‘பிரம்மரத மரியாதை’ என்ற பெயரில் இது நடக்கிறது. சீமான் தாங்கி என்றும் இதற்குப் பெயர் உண்டாம். சூத்திர பக்தர்களுக்கு ‘சொர்க்க வாசலை’ திறக்கும் இந்த பார்ப்பனர்கள், தாங்கள் மட்டும் சொகுசாக பல்லக்கில் சொந்த ‘வீடு’ போய்ச் சேர்கிறார்கள். தி.மு.க. ஆட்சியில் அறநிலையத் துறை இதை தடை செய்தது. அதை எதிர்த்து ஸ்ரீரங்கம் அர்ச்சகப் பார்ப் பனர்கள் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள். மதுரை உயர்நீதிமன்றக் கிளை வழக்கு தொடர்ந்த பார்ப்பனர்களைக் கண்டித்து வழக்கையும் தள்ளுபடி செய்தது.

மூன்று ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்த இந்த பார்ப்பன ‘பல்லக்கு சவாரி’, இந்த ஆண்டு நீதிமன்றத் தடையையும் மீறி நடத்தப்பட்டுள்ளது. 24.11.2012இல் மதுரை உயர்நீதிமன்றக் கிளை பல்லக்கில் சுமக்க விதித்தத் தடையை பார்ப்பனர்கள் இந்த ஆண்டு மீறும்போது அறநிலையத் துறை தட்டிக் கேட்காமல் வேடிக்கைப் பார்க்கிறது. தி.வி.க., த.பெ.தி.க., தி.க., ம.க.இ.க. அமைப்புகள் இதைப் எதிர்த்து மறியல் போராட்டம் நடத்தியிருக்கிறது. பார்ப்பனர்களை ‘சூத்திரர்கள்’ தோளில் சுமக்கும் இழிவு இப்போதும் தொடரு கிறது. ஊடகங்களும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரத் தயாராக இல்லை. ‘இந்துக்களே ஒன்றுபடுங்கள்’ என்று கூப்பாடு போடும் பா.ஜ.க. பரிவாரங்கள், ‘சூத்திர’ இந்துக்கள், ‘பார்ப்பன’ இந்துக் களை தூக்கிச் சுமப்பதைக் கண்டிக்கவும் தயாராக இல்லை.

### கருநாடகத்தில் ‘சுடுகாடு பேதம்’ ஒழிப்பு

கருநாடக அரசு ‘சுடுகாட்டில்’ ஜாதி பேத்தை ஒழிக்க முன் வந்திருக்கிறது. மாநிலத்தில் கிராமங்களிலுள்ள சுடுகாடுகள் அனைத்து ஜாதியினருக்கும், அனைத்து மதத்தினருக்கும் பொதுவானது என்று கருநாடக வருவாய்த் துறை அமைச்சர் வி. சிறீனிவாஸ் பிரசாத் அறிவித்துள்ளார். இது குறித்து அரசு தேவையான உத்தரவுகளை துணை ஆணையர்களுக்கு பிறப்பித்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். இது, பாராட்டி வரவேற்க வேண்டிய நடவடிக்கை. ஏற்கெனவே கருநாடக அமைச்சர் ஒருவர், பேய், மூட நம்பிக்கைகளை எதிர்த்து இரவு முழுவதும் சுடுகாட்டில் படுத்துக் காட்டினார். கருநாடக அரசு ‘பகுத்தறிவு நாள்’ கடைபிடிக்கும் என்ற அறிவிப்பை முதலமைச்சர் அண்மையில் வெளியிட்டுள்ளார். அனைத்தும் பாராட்டத்தக்க நடவடிக்கைகள்.

### திருப்பயணமா? ஓட்டுப் பயணமா?

‘திருவள்ளுவர் திருப்பயணம்’ என்ற பெயரில் ‘தருண் விஜய்’ என்ற வடநாட்டு பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்கிறார். தமிழ் நாட்டில் பா.ஜ.க.ஓட்டு வங்கிக்கு திருவள்ளுவரைப் பயன்படுத்தலாம் என்ற நோக்கத்தோடு இந்தப் பயணத்துக்கு ஏற்பாடுகளை செய்தார்கள். ஆர்.எஸ்.எஸ். மற்றும் அகில இந்திய வித்யாதி பரிஷத் அமைப்புகள் இதற்கான பயணத் திட்டங்களை வகுத்தன. இதற்கான பொறுப்பு - வானதி சீனிவாசன், சடகோபன், சாம்பமூர்த்தி, பக்தவத்சலம் ஆகியோரிடம் ஒப்படைக்கப் பட்டதாம். இந்தப் பயணத்தின் நிறைவு நிகழ்ச்சி ஜன. 15 ஆம் தேதி மயிலாப்பூரில் திருவள்ளுவர் கோயிலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது தருண் விஜய், “திருவள்ளுவர் ‘வள்ளுவர்’ ஜாதியில் பிறந்தவர்” என்று கூறிக் கொண்டு, அந்த ஜாதிப் பிரிவினரை அழைத்துப் பேசினாராம். ‘பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும்’ என்று கூறிய வள்ளுவரையும் ஜாதி அடையாளத்துக்குள் திணிக்கவே இவர்கள் விரும்புகிறார்கள். தருண் விஜய் என்பவர், “சமஸ்கிருதம்தான் இந்தியாவின் இணைப்பு மொழியாக இருக்க வேண்டும்” என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேட்டுக்கு பேட்டி அளித்தவர். ஆர்.எஸ்.எஸ். ஏட்டுக்கு ஆசிரியராக இருந்தவர். கவிஞர் வைரமுத்து போன்ற கடவுள் மத எதிர்ப்பாளர்களாக தங்களை அடையாளம் காட்டிக் கொள்கிறவர்கள்கூட, தருண் விஜய்க்கு ஆதரவு காட்டுவது வியப்புக்குரியது. தமிழ் வளர்த்த ஜி.யு. போப், வீரமா முனிவர் மீதுகூட மதத்தைப் பரப்ப வந்தவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டதாக கூறி வைரமுத்து தருண் விஜய்க்காக வாதாடுகிறார். ஜி.யு. போப், வீரமா முனிவரோடு ஒப்பிடக்கூடிய அளவுக்கு ‘தருண் விஜய்’ உயர்ந்து நிற்கிறாரா? தமிழ்நாட்டுக்குள் ‘திருக்குறளை’ பரப்ப ‘தருண் விஜய்’ என்ற வடநாட்டுக்காரர் தான் வர வேண்டுமா? ‘திருக்குறள்’ கூறும் கருத்துகளில் உண்மையிலேயே தருண் விஜய்க்கு நம்பிக்கை இருந்தால் ‘மனு தர்ம’த்தை எதிர்க்க வேண்டுமே! ஒரு குலத்துக்கு ஒரு நீதி பேசும் மனுதர்மக் கூட்டம், அதற்கு நேர் எதிராக எழுதிய திருவள்ளுவரை ஏன் கையில் எடுக்கிறது? அதன் அரசியல் நோக்கம் என்ன என்பதை வைரமுத்து போன்றவர்கள் சிந்திக்க வேண்டாமா?

# இத்தாலி சர்வாதிகாரி முசோலினியுடன் ஆர்.எஸ்.எஸ். தொடர்புகள்

இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரும் முசோலினியும் ஓரணியில் நின்று நேச நாடுகளை எதிர்த்தவர்கள். இத்தாலியின் கொடூரமான சர்வாதிகாரி. அவர் தொடங்கிய பாசிஸ்ட் கட்சி, இத்தாலி முழுதும் ஆயுத முனையில் அரசு அலுவலகங்களையும் அரசு நிதியங்களையும் கைப்பற்றியது. மூன்றே ஆண்டுகளில் தன்னை எதிர்த்த 10 பேர் தலையை வெட்ட உத்தரவிட்டார். 1945இல் தனது மனைவியோடு சேர்த்து எதிரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டவர். அந்த பாசிஸ்டை ஆர்.எஸ்.எஸ். நிறுவனர்களில் ஒருவரான மூஞ்சே என்ற சித்பவன் பார்ப்பனர் நேரில் சந்தித்துப் பேசியதோடு, முசோலினி நடத்திய கொடூரமான சர்வாதிகார அமைப்பைப்போல் ஆர்.எஸ்.எஸ்சையும் உருவாக்கினார். மிகவும் இரகசியமாக சங்பரிவாரப் பார்ப்பனர்கள் காப்பாற்றி வந்த இந்த செய்தியை 'எக்னாமிக் அன்ட் பொலிட்டிக்கல் வீக்லி' இதழில் (ஜன.22, 2000) ஒரு ஆய்வாளர் ஆதாரங்களுடன் வெளிக் கொண்டு வந்தார். அந்த ஆய்வாளர் பெயர் மார்கியா கசோலாரி. 'நேரு நினைவு அலுவலகம் மற்றும் நூலக' ஆவண காப்பகத்தில் இருந்த மூஞ்சே எழுதிய நாட்குறிப்பில் இந்தத் தகவல்கள் இடம் பெற்றிருந்தன. 13 பக்கங்களில் மூஞ்சே, முசோலினியினுடைய சந்திப்புகளைப் பதிவு செய்துள்ளார். 15 ஆண்டுகளுக்கு முன் வெளி வந்த இந்த செய்தியை மீண்டும் 'பிரன்ட் லைன்' (ஜன. 23, 2015) வெளியிட்டுள்ளது.

வட்டமேசை மாநாட்டிற்குச் சென்று வந்த பி.எஸ். மூஞ்சே, 1931 பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அய்ரோப்பிய சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டார். பயணத்தின் பெரும் பகுதி இத்தாலியில் கழிந்தது. பாசிச நிறுவனங்கள் பலவற்றை அவர் நேரடியாகச் சென்று பார்த்தார். பயணத்தின் உச்சகட்டமாக முசோலினியைச் சந்தித்து உரையாடினார்.

மார்ச் 19ஆம் தேதியன்று ரோமிலிருந்த 'உடற்கல்விக்கான மத்திய இராணுவப் பள்ளி', 'உடற் பயிற்சிக்கான பாசிசக் கல்விக் கழகம்' மற்றும் 'பலில்லா', 'அவான் கார்டிஸ்டி' அமைப்புகளையும் நிறுவனங்களையும் நேரில் ஆராய்ந்த மூஞ்சே, அவை குறித்து இரு பக்கங்கள் குறிப்பு எழுதியுள்ளார். இளைஞர்களிடம் கல்வியைக் காட்டிலும் பாசிசக் கருத்தியலை ஊட்டுவதே இந்நிறுவனங்களின் நோக்கமாக இருந்தது. ஆறு வயது முதல் பதினெட்டு வயது வரையிலான சிறுவர்களைத் தேர்வு செய்து பயிற்சியளித்த இன்றைய ஆர்.எஸ்.எஸ். அமைப்பிற்கு எல்லா வகைகளிலும் முன்மாதிரியாக அவை விளங்கின என்பது மூஞ்சேயின் குறிப்புகளில் வெளிப்படுகிறது. இந்த இளைஞர்கள் வாராந்திரக் கூட்டங்களுக்குச் செல்ல வேண்டும். அப்போது உடற்பயிற்சியும் இராணுவப் பயிற்சியும் அளிக்கப்படும். 'டிரில்' களும் அணிவகுப்புகளும் நடத்தப்படும்.

பலில்லா குறித்துத் தனது குறிப்பேட்டில் வெகுவாகப் பாராட்டி எழுதியுள்ளார் மூஞ்சே. இத்தாலியை இராணுவ ரீதியில் புத்துயிர்ப்புச் செய்வதற்காக முசோலினியின் மூளையில் உதித்த கருத்து இது எனப் பாராட்டும் மூஞ்சே.

"பாசிசக் கருத்தாக்கம் மக்களிடையே ஒற்றுமை என்கிற சிந்தனையை ஏற்படுத்துகிறது. இந்துக்களை இராணுவ ரீதியில் புத்துயிர்ப்புச் செய்வதற்கு இதே போன்ற ஒரு அமைப்பு இந்தியாவில், குறிப்பாக இந்து இந்தியாவில் தேவை... இராணுவச் சீருடையில் இச் சிறுவர்களும் சிறுமியர்களும் எளிய உடற்பயிற்சிகளையும் 'டிரில்' களையும் செய்வதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன்"

- என்று குறிப்பிடுகிறார்.

அன்று மாலை மூன்று மணியளவில் வெனீஷிய அரண்மனையில் இத்தாலிய சர்வாதிகாரியை டாக்டர் மூஞ்சே சந்தித்தார். எழுந்து நின்று கைகுலுக்கி வரவேற்றார் முசோலினி. அன்றைய அரசியல் நிலைமைகள் குறித்துக் கருத்துப் பரிமாறிக் கொண்ட பின்னர்,

**மூஞ்சே:** இன்று காலையும் மதியமும் பலில்லா மற்றும் சில பாசிச அமைப்புகளைப் பார்வையிட்டேன். அவை என்னை மிகவும் கவர்ந்தன. இத்தாலியின் வளர்ச்சிக்கும் செழுமைக்கும் இவை மிக அவசியம். இந்த அமைப்புகள் குறித்தும் மேன்மை தங்கிய உங்களைப் பற்றியும் பத்திரிகைகளில் பெரும்பாலும் நல்ல செய்திகள் வருவதில்லை என்ற போதிலும் என்னைப் பொருத்த மட்டில் இவற்றில் எந்த மறுப்புக்குரிய அம்சங்களையும் நான் காணவில்லை.



**சிக்னோர் முசோலினி:** இவை குறித்த உங்களின் கருத்தென்ன?

**மூஞ்சே :** மேன்மை தங்கிய அய்யா, நான் இவற்றால் பெரிதும் கவரப்பட்டுள்ளேன். இலட்சியங்கள் மிக்க வளரும் நாடுகள் ஒவ்வொன்றிலும் இத்தகைய அமைப்புகள் அவசியம் தேவை. இராணுவத் தன்மையிலான இந்தியப் புத்துயிர்ப்புக்கு இத்தகைய அமைப்புகளின் தேவை அதிகமாக உள்ளது. இதேபோன்ற குறிக்கோள்களுடன், நானாகவே சிந்தித்து ஏற்கெனவே ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளேன். இந்தியாவிலும் இங்கிலாந்திலும் பொது மேடைகளில் வாய்ப்புக் கிடைக்கும்போது பலில்லா குறித்தும் இதரப் பாசிச அமைப்புகள் குறித்தும் புகழ்ந்து பேசுவதற்குத் தயங்க மாட்டேன். அவை வெற்றி பெற வேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன்.

**முசோலினி :** (மிகவும் மகிழ்ச்சியுடன்) நன்றி. ஆனால் உங்கள் பணி மிகவும் கடினமானது. எனினும் நீங்கள் வெற்றி பெற வேண்டும் என நானும் வாழ்த்துகின்றேன். (ஆவணக் காப்பகத்திலுள்ள மூஞ்சேயின் குறிப்பேட்டில் 1931 மார்ச் 20ஆம் தேதி எழுதப்பட்ட குறிப்புகளில் சில)

இந்தியாவிற்குத் திரும்பியவுடன், ஹெட்கேவர் முதலானோருடன் இணைந்து இந்தத் திசையில் பணியைத் தொடங்கினார் மூஞ்சே. 'மராத்தா' இதழுக்கு அளித்தப் பேட்டி ஒன்றில் இந்துச் சமூகத்தை இராணுவ ரீதியில் ஒருங்கிணைப்பதன் தேவையை வலியுறுத்தினார்.

"உண்மையில் நமது தலைவர்கள் ஜெர்மானிய இளைஞர் அமைப்பு, பலில்லா மற்றும் இத்தாலிய பாசிச அமைப்புகளைப் பின்பற்ற வேண்டும். இந்தியாவில் அறிமுகப்படுத்துவதற்கு அவை மிகவும் பொருத்தமானவை என்று நான் கருதுகின்றேன்"

என்றும் அவர் குறிப்பிட்டார். பாசிசம் குறித்துப் பொது விவாதங்கள் நடைபெறத் தொடங்கின. இவற்றில் ஹெட்கேவர் ஆர்வத்துடன் பங்கேற்றார். மூஞ்சே, ஹெட்கேவர், லாலு கோகலே ஆகிய மூவரும் இத்தாலிய/ஜெர்மானிய மாதிரிகளில் இந்துக்களுக்கான இராணுவ அமைப்பொன்றைக் கட்டுவது குறித்து ஆலோசித்தனர். 1934 ஜனவரி 31ஆம் தேதியன்று ஹெட்கேவர் தலைமையில் 'பாசிசமும் முசோலினியும்' என்கிற தலைப்பில் மாநாடொன்றை ஏற்பாடு செய்தார் இந்து மகாசபையைச் சேர்ந்த கவ்டே சாஸ்திரி. மூஞ்சே இதில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

"இந்து தர்ம சாஸ்திரங்களின் அடிப்படையில் இந்தியா முழுவதும் இந்து மதத்தைச் சீராக்க வேண்டும். அதனடிப்படையில் இந்து ஒற்றுமையைக் காட்ட வேண்டும். நமது பழைய சிவாஜி அல்லது இன்றைய முசோலினி, இட்லர் போன்ற ஓர் இந்துச் சர்வாதிகாரியின் கீழ் நமக்குச் சுயராஜ்யம் கிடைக்காத வரையில் நாம் இதைச் சாதிக்க இயலாது... இதற்கான விஞ்ஞானபூர்வமான திட்டமொன்றை உருவாக்கிப் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும்"

என்று அம்மாநாட்டில் தன் கருத்தை முன் வைத்தார் மூஞ்சே.

பின்னர் மூஞ்சே, 'மத்திய இந்து இராணுவக் கல்விக் கழகத்திற்கான பணியைத் தொடங்கினார். இந்து இளைஞர்களை இராணுவமயமாக்குவதும், 'சனாதன தர்ம'த்தை அவர்களுக்குக் கற்பிப்பதும், தனி நபர்களையும் தேசத்தையும் காப்பதற்கான விஞ்ஞானங்களையும், கலைகளையும் சொல்லித் தருவதும் கழகத்தின் குறிக்கோள்களாகச் சொல்லப்பட்டன. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இத்தாலியிலுள்ள இராணுவப் பயிற்சிப் பள்ளிகளின் மாதிரியில் இதைத் தாம் செய்வதாக மூஞ்சே வெளிப்படையாகக் குறிப்பிட்டு வந்தார்.

மூஞ்சே உருவாக்கிய 'மத்திய இந்து இராணுவக் கழகம் மற்றும் இராணுவப் பள்ளிக்கான திட்ட வரைவின்' முன்னுரையில் (1935),

"வெற்றியை நோக்கிய பெரும் இலட்சியத்துடன் மக்கள் திரளைக் கொன்று குவிக்கும் விளையாட்டிற்குத் தகுதியுடையவர்களாக நமது சிறுவர்களைத் தயாரிப்பதே பயிற்சியின் நோக்கம். எதிரிக்கு உச்சபட்ச இழப்புகளையும் மரணங்களையும் ஏற்படுத்துவதாகவும் நமது தரப்பில் ஆகக் குறைந்த மரணங்களும் இழப்புகளும் ஏற்படுவதாகவும் இந்த வெற்றி அமைய வேண்டும்"

என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

**நன்றி: அ. மார்க்ஸ் எழுதிய 'ஆட்சியில் இந்துத்துவம்' 'பிரன்ட் லைன்' மற்றும் 'எக்னாமிக் அன்ட் பொலிட்டிக்கல் வீக்லி'**



## வினாக்கள்... விடைகள்...!

+ இந்து பெண்கள் நான்கு குழந்தைகளைப் பெற வேண்டும் என்று பேசிய பா.ஜ.க. எம்.பி. சக்ஷிக்கு – அமீத்ஷா விளக்கம் கேட்டு, நடவடிக்கை. *– செய்தி*

  அப்படி பேசியது சரி தான்னு இங்கே தொலைக்காட்சி விவாதங்களிலே உட்கார்ந்து அடம் பிடித்த பேர்வழிகளுக்கும் நோட்டீசு அனுப்புங்கய்யா... இந்த கொசுத் தொல்லையை தாங்க முடியல்லே, நாராயணா!

+ நித்யானந்தா 'ஆண்மை' உள்ளவர். *– இரகசிய போலீஸ் அறிக்கை*

  அது முக்கியமில்லீங்க. அவரு 'ஆன்மிக'வாதியான்னு கண்டுபிடிக்க, ஏதாவது வழி இருக்கான்னு பாருங்க.

+ மாநில தகவல் ஆணையர் கே.எஸ். ஸ்ரீபதிக்கு முன் நாற்காலியில் அமர்ந்ததற்காக தகவல் பெற வந்த சிவ. இளங்கோ என்பவர் கைது செய்யப்பட்டார். *– செய்தி*

  புரியுது! 'பிராமணர்' முன் கைகட்டி நிற்க வேண்டிய 'சூத்திரன்' – சமமாக உட்காரக் கூடாது என்ற மிக முக்கியமான தகவலை, தகவல் அதிகாரி ஸ்ரீபதி – உலகத்துக்கு இதன் மூலம் அறியத் தந்திருக்கிறார்!

+ 'இந்து மகாசபை' எதிர்த்துப் போராடிய 'பி.கே.' படம் வசூலில் ரூ.600 கோடி சாதனை. *– செய்தி*

  'மகா சபை'க்கு 'மகா ஜனங்கள்' சொந்தக் காசை செலவு செய்து புத்தி புகட்டியிருக்கிறார்கள் போல!

+ மதுராவில் அதிகரித்து வரும் குரங்குகள் தொல்லை – கட்டுப்படுத்த பா.ஜ.க. எம்.பி. ஹேமமாலினி முயற்சி. *– செய்தி*

  'இராமன் சீடர்களை' இப்படி அவமதிப்பது அந்த 'இராமனுக்கே' அடுக்காது; 'இராமகோபாலன்' என்ன செய்யப் போறார்?

DATE OF PUBLICATION 22.01.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# தலைநகரில் – தமிழ்ப் புத்தாண்டு விழா எழுச்சி

சென்னையில் கழகத் தோழர்கள் முன்னின்று நடத்தும் தைப் புத்தாண்டு பொங்கல் விழா, 12.1.2015 அன்று இராயப்பேட்டை வி.எம். தெருவில் எழுச்சியுடன் நடைபெற்றது. அழகியலோடு அமைக்கப்பட்ட மேடையில் மாலை 6 மணியளவில் பறை இசை, கிராமிய கலை நிகழ்ச்சிகளும், தொடர்ந்து குழந்தைகள் பங்கேற்ற மாறு வேடப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகளும் நடந்தன. தொடர்ந்து புதுக்கோட்டை பூபாளம் கலைக் குழுவினர் நடத்திய நய்யாண்டி உரையாடல் நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது. ஜாதி மத வெறி சக்திகளை அம்பலப்படுத்துவதாக நிகழ்ச்சி சிறப்புடன் இருந்தது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். தமிழ்ப் புலி சாத்தப்பன், ஆனூர் சா நவாஸ், முதல் அரசு ஊழியராக நியமனம் பெற்றுள்ள திருநங்கை குணவதி ஆகியோர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றினர். கழக மாவட்ட செயலாளர் உமாபதி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். நிகழ்வுக்கு பி. சுமதி தலைமை தாங்கி, த. அனிதா முன்னிலை வகித்தார். ம. உஷா வரவேற்புரை நிகழ்த்தினார். மா. புனிதா நன்றி கூறினார். முன்னதாக ஜனவரி 4ஆம் தேதி மாணவ மாணவிகளுக்காக நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளை வழக்கறிஞர் சாரநாத் தொடங்கி வைத்தார். விழாவையொட்டி தமிழர் உணவான மாட்டுக்கறி உணவுக் கூடம் அமைக்கப்பட்டிருந்தது. குறைந்த கட்டணத்தில் விற்கப்பட்ட மாட்டுக்கறியை பொது மக்கள் விருப்பத்துடன் வாங்கி உண்டனர். மறைந்த கழக செயல் வீரர் பத்ரி நாராயணன் தொடங்கி வைத்த பொங்கல் விழாவை கழகத் தோழர்கள் தொடர்ந்து அனைத்துக் கட்சியினரையும் இணைத்து பொது மக்கள் ஆதரவுடன் 15 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்கள்.











### கோபி இராம இளங்கோ ரூ.10,000 நன்கொடை

கழக தலைமைக் குழு உறுப்பினர் கோபி இராம இளங்கோவன் – கழக வெளியீடுகளை வெளியிடுவதற்காக ரூ.10,000 நன்கொடை வழங்கியுள்ளார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)


## வெளி வந்துவிட்டது!
## ‘பெரியாருக்கு எதிரான முனை மழுங்கும் வாதங்கள்’

‘தமிழ்த் தேசிய தமிழர் கண்ணோட்டம்’ இதழில் பெரியாருக்கு எதிராக முன் வைக்கப்பட்ட வாதங்களை ஆதாரங்களோடு மறுத்து, ‘கண்டதைப் படிப்பவன்’ என்ற புனைப் பெயரில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் எழுதிய தொடர் கட்டுரைகள் நூலாக வெளி வந்துள்ளது.

விலை : ரூ.50



தொடர்புக்கு : தலைமை நிலையம், திராவிடர் விடுதலைக் கழகம், 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004. பேசி : 9941613535/ 044-24980745



(முதல் பக்கத் தொடர்ச்சி)

கிருஷ்ண குமார் - ‘மாதொரு பாகன்’ நூலுக்கு காட்டப்படும் எதிர்ப்பைக் கண்டித்துப் பேசிக் கொண்டிருந்தார். ஒரே இடத்தில் மேடையில் பேசப்படும் கருத்துக்கு உரிமை இருக்கும்போது அதே கருத்தை துண்டறிக்கையாக வழங்குவது குற்றமா? என்று காவல்துறையிடம் தோழர்கள் வாதிட்டனர். புத்தகக் கண் காட்சியை நடத்தும் நிர்வாகிகள் விரைந்து வந்து காவல் துறைக்கு ஆதரவாகவே பேசியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. வளாகத்துக்குள் இத்தகைய துண்டுப் பிரசுரங்களை வழங்கக் கூடாது என்றே அவர்களும் வாதிட்டனர்.

“எழுத்தாளர்கள் - இலக்கியவாதிகள் இல்லையேல் புத்தகக் கண்காட்சியே இல்லை; காவல்துறையின் மொழியிலேயே பதிப்பாளர்கள் பேசுவது நியாயம்தானா?” என்று தோழர்கள் தட்டிக் கேட்டனர். இந்த காட்சிகளை அங்கே இருந்த ‘டைம்ஸ் நவ்’ (Times Now) தொலைக்காட்சியாளர்கள் தொலைக்காட்சியில் நேரடியாகவே ஒளிபரப்பியதோடு விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் திருமூர்த்தி, பேராசிரியர் சரசுவதி கருத்துகளையும் கேட்டு அந்த கண்டனத்தையும் ஒளிபரப்பினார்கள். காவல்துறை பின்வாங்கிச் சென்றது. **– இரா**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 22nd January 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஜனவரி 29, 2015 | புரட்சி 14 | முழக்கம் 3 | விலை: ரூ.3.00


## பார்ப்பன மிரட்டலை சந்திக்க தமிழகம் தயாராகிறது!

# கோட்சே சிலை எதிர்ப்பு மாநாடு!




*தமிழ்நாட்டில் காலூன்ற துடிக்கும் பார்ப்பன மதவாத சக்திகளை எதிர்கொள்ள பார்ப்பனரல்லாத இயக்கங்கள், சமூக நீதி இயக்கங்கள், ஒடுக்கப்பட்டோர் அமைப்புகள் தயாராகி வருகின்றன.*

24-01-2015 சனிக்கிழமை அன்று ஈரோடு பேருந்து நிலையம் அருகில் உள்ள மல்லிகை அரங்கில் காந்தியை படுகொலை செய்த "நாதுராம் கோட்சே சிலை எதிர்ப்பு" மாநாடு நடைபெற்றது. நாட்டின் பன்முகத்தன்மையைத் தகர்த்தெறிந்து இந்துத்துவ நாடாக்கும் முயற்சியை அணிதிரண்டு முறியடிப்போம் என்ற முழக்கத்தோடு மதவெறி எதிர்ப்புக் கூட்டமைப்பு சார்பாக நடைபெற்ற இந்த மாநாடு பிற்பகல் 2-30 மணி முதல் இரவு 10-00 மணி வரை இரண்டு அமர்வுகளாக நடைபெற்றது.

முதல் அமர்விற்கு தமிழக பசுமை இயக்கம் தலைவர் டாக்டர் வெ.ஜீவானந்தம் தலைமை ஏற்றார். தமிழினப் பாதுகாப்பு இயக்கம் ஒருங்கிணைப்பாளர் கி.வே.பொன்னையன் தொடக்கவுரை ஆற்றினார். உயர் நீதிமன்ற மூத்த வழக்குரைஞர் ஆர்.காந்தி, தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சட்ட ஆலோசகர் வழக்குரைஞர் ப.பா.மோகன், சமூக நீதி வழக்குரைஞர்கள் நடுவம் ஒருங்கிணைப்பாளர் மூத்த வழக்குரைஞர் இரத்தினம், தமிழ்த்தேச நடுவம் நிலவன், திராவிடர் கழகம் பேராசிரியர் முனைவர் ப.காளிமுத்து, தமிழ்நாடு சாக்கிய அருந்ததியர் சங்கம் தலைவர் மதிவண்ணன் கிருஸ்துவ லீக் ஈரோடு தலைவர் டி.விஜயகுமார் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இரண்டாம் அமர்விற்கு மதவெறி எதிர்ப்பு கூட்டமைப்புத் தலைவர் மூத்த வழக்குரைஞர் பி.திருமலைராஜன் தலைமை ஏற்க, மக்கள் சிவில் உரிமைக் கழகம் தமிழகத் துணைத் தலைவர் கண.குறிஞ்சி தொடக்கவுரை ஆற்றினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் தா.பாண்டியன், ம.தி.மு.க துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் பெ.மணியரசன், த.பெ.தி.க பொதுச்செயலாளர் கு.இராமகிருஷ்ணன், ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா.அதியமான், த.மு.மு.க பொதுச்செயலாளர் அப்துல் சமது, எஸ்.டி.பி.ஐ பொதுச்செயலாளர் நெல்லை முபாரக், தமிழக மக்கள் முன்னணி பொதுச்செயலாளர் பொழிலன், தமிழ் மாநிலக் காங்கிரஸ் விடியல் சேகர், ஆதித்தமிழர் விடுதலை இயக்கம் சு.ப.இளங்கோவன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். ஈரோடு ப.இரத்தினசாமி நன்றி கூறினார்.

### சென்னையில்..

சென்னையில் மதவாத பாசிச பார்ப்பன சக்திகளுக்கு எதிராக கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்து ஜன.23ஆம் தேதி

(4ஆம் பக்கம்)



## தணிக்கைக் குழு காவி மயமாகிறது

திரைப்படத் தணிக்கைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பகல்ஜீ நிகலானி, பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ்.சோடு நெருக்கமான உறவு கொண்டவர். தனது அடையாளத்தை தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் அவர் 'தணிக்கைக்கு' உட்படுத்தாமல் வெளிப்படுத்தியிருக்கிறார். "நான் பா.ஜ.க.வைச் சார்ந்தவன் என்பதை பெருமையுடன் கூறுகிறேன். தேசத்தின் குரலாக நரேந்திர மோடி திகழ்கிறார். அவர்தான் எனது கதாநாயகன்" என்று கூறியுள்ள இவர்தான், நாடாளுமன்றத் தேர்தலின் போது மோடிக்காக 'ஹர் ஹர் மோடி' என்ற பிரச்சாரப் படத்தையும் தயாரித்தவர். தணிக்கைக் குழு தலைவராக இருந்த லீலா சைமன் மற்றும் குழு உறுப்பினர்கள். தணிக்கைக் குழுவில் அரசின் தலையீடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, கூண்டோடு பதவி விலகியதைத் தொடர்ந்து, தணிக்கைக் குழு இப்போது 'சங் பரிவார்' ஆட்களைக் கொண்டு நிரப்பப்பட்டிருக்கிறது. பஞ்சாபில் தன்னையே கடவுளாக அறிவித்துக் கொள்ளும் ஒரு சீக்கியக் குழுவின் தலைவரான ராம் ரகீம்சிங் தயாரித்த 'கடவுளின் தூதர்' என்ற படத்துக்கு லீலா சைமன் தலைமையிலான தணிக்கைக் குழு அனுமதி மறுத்தது. அரியானா தேர்தலில் பா.ஜ.க.வை ஆதரித்தவர் ராம் ரஹீம் சிங் என்பதால், மோடி ஆட்சியின் தகவல் துறை அமைச்சகத்தின் தலையீட்டில் மேல் முறையீட்டுக் குழு வழியாக 24 மணி நேரத்தில் தடையை நீக்கி படம் வெளியிட அனுமதித்து விட்டார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவித்துதான், தணிக்கை அதிகாரி லீலா சாம்சனும், குழு உறுப்பினர்களும் பதவி விலகினர். இந்த திரைப்படத்துக்கு பஞ்சாப் மாநில அரசு தடை விதித்து விட்டது.

மத உணர்வை புண்படுத்தக் கூடிய காட்சிகள் இடம் பெற்றுள்ளதாகவும், அறிவியலுக்கு எதிராக தன்னைத் தானே கடவுளாகக் கூறிக் கொள்ளும் ராம் ரகீம் சிங் அற்புதங்கள் செய்வதாகவும் படத்தில் காட்சிகள் வருகின்றன என்பதால் அனுமதி தரவில்லை என்று தணிக்கைக் குழு கூறுகிறது. பொதுவாக ஒரு திரைப்படத்துக்கு அனுமதி மறுப்பது ஏற்கக் கூடியது அல்ல என்றாலும் பா.ஜ.க.வினரிடம் நாம் கேட்கும் கேள்வி இதுதான். தமிழ்நாட்டில் பெருமாள் முருகன் எழுதிய 'மாதொரு பாகன்' நாவல் மத உணர்வை புண்படுத்துவதாகக் கூறி தடை போடும் இதே ஜாதி-மதவெறிகள் சக்திகள், அதே அளவுகோலை 'கடவுளின் தூதர்' படத்துக்கு பின்பற்றாதது ஏன்? மத உணர்வை புண்படுத்துவதாக தணிக்கைக் குழு தடை விதித்தப் படத்தை திரையிட அனுமதித்தது ஏன்?

# அமெரிக்காவில் மதம் மாறும் பார்ப்பனர்கள்

***தேசத்தை – மதத்தை மாற்றிக் கொண்டு அதிகாரத்தைப் பிடிக்கும் அமெரிக்கப் பார்ப்பனர்கள் பற்றி சங்பரிவாரங்கள் வாய் திறப்பதில்லையே, ஏன்?***

சங்பரிவார் பார்ப்பனர்கள் ஏழை முஸ்லிம் மக்களை ‘தாய் மதம்’ திருப்புவதாகக் கூறி ‘இந்து’ மதத்துக்கு மாற்றுகிறார்கள். அதற்கு அவர்கள் சூட்டியுள்ள பெயர் ‘கார் வாப்சி’. அமெரிக்கா போன்ற நாடுகளில் குடியேறிய பார்ப்பனர்கள், தங்களது ‘தேசத்தையே’ மாற்றிக் கொள்வது பற்றி சங்பரிவாரங்கள் வாய் திறப்பது இல்லை. அமெரிக்காவில் பார்ப்பனர்கள் ‘பச்சை அட்டை’ வாங்கிக் கொண்டு அமெரிக்க குடிமகன்களாக வாழ்வதற்குத்தான் போட்டிப் போட்டுக் கொண்டு நிற்கிறார்கள்.

இந்த பார்ப்பனர்கள், தேசத்தின் அடையாளத்தை மட்டும் மாற்றிக் கொள்வதில்லை. ‘இந்து’ மதத்துக்கு முழுக்குப் போட்டுவிட்டு, கிறிஸ்தவ மதத்துக்கு தாவுகிறார்கள். இப்படி மதம் மாறிய பார்ப்பனர்களை ஏராளமாக பட்டியலிட முடியும்.

அமெரிக்க அதிபர் ஒபாமா, இந்தியா வருவதற்கு முன்பு, ஒரு ‘பரிசை’ வழங்கியுள்ளார். என்ன தெரியுமா? இந்தியாவிலிருந்து அமெரிக்காவில் குடியேறிய ஒரு ‘அமெரிக்க இந்தியரையே’, இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக அறிவித்துள்ளார். இந்த புதிய தூதரின் பெயர் ரிசர்ட் ராகுல் வர்மா. பஞ்சாபிலிருந்து அமெரிக்காவுக்குப் போன பார்ப்பனர்தான் இந்த ராகுல் வர்மா. இவரது தந்தை பெயர் கமல் வர்மா. தாயார் பெயர் சாவித்திரி. அமெரிக்காபோன பார்ப்பனர்கள், அந்த நாட்டின் அரசியல் அமைப்புகளில் முக்கிய பதவிகளை எட்டிப் பிடிக்க துடிக்கிறார்கள். அமெரிக்க சமூகத்தில் உயர் பதவிகளைப் பெற வேண்டுமானால் கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும் என்பதால், பார்ப்பனர்கள் இந்து மதத்துக்கு முழுக்குப் போட்டு கிறிஸ்தவர்களாகி விடுகிறார்கள். அப்படி கிறிஸ்தவரானவர்தான் இந்த ராகுல் வர்மா. ஆனால், மதம் மாறியதை இவர் வெளிப்படுத்திக் கொள்வதில்லை. ஆனாலும் இவரது மனைவி, குழந்தையின் பெயர்கள், இவரது மதமாற்றத்தைக் காட்டிக் கொடுத்துவிடுகின்றன. (மனைவி பெயர் பிங்கி; குழந்தைகள் பெயர் லூசி, டய்லான்)

வர்மா மட்டுமல்ல; அமெரிக்காவில் லூசியானா மாநிலத்தின் ஆளுநராக இருக்கும் போபி ஜின்டால் கதையும் இதுதான். அமெரிக்காவின் மாநிலம் ஒன்றில் ஆளுநர் பதவிக்கு வந்த முதல் இந்தியர் இவர். இவரும் இந்தியாவிலிருந்து குடியேறிய பார்ப்பனர் குடும்பத்தைச் சார்ந்தவர்தான். அமெரிக்காவில் பள்ளிப் படிப்பு படிக்கும் போதே அரசியலில் உயர்ந்த இடத்தைப் பிடிக்க இவரது குடும்பம் குறி வைத்து செயல்பட்டது. இவர் ஆளுநராக வந்தவுடன் ‘வாஷிங்டன் போஸ்ட்’ (அக்.21, 2007) பத்திரிகை இவரது குடும்பப் பின்னணி குறித்து இவ்வாறு எழுதியது: “ஜின்டால் - ஒரு இந்து குடும்பத்தில் பிறந்து, இந்துவாகவே வாழ்ந்தவர். ஆனால், ‘பேட்டன் ரோக் மேக்னட்’ பள்ளியில் பள்ளிப் படிப்பு படிக்கும்போதே கிறிஸ்துவத்துக்கு மதம் மாறிவிட்டார். பிரவுன் பல்கலையில் முதலாம் ஆண்டு படிக்கும் போதே ரோமன் கத்தோலிக்க ‘சர்ச்’ அவருக்கு வரவேற்பு கொடுத்தது. அவரது குடும்பம் வாரந்தோறும் தவறாமல் “செயின்ட் அலோசியஸ் பாரிஷ் சர்ச்சில் பிரார்த்தனைக்கு வருவது வழக்கம்” என்று ‘வாஷிங்டன் போஸ்ட்’ எழுதி, அவரது கிறிஸ்துவ அடையாளத்தை அமெரிக்கர்களிடம் உறுதிப்படுத்தியது.

தெற்கு கரோலினா மாநிலத்தின் ஆளுநர் ‘நிக்கி ஹேலே’யின் கதையும் இதுதான். இவர் சீக்கியராக இருந்து,

## பார்ப்பனர் என்றால் சங்பரிவாரங்கள் பதுங்குவது ஏன்?

பிறகு கிறிஸ்துவ மதத்துக்கு மாறி அமெரிக்க அரசியலில் உயர்ந்த இடத்தைப் பிடித்தவர். இப்படி நீண்ட பட்டியலைப் போட முடியும்.

அமெரிக்காவில் புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்கள் மட்டுமே அதிபராக முடியும். இதற்கு விதிவிலக்காக இருந்த ஒரே அமெரிக்க அதிபர் ஜான். எப். கென்னடி மட்டுமே. இவர் ஒரு கத்தோலிக்கர்.

அரசியலில் உயர் பதவிகளைப் பெறுவதற்காக தங்களது ‘இந்து’ அடையாளத்தைத் தூக்கி எறியத் தயங்காத பார்ப்பனர்கள்தான், இந்தியாவில் ‘இந்து மதம்’, ‘இந்து தேசம்’ என்று கூச்சல் போடுகிறார்கள். மதம் மாறுவது தேச விரோதம் என்று அலறுகிறார்கள். ‘இந்து மதம்’ என்ற பெயரில் இவர்கள் முன் வைப்பது பார்ப்பன வேத மதத்தைத் தான். பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தியபோதுதான் ‘இந்து’ என்ற பெயரே வந்தது. அதற்கு முன்பு ‘இந்து’ மதமே கிடையாது. வேத மதம் - பார்ப்பன மதம் தான் இருந்தது. பிரிட்டிஷாரின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் தங்களின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ள ஏனைய மதப் பிரிவினரைவிட, மக்கள் தொகை எண்ணிக்கையை கூடுதலாக்கிக் காட்டுவதற்காகத்தான் பார்ப்பனர்கள், மதம் சாராத வெகு மக்களை ‘இந்து’ அடையாளத்துக்குள் திணித்தார்கள்.

ஏழை அப்பாவி மக்களை ‘தாய் மதம்’ திருப்பும் சங்பரிவாரங்கள், இந்தியாவின் அமெரிக்க தூதரகத்தில் தூதராக வந்து அமர்ந்திருக்கிற ராகுல் வர்மாவையும், அவரது குடும்பத்தையும் தாய் மதத்துக்கு திரும்ப வேண்டும் என்று போராடுவார்களா? உண்மையில், ‘தாய் மதத்துக்கு திரும்பும்’ சங்பரிவார் கூட்டத்துக்கு ஒபாமா தந்திருக்கிற பதிலடிதான் ‘ராகுல்வர்மா’!

அமெரிக்கா-அய்ரோப்பிய கிறிஸ்தவர்களின் முதலீட்டுக்கு கதவை திறந்து வைத்திருக்கிறார் மோடி. இதற்கு ‘மேக் இன் இந்தியா’ என்று பெயர் சூட்டியிருக்கிறார். மோடியின் இந்த திட்டத்தில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டிருப்பதும் அவர் செல்லப் பிராணிகளாக வளர்த்து வரும் சங்பரிவார் பார்ப்பனர்கள் கூட்டம்தான். இப்படி மத உரிமைகளில் குறுக்கிடும் நாடுகளில் முதலீடு செய்ய முதலீட்டாளர்கள் முன் வருவது இல்லை. அவர்களின் நோக்கம் லாபம் ஒன்று மட்டும்தான். சீனா மதவெறி நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருந்தபோது, மேற்கத்திய முதலீடு குறைந்து போனதையும், பிறகு, சீனா, தனது கொள்கையை மாற்றிக் கொண்டுவிட்டதையும் தொழில்துறை வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

பார்ப்பன மதவெறி நடவடிக்கைகளை ஒரு பக்கம் ‘தூபம்’ போட்டுக் கொண்டு மற்றொரு பக்கத்தில் நாட்டின் வளர்ச்சிப் பற்றி பேசுவது இரட்டைக் குதிரை சவாரியாகத்தான் இருக்கும். இதேபோல் தனியார் துறைகளில் உயர் பதவிகளில் குவிந்து கிடக்கும் பார்ப்பனர்கள் அங்கே சமூக நீதியை மறுத்து, ஜாதி ஆதிக்கத்தைத் திணிப்பதால் முறையான உற்பத்தி வளர்ச்சி பாதிக்கப்படுகிறது என்று சமூக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

“இந்தியாவில் உற்பத்தி மய்யங்களிலும் சந்தை விநியோகத்திலும் நிலவும் ஜாதிய செயல்பாடுகள் தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது” என்று உலக வங்கித் தலைவர் ஜிம் யோங் கிங் வெளிப்படையாகவே அறிவித்திருக்கிறார்.

வேத காலத்திலிருந்து மக்களை கூறு போட்டு வளர்ச்சியை முடக்கிப் போட்ட பார்ப்பனர்கள், இப்போது அதிகாரம் வந்துவிட்ட இறுமாப்பில் மீண்டும் வேத காலத்துக்கு திரும்ப துடிக்கிறார்கள். பார்ப்பனர் கூறும் இந்து மதம், வேத மதமே! இது தமிழர் மதமல்ல என்ற உண்மையை உரத்து முழங்குவோம்!

– **“இரா”**

## மோடி ஆட்சிக்கு உச்சநீதிமன்றம் குட்டு

பன்னாட்டு நிறுவனங்களுக்கு அரசு முறைகேடாக வழங்கிய சலுகைகள், அந் நிறுவனங்களின் வரி ஏய்ப்புகளை உச்ச நீதிமன்றம் வழியாக அம்பலப்படுத்திய அமைப்பு ‘கிரீன் பீஸ்’ என்ற தொண்டு நிறுவனம், பன்னாட்டு நிறுவனங்களை திருப்திப்படுத்தும் நோக்கத்தோடு மோடி அரசு இந்த நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் அதன் தலைமை அமைப்பு வழங்கிய ரூ.1.87 கோடியை முடக்கியது. இந்த நடவடிக்கையை எதிர்த்து, ‘கிரீன் பீஸ்’ அமைப்பு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி சக்தார், அரசின் நடவடிக்கையை இரத்து செய்தார். அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராக செயல்படுவதால் ஒரு அமைப்பின் நிதியை முடக்கிட முடியாது. இது தேச விரோத நடவடிக்கை என்றும் கூற முடியாது என்று நீதிபதி தனது தீர்ப்பில் கூறியுள்ளார். ‘கிரீன் பீஸ்’ நிறுவனத்தின் வங்கிக் கணக்கை முடக்குவதற்கான ஆவணங்கள் ஏதும் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட வில்லை. உள்துறை அமைச்சகம் முதலில் விசாரணைகளை நடத்தி, தேவைப்பட்டால் கணக்கை முடக்க வேண்டும். ஆனால், இங்கே தலைகீழாக செயல்பட்டிருக்கிறது” என்று நீதிபதி தீர்ப்பில் கூறியுள்ளார். கிரீன்பீஸ் நிறுவனத்தின் இந்திய செயல்பாட்டாளர் பிரியாபிள்ளை, கடந்த ஜனவரி 11ஆம் தேதி பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத் தில் பங்கேற்க இலண்டன் செல்ல முயன்றபோது, புதுடில்லி விமான நிலையத்தில் விமானத்திலிருந்து கீழே இறக்கி விடப்பட்டு, அதிகாரிகளால் தடுக்கப்பட்டார். மத்திய பிரதேச மாநிலம் மாகன் பகுதியில் இலண்டனில் பதிவு செய்த தொழில் நிறுவனம், சுற்றுச் சூழலைப் பாதிக்கும் ஒரு தொழிற்சாலை தொடங்குவதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். இது குறித்து இலண்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் எடுத்துரைக்கவே அவர் பயணம் மேற்கொண்டார். இப்படி விமானத்திலிருந்து இறக்கிவிடப்பட்ட அடுத்த நாள் தான் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வெளி வந்தது. பன்னாட்டு நிறுவனங்களுக்காக, மோடி ஆட்சி மேற்கொண்ட இந்த நடவடிக்கை, நீதிமன்றத்தால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது, ஆட்சிக்கு மிகப் பெரும் பின்னடைவாகும்.

## காந்தி சிலையை அவமதித்த காவிக் கும்பல்

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் நகராட்சி சார்பில் அமைக்கப்பட்டிருக்கும் காந்தி சிலைக்கு, காவிக் கும்பல் காவித் துண்டு மற்றும் ருத்ராட்ச மாலை அணிவித்து அவமதித்திருக்கிறது. 1970ஆம் ஆண்டு வைக்கப்பட்ட சிலை இது. செய்தியறிந்து, கழக மாவட்ட செயலாளர் காளிதாசு, தி.மு.க. நகர அவைத் தலைவர் முருகையன், திராவிடர் கழகத்தைச் சார்ந்த சந்திரபோஸ், த.மு.மு.க.வைச் சார்ந்த நிசார் அகமது உள்ளிட்டோர், காவல்துறையினரிடம் நடவடிக்கை எடுக்கக் கோரி வலியுறுத்தினர். காங்கிரஸ் கட்சியினர், பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதேபோல் கடந்த டிசம்பர் 18ஆம் தேதி பெரியார் சிலைக்கு காவிக் கும்பல் எலுமிச்சம் பழ மாலை போட்டு அவமதித்தது. 40 நாட்கள் ஆகியும் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை. தொடரும் காவிக் கும்பலின் அட்ட காசத்தைக் கண்டித்து ஜன.30ஆம் தேதி மன்னையில் கண்டனக் கூட்டம் நடைபெறவிருக்கிறது என்று காளிதாசு அறிவித்துள்ளார்.

## உறுதிப்படுத்துகிறார், கோபால் கோட்சே

# கோட்சே ஆர்.எஸ்.எஸ்.காரரர் தான்!

*காந்தியை கொலை செய்த நாதுராம் கோட்சே, ஆர்.எஸ்.எஸ்.காரர்தான் என்று உறுதி செய்து, காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று விடுதலையான கோட்சேயின் சகோதரரான கோபால் கோட்சே அளித்த பேட்டி இது. 1994இல் 'பிரண்ட் லைன்' பத்திரிகையில் வெளி வந்தது இந்த பேட்டி.*

**நீங்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை சார்ந்தவரா?**

நாங்கள் சகோதரர்கள் அனைவரும் ஆர்.எஸ்.எஸ். சில்இருந்தவர்கள்தாம். நாதுராம் (கோட்சே) பட்டாரிய்யா, நான், கோவிந்த் ஆகிய நாங்கள் அனைவரும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சார்ந்த வர்களே. நாங்கள் எங்கள் வீடுகளில் வளர்ந்ததைவிட ஆர்.எஸ்.எஸ்.சில்தான் அதிகமாக வளர்ந்தோம்.

**நாதுராம் (கோட்சே) ஆர்.எஸ்.எஸ்.சில் இருந் தாரா? அவர் ஆர்.எஸ்.எஸ்.சை விட்டு விலகிட வில்லையா?**

நாதுராம் ஆர்.எஸ்.எஸ்.இல் (காரியவாஹ்) செயலாளராக இருந்தான். அவன் காந்தி கொலை வழக்கில் கொடுத்த வாக்குமூலத்தில்தான் ஆர்.எஸ்.எஸ்.சிலிருந்து விலகி விட்டதாகக் குறிப்பிடுகின்றார். அவர் அப்படி சொன்னதற்கு காரணம் ஆர்.எஸ்.எஸ்.சின் அப்போதைய தலைவர் கோல்வால்கரும், ஆர்.எஸ்.எஸ்.சும், காந்திஜியின் கொலைக்குப் பின் பயங்கர கெடுபிடிகளுக்கு உள்ளானதுதான். ஆனால், நாதுராம் கோட்சே ஆர்.எஸ்.எஸ்.சை விட்டு வெளியேறவில்லை.

**அண்மையில் அத்வானி, கோட்சேவுக்கும் ஆர்.எஸ்.எஸ்.விற்கும் சம்பந்தமில்லை என்று கூறி இருக்கின்றாரே?**

நான் அவருக்குப் பதில் சொல்லி இருக்கிறேன், மறுத்திருக்கிறேன். ஆர்.எஸ்.எஸ். அத்வானி சொல்வது கோழைத்தனம் எனக் கூறி இருக்கிறேன். நீங்கள் ஒன்றை வேண்டுமானால் சொல்லலாம். "நீ போய் காந்திஜியை கொலை செய்" என்று ஆர்.எஸ்.எஸ். கூறிடவில்லை. ஆனால், அவரை



கோபால் கோட்சே

(கோட்சேயை) கைவிடுவது சரியல்ல. இந்து மகாசபை அவரைக் கைவிடவில்லை. 1944ஆம் ஆண்டு முதல் இந்து மகா சபைக்காகப் பணி செய்யத் தொடங்கினான். அதே நேரத்தில் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்திலும் பணி செய்யத் தொடங்கினான். ஆர்.எஸ்.எஸ்.இல் காரியவாஹ் என்ற அறிவுத்துறை செயலாளராகவும் இருந்தான்.

**காந்திஜியைக் கொலை செய்யும் திட்டம் எப்போது தீட்டப்பட்டது?**

நாதுராம் 'இந்துராஷ்டிரா' என்ற பத்திரிகையின் ஆசிரியர். பத்திரிகையின் ஆசிரியர் என்பதால் அவனுக்கோர் டெலிபிரிண்டர் இருந்தது. அதில் அவனுக்கு ஒரு செய்தி வந்தது. அந்த செய்தி காந்திஜி அடுத்த நாள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக கூறியது.

(காந்திஜி பாகிஸ்தானுக்கு 55 கோடி ரூபாயை இந்திய அரசு தந்திட வேண்டும் என்பதற்காகவே அன்று உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்தார். இந்தப் பணம் பாகிஸ்தானுக்கு இந்திய அரசு தருவதாக உறுதியளித்தப் பணம். ஆனால், காஷ்மீர் பிரச்சினை தீரும் வரை அந்தப் பணத்தை பாகிஸ்தானுக்கு தருவதில்லை என இந்திய அரசு முடிவு செய்திருந்தது)

காந்திஜிக்கு முற்றுப்புள்ளி வைத்திட வேண்டியதுதான் என்ற எண்ணம் நாதுராமுக்கு தோன்றியது. அதுதான் திருப்புமுனை.

ஆனால், அதற்கு முன்னால் பல சூழ்நிலைகளில் காந்திஜியைக் கொலை செய்ய வேண்டும் என நாதுராம் எண்ணி இருக்கலாம். அகதிகள் முகாமில் அப்படியொரு எண்ணம் தோன்றியிருக்கலாம். காந்தி தான் நமக்கு இந்த அவலங்களைக் கொண்டு வந்தவர். அதனால், அவரை ஏன் கொலை செய்யக் கூடாது? என்ற சிந்தனைகள் பலமுறை தோன்றி இருந்தது.

மேகங்கள் சூல் கொண்டு ஒரு திசையில் ஒதுங்குகின்றன. இதனால், அடுத்த 15 நிமிடத்துக்குள் மழை பொழியும் என நாம் நினைக்கிறோம். அந்த மழையும் பெருமழையாய் அமையும் எனக் கருதுகிறோம். ஆனால், நடப்பவை வேறாக இருக்கின்றன. பெருங்காற்று வீசுகின்றது. எந்தத் திசையிலிருந்து என்பது நமக்குத் தெரியவில்லை. அத்தனை மேகத்தையும் அழைத்துச் சென்று விடுகின்றது.

அந்த மழைக்கு என்ன தேவைப்பட்டது? ஒரு குறிப்பிட்ட சீதோஷ்ண நிலை. ஒரு குறிப்பிட்ட அளவு உஷ்ணம். இவை அந்த மேகங்களோடு இருந்திட வேண்டும். அப்போதுதான் அந்த மேகக் கூட்டம் மழையைப் பொழியும்.

ஆகவே சதிக்கு மேல் சதிகள் என சதிகள் நடத்திருக்கலாம். கலைந்து சென்றிருக்கலாம். ஆனால், எல்லா சூழ்நிலைகளும் சரியாக இருந்தால் அந்தச் சதிகள் பலனளிக்கலாம். சதிகாரர்களைப் பொறுத்தவரை சதியை நிறைவேற்றிட முடிந்தது. இலக்கை அடைய முடிந்தது.

**சாவர்க்கருக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்பு என்ன?**

இப்படியொரு கேள்விக்கே இடமில்லை. நாங்கள் அனைவரும் அவரது சீடர்கள் அவரை எங்களுடைய 'குரு'வாக மதித்து நடந்தோம். நாங்கள் அவருடைய எழுத்துக்களை படிப்போம். சாவர்க்கரை முழுமையாகப் புரிந்து கொண்டோம், எனவே இதனை செய்ய வேண்டும் என்று அவரிடம் அனுமதி கேட்பது மடத்தனமாகும்.

**ஆதாரம்: 'ஃப்ரண்ட்லைன்', ஜனவரி 28, 1994**

## வினாக்கள்... விடைகள்...!

+ *பாபா ராம்தேவ், பாபா ரவிசங்கர் – மோடி அரசின் பத்மபூஷன் விருதுகளை ஏற்க மறுப்பு.* **– செய்தி**

  அதுக்காக, மனசு உடைஞ்சுடாதீங்க. நித்யானந்தா, ஜெயேந்திரரை கேட்டுப் பாருங்க. அவுங்க மறுக்க மாட்டாங்க.

+ *காந்தியின் கொள்கைகள் இந்தியாவில் இன்னும் உயிரோட்டத்துடன் உள்ளது.* **– காந்தி சமாதியில் ஒபாமா**

  இது எங்களுக்கே தெரியல்லீங்களே... ஒரு வேளை அமெரிக்க புலனாய்வுத் துறை கண்டுபிடிச்சு சொல்லியிருக்கும்போல!

+ *நானும் என் கணவரும் இலண்டனில் படித்தோம். எனது மகளை அமெரிக்கா வில் படிக்க வைக்கப் போகிறேன்.* **– தொழில் துறை அமைச்சர் நிர்மலா**

  ஆக, 'மேக் இன் இந்தியா' திட்டத்தை தீவிரமா செயல்படுத்த தொடங்கிட்டீங்க...

+ *ஓசூரில் விசுவ இந்து பரிஷத் மாநாட்டுக்கு காஞ்சி ஜெயேந்திரன் தலைமை தாங்கினார்.* **– செய்தி**

  சரியான தேர்வு. சிறையிலிருந்து தனது 'பூத உடலை' விடுதலை செய்து கொண்டவர்; 'ஆன்ம' விடுதலைக்கு வழி காட்ட மாட்டாரா, என்ன?

+ *திருமணமாகாத நூறுக்கும் மேற்பட்ட எரிக்கப்படாத இளம் பெண்கள் சடலம் கங்கையில் மிதந்தது. உ.பி. அரசிடம் மத்திய அரசு விளக்கம் கேட்கிறது.* **– செய்தி**

  கங்கையை தூய்மைப்படுத்த வேண்டுமானால், முதலில் கங்கையில் வீசும் சடலம் 'மோட்சம்' போகும் என்ற 'அழுக்கு' சிந்தனையை தூய்மைப்படுத்தியாகனுங்க!

+ *ஓட்டுக்குப் பணம் கொடுப்பதில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது: பணி ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையர் சம்பத் பேட்டி.* **– செய்தி**

  இந்த உண்மையை சொல்வதற்கு, பணி ஓய்வு பெறும் வரை காத்திருந்தீங்களா, அய்யா?

## 'புரட்சிப் பெரியார் முழக்கம்': கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்!

'புரட்சிப் பெரியார் முழக்கம்' உறுப்பினர் சேர்ப்பு – புத்தகங்களை நேரில் பெற்றுக் கொள்ள – சந்தா சேர்ப்பு இயக்கப் பொறுப்பாளர் ஈரோடு இரத்தினசாமி, தலைமைக் குழு உறுப்பினர்கள் திருப்பூர் துரைசாமி, பால். பிரபாகரன் மற்றும் ஈரோடு சிவக்குமார் ஆகியோர் கீழ்க்கண்டவாறு பயணம் வருகிறார்கள். தோழர்கள் சந்தா புத்தகங்களை கணக்கு முடித்து ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள்.

8.2.2015 அன்று மாலை 3 மணி அளவில் ஈரோடு ஹோட்டல் ரீஜென்சியில் தர்மபுரி, சேலம் கிழக்கு, சேலம் றேகு, கரூர், ஈரோடு (வடக்கு), ஈரோடு (தெற்கு), திருப்பூர், கோவை புறநகர், கோவை மாநகர் மாவட்டங்களின் பொறுப்பாளர்கள் நேரில் வந்து சந்தா முகவரிகளோடு, கணக்கு முடிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பிற மாவட்டங்களில் குழுவினர் பயண விவரம்:

12.2.2015 – காலை 10 மணி – திருச்சி

12.2.2015 – மாலை 5 மணி – தஞ்சை, மன்னார்குடி

13.2.2015 – காலை 10 மணி – மயிலாடுதுறை

14.2.2015 – காலை 10 மணி – விழுப்புரம், ஆத்தூர்


17, 18..2.2015 – திண்டுக்கல், மதுரை, தென் மண்டலங்க

20.2.2015 – சென்னை மற்றும் புறநகர் மாவட்டங்கள்

**– ஈரோடு இரத்தினசாமி, பொறுப்பாளர், சந்தா சேர்ப்பு இயக்கம்**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

DATE OF PUBLICATION 29.01.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776


வெளி வந்துவிட்டது!

“காந்தியை சாய்த்த கோட்சேயின் குண்டுகள்!”

பின்னணி தகவல்கள்
வரலாற்று உண்மைகள்
நீதிமன்ற விசாரணைகள்

வெளியீடு: திராவிடர் விடுதலைக் கழகம்
பேசி : 9941613535/ 9444025408
விலை : ரூ.20


## ஈரோட்டில் நூல்கள் அறிமுக விழா

‘சமர்க்கள நாயகன்’ பிரிகேடியர் பால்ராஜ், ஏ.ஜி. கஸ்தூரி ரங்கனின் ‘நினைவு களும், நிகழ்வுகளும்’ மற்றும் ‘பெரியாருக்கு எதிரான முனை மழுங்கும் வாதங்கள்’ நூல்கள் அறிமுக விழா

இடம்: ஹோட்டல் ரீஜென்சி, ஈரோடு நாள் : 8.2.2015 ஞாயிறு மாலை 4 மணி

கலந்து கொள்வோர் : தோழர் கொளத்தூர் மணி, எழுத்தாளர் வே.மதிமாறன், எழுத்தாளர் பசு. கௌதமன்

தொடர்புக்கு : **இரத்தினசாமி** (9842712444)
**சிவக்குமார்** (96888 56151)

**ஏற்பாடு : திராவிடர் விடுதலைக் கழகம், ஈரோடு**


வெளி வந்துவிட்டது!

‘பெரியாருக்கு எதிரான முனை மழுங்கும் வாதங்கள்’

வெளியீடு:
திராவிடர் விடுதலைக் கழகம்
பேசி : 9941613535/ 9444025408
விலை : ரூ.50





(முதல் பக்கத் தொடர்ச்சி)

மாலை 6 மணிக்கு ஆலோசனைக் கூட்டம் தியாகராயர் நகர், வெனின்சுலா விடுதி அரங்கில் நடைபெற்றது. விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவன், எஸ்.டி.பி.அய். கட்சித் தலைவர் கே.கே.எஸ்.எம். தெகலான் பாகவி ஆகியோர் - இந்த ஆலோசனை கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர். கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைமைக் குழு உறுப்பினர் தபசி. குமரன் கலந்து கொண்டனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர். நல்லக்கண்ணு, சமூக நீதி பேரவைத் தலைவர் பேராயர் எஸ்ரா. சற்குணம், தமிழ் மாநில காங்கிரஸ் செயலாளர் பீட்டர் அல்போன்ஸ், ம.தி.மு.க. சார்பில் மல்லை சத்யா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் குணசேகரன், தமிழர் வாழ்வுரிமை கட்சி சார்பில் கொற்றவை மூர்த்தி, மக்கள் விடுதலை கட்சி சார்பில் மீ.த. பாண்டியன், இளந்தமிழர் இயக்கம் சார்பில் செந்தில், பூவுலகின் நண்பர்கள் சார்பில் நெடுஞ்செழியன், மே 17 இயக்கம் சார்பில் திருமுருகன், தியாகு மற்றும் பாப்புலர் பிரன்ட், மில்லி கவுன்சில் உள்ளிட்ட பல்வேறு முஸ்லிம் அமைப்பின் பிரதிநிதிகள், கிறிஸ்துவ அமைப்பினர் என 30க்கும் மேற்பட்ட அமைப்புகளைச் சார்ந்த 150 பேர் பங்கேற்றனர். ஒவ்வொரு அமைப்பு சார்பில் கருத்துகள் முன் வைக்கப்பட்டன. பார்ப்பன எதிர்ப்பு - பெரியார் - அம்பேத்கர் சிந்தனைகளை முன்னெடுக்க வேண்டும் என்று பலரும் வற்புறுத்தினர்.

பெரியார் முன் வைத்த பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் முரண்பாடுகளை மீண்டும் மக்கள் மன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே பெரும்பாலோர் கருத்தாக இருந்தது. பார்ப்பன மதவாத சக்திகளை எதிர்கொள்வதற்கான பரப்புரை அணுகுமுறைகள் குறித்தும் பரப்புரைத் திட்டங்கள் குறித்தும் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன் வைத்த கருத்துகளை பலரும் வரவேற்று வலியுறுத்தினர். முதல் கட்டமாக பிப்ரவரி இறுதி வாரத்தில் சென்னையில் மதவாத பாசிச எதிர்ப்புக் கருத்தரங்கம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

# சென்னிமலையில் புத்தாண்டு கொண்டாட்டம்




சென்னிமலை ஒன்றிய கழக சார்பில், தமிழர் திருநாள் கொண்டாட்டங்கள் சென்னிமலை திருவள்ளுவர் நகர் பகுதியில் 16.01.2015 வெள்ளி அன்று நடந்தது. நிகழ்வில் குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள், மேலப்பாளையம் மூர்த்தியின் முத்தமிழ் சிலம்பாட்டக் குழுவினரின் சிலம்பாட்டம், கராத்தே, வெப்பிலிவேலு குழுவினரின் பறையாட்டம், கபடி, சத்தியமூர்த்தியின் நெருப்பு விளையாட்டு போன்ற நிகழ்வுகள் காலை முதல் நடந்தன. முன்னதாக சென்னிமலை பேருந்து நிலையத்திலுள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

மாலையில் பரிசளிப்பு விழா மற்றும் குழந்தைகளின் பேச்சுப் போட்டிகள் நடந்தன.. திராவிடர் விடுதலைக் கழக மாவட்டத் தலைவர் செல்லப்பன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட அமைப்பாளர் சென்னிமலை செல்வராசு நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார். மரப்பாலம் சத்தியமூர்த்தி, தமிழ்நாடு அறிவியல் மன்ற மாநிலத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, பொள்ளாச்சி விஜயராகவன், ஆசிரியர் சிவக்குமார், திராவிடர் விடுதலைக் கழக மாநில தலைமை செயற்குழு உறுப்பினர் ரத்தினசாமி ஆகியோர் பொங்கல் விழா பற்றியும், பெரியாரின் பார்வையில் பொங்கல் விழா பற்றியும் உரையாற்றினர்,

போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் இராவணன், ரவிக்குமார், பட்டுக்கோட்டை கோபிநாத் மற்றும் குடும்பத்தார், வெப்பிலிவேலு, ரங்கம்பாளையம் விஜி, கிருஷ்ணன், பிரபு, சசிக்குமார், நாம் தமிழர் இயக்கத் தோழர்கள் தேவராசு, ரமேசு, ரகுபதி, திருவள்ளுவர் மன்றம் ரூபி சண்முகம், தமிழ் மண் பத்திரிக்கை ஆசிரியர் முத்துராசு, கிராம நிர்வாக அலுவலர் செந்தில்குமார், வருவாய் ஆய்வாளர் முத்துமாரி, ஆசிரியர் திருநாவுக்கரசு, அண்ணா பல்கலைக் கழக மாணவர் வெப்பிலி சந்திர சேகர் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர். இறுதியில் செல்வ ராசு நன்றி கூறினார். நிகழ்வுகளில் கலந்து கொண்ட பங்கேற்பாளர்களுக்கான உணவுத் தயாரிப்பை நாடார் மேடு மோகன் சிறப்பாக செய்திருந்தார். நிகழ்வுக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செல்வராசு குடும்பத்தார் இசைக்கதிர், இனியவன், கார்மேகம், மற்றும் பழனியம்மாள் ஆகியோர் செய்திருந்தனர்.

ஆரிய பார்ப்பன பண்பாட்டுக்கெதிரான தமிழ்ப் புத்தாண்டு கொண்டாட்டம் மிக சிறப்பான முறையில் கழகத் தோழர்களால் சித்தோட்டில் கொண்டாடப் பட்டது. இரவு 12 மணியளவில் தோழர்களும் பொது மக்களும் இணைந்து கேக் வெட்டி அனைவரும் பரிமாறிக் கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடு திராவிடர் விடுதலைக் கழகம், தமிழ்நாடு மாணவர் கழகம்.



## புலவர் கி.த.ப. நன்கொடை

80ஆவது அகவையிலும் மொழி, இன உரிமை களுக்காக தொடர்ந்து இயங்கி வரும் புலவர் கி.த. பச்சையப்பன் அவர்கள், கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கினார். கி.த.ப. அவர்களின் தொண்டு தொடர ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வாழ்த்துகிறது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 29th January 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN